declares his unworthiness to have such a minister, and offers resign to him the kingdom. The sage however has but one wish, and that is, to return to Perun-Turrai there to dwell at the feet of the God. His request is granted, and the king returns to his palace, while the sage, now released for ever from the entanglement of worldly affairs, finally puts off his courtier's dress, and assumes the garb of an ascetic. His conversion and consequent trials are over, and he enters upon the new life. From that day it was his one work to glorify his Master. He loses no time in returning to fall at his *Guru's* feet, and pour out all his soul in the Sacred Presence.

After some time the God announces to His disciples that as His design in coming to earth, namely the conversion and confirmation of the sage is accomplished, He will now return to Kailasa. To the 999 devotees who are His attendant hosts He gives the charge to remain in the grove with Manikka Vacagar, worshipping and meditating until in the sacred tank fire appears, into which they are to cast themselves, and so pass home to their Master. They must patiently wait. And for the neophyte himself, a further trial is enjoined. He is to remain behind, even after all his companions have gone home, that he may establish throughout the whole Tamil country the faith of Civa, and compose Tamil hymns which shall be the *Vedas* of the South. The day of the ascension comes, and the Master departs, but halts under a Kondrai [1] tree, whither the sage follows him,

1. A large and beautiful tree of the *Cassia fistula* genus. It has very magnificent golden flowers. (See Ainslie I., 60)

still begging that he may at once accompany Him.and be for ever at His side on the Silver Mount. "Nay," replies the God, "Learn rather to know that I am everywhere. While thou art doing My will, I am with thee. Wait patiently. In Uttara Koca-mangai, thou shalt be taught the mystery of the eight mystic powers.[1] From thence thou shalt go from shrine to shrine, till in Cithambaram thou shalt discomfit the Buddhists, and then obtain thy consummation." At length the God disappears, and Manikka Vacagar returns alone to the other devotees. Under the tree they set up a *lingam*, and worship night and day. It was then and there that the Saint began his poetical compositions.[2] Twenty-one ot the fifty-two lyrical compositions he has left are marked as composed in Perun-Turrai. They are all full of the glories of Civa, the grace that found out and converted the sinner, and the grief he feels at his enforced absence from his Master.[3] This last grief is intensified by the speedy departure of his companions. One day as they are worshipping, a mystic flame blazes up in the centre of the tank, as Civa had announced beforehand, and they, casting them-selves into it, disappear.

And now the sage alone sits under the Konrrai tree from whence Civa had ascended, and utters his lamentations. The marvellous poem, "The Sacred Century of Verse," (numbered five in the collection,) was then composed. It contains some of his finest verses. There then begins a new phase of his life. He passes from

1. The *Siddhi* or supernal powers. (See the sixth song)

2. NOTE IX, "Tiru-vacagam."

3. See especially Lyric VI, "Forsaken"7.

town to town, worshipping at each shrine and composing verses which are headed according to the place of their composition. The places he visited were however very few in comparison of those said to have been hallowed by the presence of Sambandhar and the other saints of the following cycle.

The fifth canto brings the sage to the scene of his greatest achievements and of his consummation, Cithambaram. It will be remarked that he goes back to Madura and the Pandian kingdom no more. He is especially the saint of Cithambaram and the Cozha kingdom. The remainder of his history is a continued glorification of the great northern shrine. Many of the hymns that he composed in reference to the God as manifested in Tillai are exceedingly beautiful.[1] The note of sadness is almost absent, while the rapture of constant worship in the court (Ambaram), where Civan's dancing form is seen, fills him with rapture,''[2]

6. The Buddhists, and His Consummation.

After a while it seems that a restless fit seized him and he passed over to Ceylon, between which and the South of India there was much intercourse. The story represents him as able to converse with the people. It would seem therefore that it was the north of Ceylon to which he went. He is in the garb of an ascetic of the severest order. Almost naked, with his rosary of *Eleocarpus* beads, his body smeared with white ashes, a staff with little bells in one hand and a skull in the

---

3. See NOTE VI, "Cithambaram"
4. See NOTE VII, "Bhakti."

other, he wanders about living upon alms, and whether he stands or sits or lies down is always praising the Golden Porch (Cithambaram).

The Buddhists carry the tidings to the king, who sends for him. At first he refuses to go saying "What have I, a mendicant, to do. with kings?" At length, however, he stands before the king, and is confronted with the Buddhist *guru*, who is armed with the three *Pidakas* of his law, and is as accomplished an ascetic as the Caivite himself. "What is this Golden Porch?" they ask. "The sacred shrine where Civa dances and where the Cozha king ever worships." It may be mentioned here that the curious legends of Cithambaram are summed up in the "Koyil Purannam'., of Umapathi. (NOTE VI.) The result is that the Buddhist *guru* in insulting language announces his intention to visit the vaunted shrine, and tear the god from his throne.

The scene changes somewhat abruptly to *Tillai* or *Cithamba'am.* The Buddhist *guru*, with his company of devotees, has come to Cithambaram and encamped within the temple enclosure. The king of Izham (Ceylon) with his court has also arrived, and with him a daughter who is dumb. The kings exchange courtesies, the king of Ceylon bringing tribute to the Cozha king as his feudal lord.

7. The Sage and the Ceylon Buddhists.

It would almost seem as if there were in this legend a reminiscence of some great expedition of the king of Ceylon with the double intention of conquer:ng the country and establishing Buddhism on the continenr.

The arrival of these strangers threw all Cithambaram into confusion. The 3,006 devotees of the temple wished to expel the intruders by violence, but the God himself appears to them in a dream, and orders them to send for Manikka-Vacagar, who in his hermitage near at hand was plunged in mystic meditation. Thus bidden by the God he comes forth, and a vast assemblage is convened. The Cozha king, his courtiers and the Caiva saint are on the one side, while the king of Ceylon, his attendants, and the Buddhist saint are on the other. The Sage on a lofty seat is enthroned as the champion of the Caiva faith. Brahma and all the gods and immortals of every rank form the audience. The Cozha king addresses the Sage, bowing with lowly reverence, in the following words: "O holy one, to establish the Caiva wisdom over all the world is your province: to exterminate these Buddhists is mine." We shall not go into the details of the disputation, reserving its fuller translation for another place. (NOTE VIII.) The whole turns at length upon the argument which the Caivite urges with great force, that according to the Buddhist system there can be "neither God nor soul nor salvation." At the close of the discussion, the Saint makes his appeal to *Sarasvati*, the goddess of speech: "How canst thou who dwellest on the tongue of Brahma allow these men by use of speech to revile the Eternal?"

She acknowledges the appeal by striking the heretics dumb. The Ceylon king, convinced by the arguments, and overwhelmed by the miracle, confesses himself a convert, and prays that his dumb daughter may have the gift of speech restored to her. The

prayer is heard, and she, her tongue being loosened, begins at once to refute the absurdities of the Buddhist *gurus*. The substance of her words is supposed to be given in the twelfth (or Caral) song. Finally all the Buddhists put off the insignia of their religion, besmear themselves with the sacred ashes, and take up their abode in the precincts of sacred Tillai; thus the victory is complete.

No mention is made of the use of any violent measures. [1]

8. His Beatification.

The last canto relates the final beatification of the saint. After his triumph over the heretics he is supposed to have sung four of his most beautiful songs, in which the note of jubilation is very perceptible [xlvi, xlix l, li]. At length one day a venerable devotee, ostensibly a stranger from the Pandian land, presented himself to the saint with the request to be permitted to take down his songs from his own mouth. The saint sang them all, while the stranger carefully noted down every word, and having done so disappeared. It was Civa himself,—Cokka-Nayagar—who had quitted his shrine in Madura for the purpose. Straightaway the god goes up to his silver mountain Kailasam, and, assembling all the gods around him, makes them glad with Manikka-Vacagar's verse. Next morning, on the pedestal of the image in Tillai, is found the copy made by the god's own hand, and attested by his signature,—a thousand verses without a

1. A fuller account of this disputation is given in NOTE VIII.

flaw. The devotees of the temple take up the book with astonishment and reverence,and sing over the songs to the enraptured multitudes. They then in a body go the sage and ask him to give them an authoritative exposition of the meaning of the whole. In answer he bids them follow him, and proceeding to the Golden Court points to the image of the god, adding "the lord of the assembly himself (Sabhapati) is the meaning"; and then disappeared, melting into the image of his master. The devotees return to their resting places with joy and thanksgiving.[1]

These poems, of which it is hoped that the translation may be printed, are sung throughout the whole Tamil country with tears of rapture, and committed to memory in every temple by the people, amongst whom it is a traditional saying, that "he whose heart is not melted by *Tiru-Vacagam* must have a stone for a heart." It is probable that a portion of these poems is of later date. It is scarcely possible to determine what sands of truth have been brought down in these traditions, and it is very hard indeed to say how much of their undoubted beauty and symbolic truth is due to influences (historically quite probable) from Western sources; but it is impossible to read the poems without feeling that the sage of Tiru-Vathavur was a sincere seeker after God, whom in ways that he then knew not of he has since been permitted to know and worship.

---

1. Comp. I, 93, & c.
"...Adoring ever, THEE they name,
Whom words declare not; then BENEATH THY SACRED FEET
THEY LEARN THE MEANING OF THEIR SONG..."

The success of *Manikka-Vacagar* in reviving Caivism, which seems to have been then almost extinct, was immediate, and we may say permanent; for, although there was a period of declension when the Jain and Buddhist systems again became very prevalent, there arose another set of devotees who must be looked upon as his disciples, though, curiously enough, scarcely any reference to him is found in their writings. From his time dates the foundation of that vast multitude of Caiva shrines that constitute a peculiar feature of the Tamil country.

In considering the causes of his success, I feel inclined to set aside all stories of persecution carried on at his instigation. These belong, it appears to me, to a later period. His own personal devotion and fervour of spirit made him an altogether irresistible apostle of his faith. I see no evidence of anything like it in the after-times. He went about testifying that he had seen Civa in *Perun-Turrai* and that he had then and there passed from darkness to light. He thus declared to all what he fully believed himself to have seen and handled. He was an enthusiast, but absolutely sincere. The doctrines that he taught will abundantly appear from an attentive consideration of his disputes with the Buddhist *gurus*. He taught the people that there was one supreme personal God, no mere metaphysical abstraction, but the Lord of Gods and men. He also taught that it was the gracious will of Civa to assume humanity, to come to earth as a *guru*, and to make disciples of those who sought him with adequate preparation. He announced that this way of salvation was open to all classes of the commu-

nity. He also taught very emphatically the immortality of the released soul—its conscious immortality—as he said that the virtual death of the soul which Buddhism teaches is not its release. It will be seen how very near in some not unimportant respects the Caiva system approximates to Christianity: and yet in some of the corruptions to which it has led, by what almost seems a necessity, are amongst the most deplorable superstitions anywhere to be found. Here the truth of the old maxim is abundantly verified, "Corruptio optimi pessima."

Again the Caivites led the way in the propagation of their system by means of popular songs. Anyone who compares the fervid piety of his very beautiful and generally very simple lyrics will feel with what force how they must have struck the chord that vibrated then as it vibrates still in millions of hearts. "One touch of nature makes the whole world kin," and no one can read the Sage's verses without profound emotion. Scarcely ever has the longing of the human soul for purity and peace and divine fellowship found worthier expression.

And somehow the error and folly and idolatry seemed to be but the poetic accompaniments of what is mainly most worthy.

The Jain compositions were clever, pointed, elegant, full of satire, of worldly wisdom, epigrammatic, but not religious. In the *Naladiyar's* four hundred quatrains, there is no mention of God. In the sublime *Kurral's* thirteen hundred and thirty couplets there are but ten which speak of a Divine

Being. The effect therefore of these songs—full of faith and devotion—was great and instantaneous. South India needed a personal God, an assurance of immortality, and a call to prayer. These it found in Manikka-Vacagar's compositions. [1]

The CHAIRMAN (D. HOWARD, Esq., D.L.)—I am sure we shall all join in thanking Dr. Pope for the very valuable and interesting paper he has given us.

It is a little perilous for any one who has not given the time and accurate study that Dr. Pope has to this subject to venture to say much about it, but the interest extends far beyond the power of criticising. I cannot help thinking that such investigations as these are of great value. One point struck me as being of importance; we discuss rather frequently, with more or less knowledge of what the Buddhist system is, the meaning of Nirvana. I must say that the authority of one like Manikka living in Buddhist times, who is arguing against it, is worth infinitely more than our private opinion, especially as it happens that we sometimes import into the consideration our nineteenth century ideas—so that the fact of his challenge to Budddhism is of great value, at any rate to sincere and earnest onlookers. This paper indicates the wonderfully beautiful ideas you find in the Caiva system. The beautiful conceptions one meets with in that which goes by the name of Caivism, I think, lead us to see that which is not quite realised, viz, that mere knowledge is not quite all. There is something more than perception of truth required before we can have

---

1. NOTE VII, "Bhakti".

the actual practice in the life of those in whom it is met with. Many have a habit of saying. "Here are most beautiful sentiments. Are not they a splendid people?" whereas, those who know what the people are, are the best judges of how far these sentiments bear fruit in actual practice.

I am only touching on the very outside points which strike one, and rather in the hope of eliciting the views and opinions of those who are more competent than I am to speak upon the subject.

Rev. R. C. KIRKPATRICK, M. A.—In the present day the study of comparative religions is very important, and anything which throws light on any of the religions that prevail in the world is of value. I would also venture to add, that I think we must look for glimpses of truth in all the different religions that prevail.

Professor H. L. ORCHARD, D. Sc.—We are indebted to Dr. Pope for bringing before us, in a most interesting form, the figure of a man who was assuredly no ordinary man—an earnest seeker after the infinite spirit—a flash-light upon philosophic thought. I think we all concur with the learned author in the closing sentence of his paper—that at that time "South India needed a personal God, an assurance of immortality and a call to prayer," and in the providence of God this sage was raised up to meet that need.

Captain F. PETRIE, F.G.S. (HON. SECRETARY).—Before Dr. Pope rises to reply may I say a few words?

I think we may congratulate ourselves very much on the fact that this paper has come from his hands. (Hear, hear.) There is no one in England (if he will pardon me for saying so, and I am sure all will agree who know him) who could so thoroughly and ably treat the subject which he has taken up. I think we need not be uncertain of the importance of such a paper, even in England.

Some few years ago a paper "On the religion of Zoroaster" was read by a recognised authority on the subject (*Transactions*, vol. xiii). On that occasion a member—Mr. J. Ferguson, of Ceylon—used the following words:

"Seventeen years' residence in the East has led me to think that one important point in the preparation for missionary work is a knowledge of the religious beliefs of the people among whom Christianity is to be taught, and a sympathy, so far as possible, with precepts and doctrines not distinctly evil in their tendency. I believe our most successful missionaries in the East have been those who have not only learnt the language of the people amongst whom they have laboured, but who have been enabled to translate their sacred and other notable books, and thus to know and obtain the sympathies of the enlightened among the natives. I think that this paper will be particularly valuable to Christian teachers going to work in Northern and Western India, and Persia, and I hope that it may pass through the hands of our more enlightened fellow-subjects in India. I think the value of such papers as this is very great to missionaries going

to the East, who ought to get an idea of the religions they are about to controvert."

As regards South India the same words aptly apply to the paper just read by Dr. Pope.

The Author—If you will bear with me I will make one or two remarks. I am obliged to condense very much what I have to say because the subject is a very wide one. First of all, what I have read is a mere fragment. I have got seven or eight volumes, type written, waiting for the press; but these things do not sell, and the Clarendon Press Authorities hesitate as one might expect. It is a question of "How can we recoup ourselves?" That is another matter, and there it remains. Secondly, the whole subject is invested with a controversial element, about which I am rather loath to say much.

My Hindu friends, with whom I am in constant communication, strenuously refuse to believe that Manikka ever got anything from such a polluted source as western tradition; so I have not emphasised that point here, but I have argued it at length elsewhere.

Now I will deal with facts. In the second century there were Christrian missionaries in Madras—not the Apostle St. Thomas, as tradition has it; but certainly a century later Panteanus came and taught in Madras. Then the Nestorians came to the western coast, and during the time of Manikka, or about that time, they were so successful that the King of Travancore became a Nestorian Christian. The Christians on the western coast have a tradition that Manikka came there at this time. Nearly every excellency of his theology can be

traced, I think, to intercourse with these Nestorian Christians and the Alexandrian missionaries; but their teaching was wanting in fervour and spirituality. It did not make much of sin, nor did it teach the necessity for the atonement. That was the case with the Nestorian missionaries, and you can see in this tradition of Christianity, defects and hiatuses still remaining in it. With regard to missionary work, I may say that an old Caivaite, who is still what we call a heathen, is going to translate this into Tamil in India and circulate it. If we can only do this kind of thing and study their system, and meet them, not with antagonism, but as brothers who have a great deal of truth, to whom God our Father has given much, though He has given us more, I think, if we meet them in that spirit, the time will come when it will leaven the whole lump. Those who can shed tears over these rapturous songs are in a measure prepared for the Gospel. This is as the Book of Psalms to the people of South India, end I think is a preparation fer better things,

One word more I would say, and it is this—that our Hindu fellow-subjects in South India are inferior to no people on the face of the earth in that particular element—deep religious fervour. You may say what you like of Hindus in other respects; but they are people who love God—feeling in the darkness after Him that "haply they may find Him," and they love Him whom they do not as yet fully know. Before I left India, there came a carriage and pair to my door and a fine intelligent Hindu stepped out. I had often seen him in my little church there; but I had never spoken to him. He was a high officer of the Maharajah's Court. I gave him a seat. He said he had heard I was going, and he added, "I am

a Christian." I said, "My dear sir, is that so?" He said, "If you only knew my mother, sister and wife you would see that I cannot be baptized; but I am a Christian all the same—I would die for Christianity." He added, "I want a book (I read the Bible regularly) that I can pray over day by day and hour by hour, that will guide me." I had just received an edition, in two volumes, of Jeremy Taylor's *Holy Living* and *Holy Dying*, which I took out and showed to him. I did not give them to him, but said, "You can take down the publisher's name and I think they will suit you"; and so, after a little talk and trying in a quiet way to bring it home to him, he left. Some two months after, just immediately before I left he came and said, "I thank you so much for recommending me those books. I have got them, and I am dealing with the *Holy Living*; it is a way we have, that I work it out as I should Euclid. I am trying to make it my own in thought and in life; but I am getting on very slowly." I said, "My dear friend, I am not a third, or a quarter through it myself yet." And there he is still, I believe, studying Bishop Jeremy Taylor's *Holy Living*. He is one instance of the natural piety of those people, if one may so speak, of people who only need sympathetic and brotherly love to bring them much nearer Christianity.

Then one final word about Buddhism. In the notes in the Appendix you will find a full account of the discussion thereon, and find exactly where Manikka differed from the followers of Buddha. He convinced them that Buddhists are atheists. They did not believe in the immortality of the soul, and whether we know much or little, we must be as Browning said, very, very

sure of God and of immortality. [The Meeting was then adjourned.]

NOTE

The final remarks in this discussion suggest that this paper is well worthy of careful consideration, not only in India but nearer home, where it has become fashionable amongst some to speak with high approval of—and even to adopt—Buddhist views.

The warnings of Manikka convey both a lesson and a reproof to those who, having *The Light*, seek instead a darkness which even he so desired to dispel.—Ed.

மாணிக்கவாசகர் வரலாறு

புத்தர்களை வென்று வாகை சூடியவர்

1. மனமாற்றத்தின் தோற்றம்

நிகரற்ற மணிவாசகப் பெருமானின் சரிதை தெள்ளத் தெளிவானதொன்றல்ல. அதில் எத்தனையோ குழப்பங்கள், வேறுபாடுகள், மூடுபனிபோல் பார்வையை மயக்கும் கர்ண பாரம்பரியக் கதைகள் உள்ளன. எனினும், ஒன்றுமட்டும் அறுதி. அவர் இருந்ததும், வாழ்ந்ததும் உண்மை. அவரைப் பற்றிய பரம்பரைக் கதைகளும், புராணங்களும் முற்றிலும் கற்பனை அல்ல. அவற்றிற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் பல. சிவநேசத் தொண்டர்கள் வரிசையில், தமிழகத்தைப் புத்த, சமண சமய ஆதிக்கத்தினின்று விடுவித்த சிவனடியார்தம் திருக்கூட்டத்தில், மணிவாசக முனிவருக்கு முதலிடம் உண்டெென்பதில் ஐயம் ஏதுமில்லை.

என்றாலும், தமிழகம், மாணிக்கவாசகருக்குச் சிவனடியார்களுக்குள் முதலிடம் அளிக்கவில்லை. முதலிடம் திருஞான சம்பந்தருக்கே.

மணிவாசகர் எப்போது வாழ்ந்தார்? அவரது காலத்தைக் கணிப்பது கூடக் கடினமாகவே உள்ளது.

உத்தேசமாகப் பார்த்தால், புத்த மதம் தமிழகத்தில் அஸ்தமனமாகி வருகின்ற சமயத்தில் அவர் இருந்தார் என்பதால், எட்டாவது அல்லது ஒன்பதாவது நூற்றாண்டில் அவர் இருந்திருக்கலாம் என்று சொல்லலாம்.[1]

இப்படிக் கணக்கிடுவதற்கு வேறு ஏதேனும் ஆதாரங்கள் உண்டா? இருக்கின்றன. இவற்றிற்கு இரண்டு கிளைகள் — ஒன்று மணிவாசகரது இலக்கியப் படைப்புகளே (இவற்றில் சுயசரிதக் குறிப்புகள் அபூர்வமாகவே உள்ளன). இரண்டு: புகழ்பெற்ற வாதவூரர் புராணம்.[2] இந்தப் புராணம், திருவிளையாடற் புராணம் என்று கூறப்படும் மதுரைத் தலபுராணத்தின் 48-51 பாடல்களின் விரிவுரையே ஆகும். திருவிளையாடற் புராணத்தை, சமஸ்கிருத ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியின் மொழி

---

1. மொழி பெயர்ப்பாளன் குறிப்பு (மொ. பெ. கு.) சரித்திரப் பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரும் இவ்வாறே மதிப்பிடுகிறார். எனினும் ஒரு சிக்கல். மாணிக்கவாசகர் திருநாவுக்கரசு நாயனார்க்கு முற்பட்டவர் என்று மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் கூறுகிறார். அவர் குறிப்பிடும் தேவார ஆதாரம் இது.

''நரியைக் குதிரை செய்வானு நரகரைத் தேவு செய்வானும்'' அப்பர் தேவாரம்: திருவாரூர்; திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பதிப்பாசிரியர்: மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர், ஸ்ரீ தியாகராஜவிலாச வெளியீடு, மூன்றாம் பதிப்பு (1972) பக்கம் 3.

அப்பர் சுவாமிகள் நரசிம்மபல்லவர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 630-668) வாழ்ந்திருந்தார் என்பதற்குச் சரித்திரச் சான்று உண்டு.

2. வாதவூர், நமது மாணிக்கவாசகர் பிறந்து வளர்ந்த ஊர். இது சமய, ஆகம, அரசியல் வாதப்பிரதிவாதங்கள் பொறிதெறிக்கும் இடம் என்பதால், வாதஊர் என்ற பெயரே அவ்வூருக்கு நிலையாயிற்று.

பெயர்ப்பே என்பர். இது அத்தனை பழங்காலத்தது அன்று. கி.பி. 1750 என்று சொல்லாம். இதிற் சில பகுதிகள் மணிவாசக மாமுனியின் மதுரை அநுபவங்களை விவரிக்கின்றன. வழிமொழியாய் வந்த பல்வேறு ஆலயங்களின் பரம்பரை வரலாறுகளைப் போல, திருவிளையாடற் புராணத்திலும், பல சம்பவங்கள், நம்புவதற்கரிய சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. எவை வரலாற்று உண்மை, எவை கற்பனை என்று பிரிவு படுத்துவது அரிய செயல். வாதவூரர் புராணமோ, உண்மையில் ஒரு கவிஞனின் கற்பனைக் கவிதை. எந்தக் கவிதைகள் பக்தரைப் பற்றி விவரமாக வர்ணிக்கின்றனவோ, அவற்றையே நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். இதிலும் ஒரு சிக்கல்; சரித்திர நாயகர்களைப் பற்றிய உயர்வு நவிற்சிகள் எத்தனையோ (இது எல்லா நாடுகளிலும் இருப்பதுதான்) மற்றும் இடைச் செருகல்கள். ஒரு பிரிவைச் சார்ந்த குருமார்களைப் பற்றி மிக ஏற்றமாகச் சொல்லுவர் அப்பிரிவைச் சார்ந்தவர்; இவர்களை விட மேலானவர்கள் இவரிவர் என்று அப்பிரிவுக்கு மாற்றார் கூறுவர். இந்தப் போட்டா போட்டியில் உண்மை எது எனத் திட்டமாகக் கூறுவது இயலாத காரியம். இவை போகட்டும். நான் (போப் அவர்கள்) அறிந்தவாறு மாணிக்கவாசகரின் கதையைச் சொல்லுகிறேன்.

மதுரைக்கருகில் வைகை நதிதீரத்தில் இருந்த திருவாதவூரில் பிறந்தவர் அவர். இதனால், அவர் பெற்றோர்களே அவரைத் திருவாதவூரர் என்று பெயரிட்டு அழைத்ததாகவும் கூறுவர். இயற்பெயர் இவ்வாறு இருக்குமா? சந்தேகந்தான். அவரை வேறு இரண்டு பெயர்கள் பிறகு சார்ந்தன. மாணிக்கவாசகர் என்ற அடைமொழிப் பெயர் அவரைப் பற்றிக் கொண்டது. அவரது கவிதைகளின் தொகுப்பையோ திருவாசகம் என்று அழைக்கலாயினர். அமாத்திய பிரிவைச் சேர்ந்த

அந்தணர் ஒருவர் அவரது தந்தையார்; ஆனால், அவரது பெயர் என்னவோ அறியக் கூடவில்லை.[3]

அப்போதைய மதுரை மன்னர் அரிமர்த்தன பாண்டியர் (அரிமர்த்தனர் என்றால் விரோதி பங்கன்—எதிரியை வீழ்த்துபவன்—என்று பொருள்)

இளம் வயதிலிருந்தே, மணிவாசகர் அறிவுச் சுடராய் விளங்கினார். பதினாறு வயதுக்குள்ளேயே, வேத புராணங்களையும், முக்கியமாகச் சைவ ஆகமங்களையும் கற்றுத் தேர்ந்தார். மதுரை மன்னர் இவரது கல்விச் சிறப்பையும் அறிவுக் கூர்மையையும் கேட்டறிந்தார். இவரை அழைத்து, இவர்பால் அளப்பரிய அன்பு கொண்டு, இவரைத் தம் முதன் மந்திரியாக நியமித்தார். தென்னவன் பிரம்மராயன் என்ற பட்டப் பெயரையும் சூட்டினார் (சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால், பாண்டியனது அந்தணத் தலைவன் என்று இதற்குப் பொருள் கூறலாம்).

இந்திர போகம் அனுபவிக்கின்றார் நமது கதா நாயகர்: கவிஞர் கடவுள் மஹாமுனி சொல்லுவது இது. ஒளிமிளிரும் திங்கள் வானத்திலிருந்து இறங்கி வந்தது போல, சுற்றும் உள்ள நட்சத்திரங்களின் மங்கிய வெளிச்சத்தைத் தம் ஜோதியால் வெட்கச் செய்து புகழ் சமைக்கிறார் அவர். அணிவதோ பட்டுப் பீதாம்பரங்கள்.

---

3. மாணிக்கவாசகரின் தந்தையார் பெயர் ஸ்ரீசம்பு பாதாசிருதர் என்றும் தாயார் சிவஞானவதியார் என்றும் மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தாம் பதிப்பித்த திருவிளையாடற் புராணத்தின் முகவுரையில் கூறியிருக்கிறார். இதற்கு ஆதாரமாக அவர் குறிப்பிடுவது திருப்பெருந்துறையின் வடமொழிப் புராணமாகிய ஸ்ரீஆதிகைலாஸ மாஹாத்மியம் (37-ம் அத்தியாயம்) மற்றும் மணிவாசகரது வடமொழிச் சரித்திரமான ஸ்ரீமணிவாக்கிய சரித்திரம் (6-ம் அத்தியாயம்) – திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் பக்கம்-40 (முன் குறிப்பிட்டது)

அவற்றில் பதித்தவை நல் வைரங்கள். கஜதுரகங்கள் சூழ்ந்து நிற்கின்றன. வானத்துச் சந்திரனையே பழிக்கும் வெண் கொற்றக் குடை. நீதி, அறிவுத்திறன், கருணை இவையே வடிவான மன்னவன் அரசு பரிபாலனப் பொறுப் பனைத்தையும் மணிவாசகரிடமே ஒப்படைக்கின்றான்.

எல்லாம் சரிதான். ஆயினும், இத்தனை சுகானுபவங் களும் எல்லையற்ற அதிகார உரிமைகளும் அவரது மனத்தை மயக்கவில்லை. இவற்றால் இறும்பூது என்றும் இல்லை அவருக்கு. சைவ ஆகமங்களையே எப்போதும் மனத்திற் கொண்டார். இந்தப் பரிவாரங்களும், அரண்மனைப் போகமும் தன் ஆன்மாவைச் சிறைப் படுத்தும் விலங்குகளே என்ற உணர்வு எப்போதும் அவருக் கிருந்தது. இவை இன்றிருக்கும், நாளை மாறும். இவற்றை உதறிப் புறக்கணித்து, சிவனருளால் விடுதலை பெற வேண்டும். நம்மைச் சுற்றிலும் மக்கட் கூட்டம், பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற பந்தங்களால் பிணிக்கப் பட்டவர்கள். தீராத துன்பங்களால் அவதிப்படுவார்கள். அவர்கள்பால் அவருக்கு எல்லையற்ற அனுதாபம், வருத்தம். நிழலைத் தேடி அலையும் வெயிற் கொடுமை தாங்காத வழிப்போக்கன் போல, அவரது உள்-மனம் சிவபெருமான் கருணைக்கு ஏங்கியது. தம்மைச் சூழ்ந்தோர் அனைவரும் பிறவிக் கொடுமையால் சிறைப் பட்டவர்களே. மனித வாழ்வு பயனற்றதுதான். எல்லோரும் மாய அரங்கு ஒன்றில் நடிக நடிகைகளே. இருப்பினும், மன்னரது பிரதிநிதியாக அனைவருக்கும் நடுநிலையுடன் நீதி வழங்க வேண்டுவது தம் பொறுப்பு. இக்கடமையை அவர் செவ்வையாக ஆற்றித் தம் பொறுப்பை நெறி வழுவாது வகித்தார்.

எனினும், அவரது இதயத்தில் ஒரு தீராத அவா கனன்று கொண்டிருந்தது. ஐந்தெழுத்தின் (நமசிவாய) மர்மத்தை விளக்கி முத்தி பெறும் வழியைக் காண்பிக்க வல்ல குருநாதர் எவரோ அவரைக் காண வேண்டுமென்று

ஏங்கினார். வண்டினங்கள் மலருக்கு மலர் தாவி அலைவது போல, பல சைவ மத குரவர்களையும் அவர் தேடித் தேடித் தொடர்பு கொண்டார். மனம் அமைதி அடைய வில்லை. ஆகமங்களின் உட்பொருளை எல்லாம் விளக்கக் கூடிய தூய ஆசான் எங்கே — எங்கே, எப்படி அவரைக் காண்பேன் என்று உள்ளம் அலை பாய்ந்தது. சாக்கிய முனிவரையும் கௌதமரையும் போல — இவர்களைப் போன்ற முனிபுங்கவர்கள் பாரத மரபில் அநேகர் — உலகோரின் வரம்பிலாத் துன்பம் மனதை வாட்ட, அதற்கு அருமருந்து என்னவென்று அறியாமல், அதைப் போதிக்கவல்ல ஆசிரியரையும் காணாமல், மணிவாசகர் வாடினார். அந் நாளினில், சைவ ஆசாரியர்கள் வெகு சிலரே; சைவத்துக்கு மாறான மதமுறைகள் ஏறுமுகத்தில் இருந்தன. மன்னரும் அவரது ஆட்சி உதவியாளர்களும் கூட எம்மதத்தைச் சார்வது என்ற விஷயத்தில் சற்றுப் பாராமுகமாகவே இருந்தனர். ஜைன மத சித்தாந்தம் எவ்விடத்தும் தலை தூக்கி நின்றது.

இவற்றையெல்லாம் கண்டு விளைந்த மனத் தடுமாற்றம், தனது அறியாமை, இளமைத் துடிப்பின் ஆசாபாசங்கள் இவற்றையெல்லாம் மாணிக்கவாசகர் தம் கவிதைகளில் கொட்டி உருகினார் (முக்கியமாக Sacred Cantoவில் ஐந்தாம் பாடல் காண்க).[4]

---

4. மொ. பெ. கு. Sacred Canto என்று போப் அவர்கள் குறிப்பிடுவது திருவாசகத்தின் திருப்பாண்டிப் பதிகத்தை (திருவாசகம், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, இரண்டாம் மறுபதிப்பு, (1970) பக்கங்கள் 287—290) அப்பாடல்கள் வருமாறு :

" காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்! கருதரிய
ஞாலம் உண்டானொடு நான் முகன் வானவர் நண்ணரிய
ஆலம்உண்டான் எங்கள் பாண்டிப் பிரான்றன் அடிய
வர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான், வந்து முந்துமினோ!"

இதே சுருதி இதே பொருள் கொண்ட மாணிக்க வாசகரின் பாடல்கள், புனித அகஸ்டின் அவர்களது

சுருக்கமாகப் பொருள் இது: நேரம் இருக்கும் போதே ஈசனைக் காதல் செய்து உன்னைக் கடைத் தேற்றிக் கொள். விடமுண்ட கண்டகன் தன் அடியவர் களுக்கு அருள் வழங்குகின்றான். அதைப் பெற்றுக் கொள்ள முந்திக் கொள்.

இது அத்தனை பொருத்தமாகத் தோன்றவில்லை இவ்விடத்தில். அடைக்கலப்பத்து ('Refuge Decad' என்பதுபோப் அவர்களின் ஆங்கில ஆக்கம்) இச் சூழ் நிலையில் இதைவிடப் பொருத்தமாக எனக்குத் தோன்றுகிறது. அந்தச் சதகத்தில் ஐந்தாம் பாடல் இது.

"சுருள்புரி கூழையர் பட்டுஉன் திறமறந்திங்(கு)
இருள்புரி யாக்கையிலே கிடந்த தெய்த்தனன்;
மைத்தடங்கள்
வெருள்புரி மான் அன்ன நோக்கி தன் பங்க!
விண்ணோர் பெருமான்
அருள்புரியாய்! உடையாய்! அடியேன் உன்
அடைக்கலமே.''

சுருக்கமாகப் பொருள் இது. ஈசனே, உன் பெருமையையும் திறமையையும் அறியாது மகளிருடன் பொழுதை வீண் கழித்தேன் (அதனை மன்னித்து) எனக்கு அருள் புரிவாய். அடியேன் உன் அடைக்கலம்.

அதற்கடுத்த பாடல் நான் கூறிய பொருத்தத் திற்குக் கை கொடுக்கின்றது. பாடல் இது.

"மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர் போல் தளர்ந்தேன்
தடமலர்த்தாள்
வாழி எப்போது வந்தெந்நாள் வணங்குவன்
வல்வினையேன்
ஆழியப் பாவுடையாய் அடியேன் உன்
அடைக்கலமே.''

சுருங்கப் பொருள் கூறினால் :

(St Augustine)[5] பாவ மன்னிப்புக் கோருதல் ('Confessions' என்ற சொல்லின் மேலெழுந்தவாரியான தமிழாக்கம்) என்ற நூலை நெஞ்சை உலுக்கி நினைவுப்படுத்துகின்றன. மேற்கானால் என்ன, கிழக்கானால் என்ன? பெரியோர் பெரியோரே.

பரிபக்குவநிலை நெருங்கியது. ஒரு நாள் பாண்டிய ராஜன், சிற்றரசர்களும், மந்திரி பிரதானிகளும் புடை சூழ அரசவையில் அமர்ந்திருக்கச் சில தூதுவர் வந்து, அண்டைச் சோழ நாட்டுத் துறைமுகத்தில் பல அரிய புரவிகள் அரபு நாட்டிலிருந்து மரக்கலங்களில் கொண்டு வரப்பட்டதாய்ச் செய்தி சொன்னார்கள். மன்னனுக்கு இக் குதிரைகளை வாங்க வேண்டுமென்று பேரவா. செய்தி கேட்டவுடன், தன் நம்பிக்கைக்குரிய முதன் மந்திரியை—வேறு யார்? நம் மாணிக்கர் தாம்—அழைத்து, திருப்பெருந்துறைக்குச் சென்று அக் குதிரைகளை வாங்கி வருமாறு பணித்தான். பொற்கிழிகளையும், மாணிக்க, வைர வைடூரியங்களையும் வாரிவாரி அவர் கையில் கொடுத்தான், குதிரைகளின் விலைக்காக. மணிவாச கரும், படைகள் புடைசூழ, அரசு மரியாதைகளுடன்

பெண்கள் கவர்ச்சியினால் ஈர்க்கப்பட்டு, தயிர் கடையும் மத்தைத் தயிர்ப் பானையில் இட்டபோது, தயிர் உடைந்து சிதறுவது போல, என் மனமும் உடைந்து தளர் வடைகிறது. மாறாத நல்வாழ்வை அளிக்கும் உன் தாமரைத் திருவடியை வல்வினை உடைய எளியவன் நான் எப்போது வந்து சார்வேன்? எந்நாளில் வணங்கு வேன்? அடியேன் உன் அடைக்கலம்.

5. மொ. பெ. கு. புனித அகஸ்டின் (கி. பி. 354—430) இத்தாலிய நாட்டவர். அவரது அன்னை கிறிஸ்துவ மதத்தை அகவுறத் தழுவியவர். அகஸ்டினுக்கு முதலில் ஐயம் இயேசுவின் கொள்கைகள் பற்றி. பின்னர், கி.பி. 387-ம் ஆண்டில் மனமாறித் தீவிர கிறிஸ்துவ ரானார். இம் மாற்றத்தைச் சித்தரித்து விவரிப்பதே 'Confessions' என்ற அவரது நூல்.

கிளம்பினார், துறைமுகம் நோக்கி. பல நகரங்களையும், மலைகளையும், காடுகளையும் இந்தப் பரிவாரம் மெல்ல, கம்பீரமாக ராஜ நடைபோட்டுக் கடந்து சென்றது.

நமது முனிவரின் வாழ்க்கை நாடகத்தில் இத்துடன் முதல் திரை விழுந்தது. அவரது லௌகிக வாழ்வு இதோடு முடிவுற்றது. எண்ணிப் பார்க்க முடியாத, ஆனால், முற்றில்லாத—முற்று என்று அறியாத—ஒரு அனுபவத்தை எதிர் நோக்கி அவர் தம் படைகளுடன் சென்று கொண்டிருக்கிறார், புனித பால் (St. Paul) டமாஸ்கஸ் நகருக்குச் சென்றது போல.[6]

---

6. சொல்லொணா வீரமும் அரிய மதிநுட்பமும் கொண்ட புனித பால் கிறிஸ்துவமதப் பரப்பில் தீவிரமாக ஈடுபட்டுப் பல மடாலயங்களையும் நிறுவினார். அவரது உபதேசங்கள் புது ஆகமத்தில் (New Testament) உள்ளன. இறுதியில், மதத்தியாகியாக ரோமாபுரியில் அவர் கி.பி. 64—65-ல் மறைவு எய்தினார்.

புனித பால் (Saint Paul—ஸால் (Saul என்பது அவரது இயற்பெயர்) டமாஸ்கஸ் நகருக்கு இயேசுவின் எதிரியாகவே செல்கின்றார். (அந்நகரிலேயே அவரது மன மாற்றம்) நகரத்தை அணுகியவுடன் விண்ணில் ஒரு ஜோதி மின்னிற்று. அசரீரியாக ஒரு குரல் ''என்னை ஏன் தொல்லைபடுத்துகிறாய்?'' ''யார் அது? யார்?'' ''நான் தான் இயேசு; என்னை ஒடுக்கி அடக்க வேண்டுமென்றே இங்கு வந்திருக்கிறாய் அல்லவா?'' ''நான் என்ன செய்ய, சுவாமி?'' ''இரங்கல் வேண்டாம்; நகர்க்குள் செல். என்ன செய்ய வேண்டுமென்று உனக்கு உணர்த்தப்படும்''.

''And the men which journeyed with him stood speechless, hearing a voice, but seeing no man.

''And Saul arose from the earth; and when his eyes were opened, he saw no man; but they led him by the hand, and brought him into Damascus.

''And he was three days without sight, and neither did hear nor drink.

2. சிவபெருமான் தோற்றம்.

மாணிக்கவாசகரின் மனமாற்றம்.

பாண்டிய அரசனுடைய அரசவையைக் காட்டிலும் சிறப்பானதொரு அவையைக் கவிஞர் நம் கண்முன் நிறுத்துகிறார். இது சிவபெருமானின் அவை (விவரமான வர்ணனை பத்தாவது குறிப்பில் காண்க). வெள்ளியங் கிரியில் உமையுடன் அமர்ந்திருக்கிறார் சிவனார். தேவகணங்கள் புடைசூழ்ந்திருக்கின்றன. பெருமான் சொல்லுவார்: ''ஒரு மானிட குருவின் வேடத்தில் நாம் பூவுலகம் செல்வதாக இருக்கிறோம். அங்கே ஒரு

"And there was a certain disciple at Damascus, named An-a-ni'as; and to him said the Lord in a vision, An-a-ni'as. And he said, Behold, I am here, Lord.

"And the Lord said unto him. Arise, and go into the street which is called Straight, and inquire in the house of Judas for one called Saul of Taurus: for, behold, he prayeth.

"And hath seen in a vision a man named An-a-ni'as coming in, and putting his hand on him, that he might receive his sight.

"Then An-a-ni'as answered, Lord, I have heard by many of this man, how much evil he hath done to thy saints at Jerusalem:

"And here he hath authority from the chief priests to bind all that call on they name.

"But the Lord said unto him, Go thy way: for he is a chosen vessel unto me, to bear my name before the Gentiles, and kings, and the children of Israel:

"For I will shew him how great things he must suffer for my name's sake."

— The Acts of the Apostles, The New Testament, Chapter 9, (7—16)

சீடனைக் கடைத்தேற்றிடுவோம். அதன்பின் அவன் தென்னாடெங்கிலும் நமது உண்மைச் சித்தாந்தத்தைப் பரப்பித் தமிழ்மொழியை என்றைக்கும் எப்போதும் அமுத அமர மொழியாக்குவான்.'' தேவகணங்கள் சிலர் சிவபெருமானுடன், அவரது சீடர்களாகப் பூவுலகத்துக்கு வருவார்கள். சீடர்கள் உடன்வராவிட்டால் எப்படி? பசு இல்லாமல் பதியா? (விவரங்களுக்கு பன்னிரெண்டாம் குறிப்பைக் காண்க.)

மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. மலர்களில் புதியதோர் நறுமணம். புள்ளினங்கள் ஆனந்தமாய் இசைக்கின்றன. திருப்பெருந்துறைப் பூங்கா ஒன்றில் ஏதோ ஒரு பரபரப்பு, எதிர்பார்ப்பு. செழித்துப் படர்ந்த ஒரு குருந்த மரத்தடியில் கைலாசத்துக் குருவும் அவரது 'சீடர்களும்'—999 பேர்—அமர்கின்றனர்.

இதற்கிடையில், நமது இளம் முதன் மந்திரி தம் பரிவாரங்களுடன் துறையை நெருங்குகிறார். தூரத்திலிருந்து சைவ ஆகமங்களை முறையுடன் பலர் இசைப்பது கேட்கிறது. என்ன இது? எங்கிருந்து வருகிறது இந்த ஈர்க்கும் இசை? 'யாரங்கே, என்ன இது என்று கேட்டுவா' என்று பணிக்கிறார் ஒரு சேவகனை!

விடை விரைவில் வருகிறது. ஒரு குருந்த மரத்தின் கீழ், பெரியதோர் சீடர் குழாம் சூழ, ஒரு தவசிலர் அமர்ந்திருக்கிறார். கம்பீரமான தோற்றம். சடைமுடியில் கொன்றைப் பூ சூடியிருக்கிறார். ஆதி சிவனே போல இருக்கிறார் தோற்றத்தில்!

முதன் மந்திரி குதிரையை விட்டிறங்கி அந்தக் குருந்த மரத்தடியை நோக்கிச் செல்கிறார். அதோ அந்த ஆசான் அமர்ந்திருக்கிறார். நெற்றியையும், கண்டத்தையும், மார்பையும் சுற்றி ருத்திராக்ஷ மாலை. கண்ணைப் பறிக்கும் வெண்ணிற நீறு அணிந்திருக்கிறார். இதென்ன? நெற்றி நடுவே தீயென ஒளியிடும் மூன்றாம்

கண் வேறு. கையில் ஒரு புத்தகம். மணிவாசகருக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'என்ன புத்தகம் அது'? என்று மட்டும் கேட்கிறார். விடை : 'சிவஞான போதம்'.[7]

''சிவமென்றால் என்ன? ஞானம் என்பதற்குப் பொருள் என்ன? போதம் என்பது எதைக் குறிக்கிறது?''

''சிவமென்பது நிகரற்ற உண்மை : கடவுளின் உட்பொருள். ஞான மென்பது அவ்வுட்பொருளின் விளக்கம். போதம் என்றால் அதனை அறிவது.''

இவ்வுரை கேட்டவுடனே கேள்வி கேட்டவருக்குச் சக்தியெல்லாம் ஒடுங்கிப் போயிற்று (விளக்கத்துக்குக் குறிப்பு ஐந்தைக் காண்க).

ஒரு அபூர்வ மோன நிலையை அநுபவித்தார். ''இத்தோடு என் ஆசைகளையும் உடைமைகளையும் துறந்தேன். நாயினும் கடையேன் நான் உன் திருவடி களில் வீழ்ந்தேன். என்னை ஆட்கொண்டருள வேண்டும்'' என்று நெக்குருகக் கூறித் துதித்து நின்றார். இவ்வளவில்,

---

7. இந்நிலையில் ஒன்று கூறவேண்டும். எங்கோ, எப்படியோ ஒரு சரித்திரக் கலப்பு; தேதிக் குழப்பம். மெய் கண்ட தேவரின் 'சிவஞான போதம்' மணிவாசகர் காலத்துக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் எழுதப் பட்டதாகும். (மொ. பெ. கு:) மெய்கண்ட தேவர் பதின் மூன்றாம் நூற்றாண்டில் இருந்தார் என்பது சரித்திரப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் கணிப்பு. (K.A. Nilakanta Sastri, A History of South India, Oxford University Press (1958) p. 423. மற்றும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள நூலில்—சித்தாந்த பண்டிதர், கழகப்புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை சிவஞான போதமும் சிற்றுரையும் (1953)—மெய் கண்ட தேவரின் மேற்கோள் நூல்களில் மணிவாசகரின் 'திருவருட் பயன்' ஒன்று. மேலும், நல்வழி வெண்பா வரிகள், ''கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசக மென்றுணர்'' குறிப்பிடப்பட்டுள்ளன. (பக்கம் ௩௨௦)

சிவபெருமானைச் சுற்றி நின்ற சீடர்களை தலைவன் 'இவன் மனம் கனிந்து பக்குவமாகிவிட்டது. உபதேசம் செய்தருளலாம்' என்று தலையசைக்க, பெருமான் அதை ஆமோதித்துத் தத்துவோபதேசத்துக்கு ஆயத்தம் செய்யப் பணித்தார்.

பூங்காவில் ஒரு மேடை உருவாக்கப்பட்டது.

பட்டுத் தோரணங்களாலும் இரத்தினம் பதித்த மலர்க்கொடிகளாலும் அது அலங்கரிக்கப்பட்டது. மேடையின் நடுவில் ஆசிரியர்க்கான ஆசனம் உருவாக்கப்பட்டது. சிடப்பிள்ளை கங்கை நீரால் நீராட்டப்பட்டு, நறுமணம் கமழும் வாசனைத் திரவியங்களைப் பூசி, உபதேசம் பெறுவதற்குத் தயாராக இருக்கிறார். பற்பல கனிவகைகளை ஆசிரியர்க்குக் காணிக்கையாக வைத்தனர். மந்திரங்களும் புனித ஆகமங்களும் அவருக்கு உபதேசம் ஆயின. இவற்றைக் கேட்கக் கேட்க, சீடரது அன்புசால் பக்தி பெருகிப் பிரவகிக்கின்றது. ஆசானின் திருவடிகளைப் போற்றி அவற்றை தம் சென்னிமேற் கொண்டார். மணிவாசகருக்குச் சைவசித்தாந்த இரகசியங்களெல்லாம் உபதேசம் செய்யப்பட்டன. (விளக்கத்திற்கு 11-ம் குறிப்பைக் காண்க). முதன் மந்திரிதான் எவ்வாறு மாறிவிட்டார்! இவர் ஜீவன் முக்தர் ஆயினார். கரை காண ஒண்ணாத இறை பெரும் சக்தியினுள் அவர் ஒன்றாயினார். ஆடம்பரமிக்க ஆடை ஆபரணங்களை நீத்து, வெண்ணீறு அணிந்து துறவி போல் துலங்கினார்.

தலைமேல் சிவநேசச் செல்வர்கள் கொள்வது போன்ற சடைமுடி. ஒரு கையில் தண்டம். மற்றொன்றில் பிட்சைகோரும் கப்பறை; உலகத் தளைகள் அனைத்தையும் துறந்துவிட்டார் அவர், சிவலோகத்தைத் தவிர. கடைசிவரை, இந்நிலையிலிருந்து அவர் மாறுபடமாட்டார். சரித்திரமோ, பாரம்பரைக் கூற்றுக்களோ, கட்டுக்கதைகளோ, அவை என்ன சொல்லினும், ஒன்று மட்டும் உண்மை. தெளிந்த அறிவு: இனி என்ன செய்வ

தென்பதில் உறுதி: அனைத்துயிர்களிடத்தும் கருணை. புனிதபால், புனித ஃபிரான்ஸிஸ்[8] இவர்களது கலப்புப் போன்றது அவரது குணவிசேடம்.

இதே அவரது முழு மாற்றம். அவரது பாடல்கள் அனைத்தும் இந்தப் பரமானந்தத்தைக் கொப்பளிக்கின்றன. சாந்நித்தியம் அடையப்பெற்ற சரணாகதியின் பெருமகிழ்வு. ''நான் உன்னுடையவன்; என்னைக் காத்தருள்'' என்ற பல்லவியோ, சரணமோ அவரது பாடல்கள் அனைத்திலும் காணலாம். அவரது கவிதைகள் தமிழ் மக்கள் அனைவரது இதயத்தையும் ஈர்த்தன. பக்தி உணர்வு குமுறிக் குமுறி, ஓரிடத்தில் ஓடையாய் சுழித்தோடிப் பிறிதோறிடத்தில் பொங்குமாங்கடலாய் நுரையிடும் அவரது கவிதைகள் நெஞ்சினில் பதிக்கப்பட, பொறிக்கப்பட வேண்டியவை அல்லவா?

— இது போயிற்று.

---

8. மொ. பெ. கு. புனித பால் அவர்களைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். கிறிஸ்துவர்களை ஒறுக்க வேண்டுமென்று முனைந்தோரில் முதற்பட்டவர், டமாஸ்கஸ் நகரில் இயேசுவுக்கு அடிமையாகி அவரது கோட்பாடுகளைப் பரப்பி தன் உயிரையே தியாகம் செய்தவர் அவர்.

புனித ஃபிரான்ஸிஸ் (1182-1226 கி.பி.) இத்தாலி நாட்டவர். செல்வமிக்க வணிகர் ஒருவரின் புதல்வர். உடல்நிலை சரியில்லாமல் படுத்திருக்கும்போது தாம் கண்ட இரண்டு கனவுகளால், தம் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டவர். தம் செல்வத்தை எல்லாம் வறியவர்க்கீந்து, எளிய பிட்சாந்தேகி வாழ்வை மேற்கொண்டார். விலங்கு, பறவை யினங்களிடம் அவர் காட்டிய கருணை பிரசித்தம்.

புனிதபால் அறிவுச் சுடரான தீவிர மதப்பிரசாரகர் என்றால் புனித ஃபிரான்ஸிஸோ அனைத்துயிர்கள் மீதும் தண்ணொளி கொண்டவர். இவ்விரு குணநலன்களும் மாணிக்கவாசகர்பால் இருந்தன என்பதைப் போப் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

அடுத்தபடி என்ன? மணிவாசகர்—வந்தபோது முதன் மந்திரி. இப்போதோ தவப்பெருஞ்சீடர், சிவநேசச் செல்வர். ஆடை ஆபரணங்களையும் தமது சொந்த சொத்துக்களையும் தமது ஆசானுக்கு—சிவபெருமானுக்கு—அர்ப்பணித்தவர். அத்துடனா? அரபிக் குதிரைகள் வாங்குவதற்காக மன்னன் கொடுத்த பெருஞ் செல்வத்தையும் தமது ஆசானிடம் ஒப்படைத்தவர், சிவனடியார்களுக்கும், ஏழைமக்களுக்கும் இதைப் பயன்படுத்த வேண்டும் என்று.

3. மதுரையில் நடப்பவை

இதற்கிடையில், மணிவாசகருடன் வந்த அதிகாரிகளுக்கு நொடியில் நிகழ்ந்த இம்மாறுதல் ஒரு அதிர்ச்சி: நம்பமுடியாத ஒரு அதிசயம். என்ன இது? மன்னவன் கொடுத்தனுப்பிய திரவியத்தை எல்லாம் இவ்வாறு தானம் செய்கிறாரே முதலமைச்சர்! இது களவு போன்ற குற்றம் அல்லவா? 'போன்ற' என்ன? களவேதான். இதை எப்படி நாம் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது? தலைவரையே கேட்க வேண்டியதுதான். அணுகுகிறார்கள், மணிவாசகரை விளக்கம் கேட்கிறார்கள். அவர், இவர்கள் கூற்றுக்களைச் சற்றும் செவிமடுக்கவில்லை. ''என்ன தொல்லை இது? உலகாயதத்துக்கு என்னை ஏன் மீண்டும் இழுக்கிறீர்கள்'' என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொன்னார்.

வேறென்ன வழி அப்பணியாளர்களுக்கு? மதுரைக்குச் சென்று நடந்தவற்றை மன்னரிடம் சொல்ல வேண்டியதுதான். ''ஐயா, உமது முதலமைச்சர் சிவசந்நியாசி ஆகிவிட்டார்: நீர் கொடுத்த பணத்தையெல்லாம் தானம் செய்து தாரை வார்த்து விட்டார்.'' (இம் முறைபாட்டில் ஒரு சிலருக்குத் தம்மை மன்னர் முதல்வராக்க மாட்டாரா என்ற ஆர்வமும் ஆசையும் இருந்திருக்கலாம்; ஆனால்,

சட்டப்படிப் பார்த்தால், மணிவாசகர் செய்தது சரியன்று அல்லவா?) மன்னருக்கு, இதைக் கேள்விப் பட்டதும், ஒரே வெஞ்சினம்; கண் சிவக்க, மீசை துடிக்க, முதன் மந்திரியை உடனே இப்போதே மதுரை வருமாறு பணித்தார். ஓலை அனுப்பினார்.

இந்த ஓலையைப் பெற்றார் மணிவாசகர். எங்கே— திருப்பெருந்துறையில். ''அரசன் யார்? எனக்கு அரசர் சிவபெருமானே. யம தூதர்கள் வந்தாலும் சரி: என் பெருமான்தான் யமனையே வெற்றி கொண்டவரா யிற்றே?''[9] என்பதே அவர் மறுமொழி. இருப்பினும், மன்னர் ஓலையைச் சிவனுக்குக் காண்பித்து, என்ன செய்வதென்று கேட்டார். சிவனார் முறுவல் பூத்தார். ''பயமின்றித் திரும்பிப் போ. ஆவணிமாதம் பத்தொன்ப தாம் நாள், அரபுக் குதிரைகள் மதுரைக்கு வந்துவிடும் என்று மன்னவர்க்குச் சொல்'' என்று கூறி, தமது புதுச் சீடருக்கு மீண்டும் பட்டுப் பீதாம்பர உடைகளை அணிவித்து, ஒரு மாணிக்கக் கல்லினையும் அளித்து— 'இதை மன்னருக்குப் பரிசாக அளிப்பாய்'—என்று கூறி வழியனுப்பினார்.

அவ்வாறே, மாணிக்கவாசகர் மதுரை திரும்பி மன்னரைக் கண்டார். அரசனுக்கோ ஒரே கோபம். 'நீர் என்ன செய்தீர் இந்நாட்களாக? சொல்லுமையா?. என்றார் கடுமையாக. முதலமைச்சர் மொழிவார்: ''ஐயா, கடவுள் சொற்படி (இது என்ன பொய்) குதிரை

---

9. ஒரு திருக்குறட் பாவை இங்கு ஒப்பு நோக்கவும்:

'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு' (269)

பொருள்: தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லை யாகையால்) இயமனை வெல்லுதலும் கைகூடும். டாக்டர் வரதராசனார் உரை: சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்: (1963).

களை வாங்கியாயிற்று. அவை பெருந்துறையில் உள்ளன. புரோகிதர்கள் ஆவணிமாதம் பத்தொன்பதாம் தேதி நல்ல நாள் என்று குறித்ததால் அவற்றை என்னுடன் கொண்டு வரவில்லை.'' இவ்வாறு மறுமொழி கூறி இறைவன் அளித்த மாணிக்கக் கல்லை அரசனுக்கு அளித்தார். மன்னனுக்கு பெருமகிழ்ச்சி. நம்மிடம் முதன் மந்திரியைப் பற்றிக் குறை கூறியவர்கள் பொறாமையினால் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

குதிரைகள் மதுரை வர இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. இதற்கிடையில் மன்னரது நம்பிக்கைக்குத் தன்னைப் பாத்திரமாக்கிக் கொண்ட ஒரு மதி மந்திரி அவரது செவியில் ஓதலானார். ''நடந்தது இதே—(பெருந்துறையில் தான் கண்டவற்றைத் திரும்பவும் ஒப்பித்தார்) — உம்மை உம் முதலமைச்சர் ஏமாற்றி விட்டார். முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கிறார். பெருந்துறையில் கம்பீரமான உருக்கொண்ட சிவகுரு ஒருவருக்கு அடிமையானார் அவர். சிவமதத்திற்காகவே உம் பொருளையெல்லாம் அவரிடம் அர்ப்பணித்துவிட்டார்.''

இவ்வாறு இருக்கலாம். மணிவாசகருடன் பெருந்துறைக்குச் சென்ற செல்வாக்குடைய அரசு அதிகாரிகள், புத்தமதத்தைச் சார்ந்தோராக இருந்திருக்கலாம். நடந்ததை எல்லாம் அவர்கள் பார்த்தார்கள்: கேட்டார்கள். ஆனால் ஒன்று; சைவ சித்தாந்த நெறிப்படி, சிவாசாரியார் ஒவ்வொருவரும் சிவனாரின் மறுஉருவமே: பிற மதத்தார்க்கு அவர்களது கணிப்புப்படி சிவனடியார்கள் ஒருமரபு சார்ந்த உபாசகர்களே.

மன்னன் மனம் மாறியது. தான் நம்பிக் கொடுத்த திரவியங்கள் அனைத்தையும் திருப்பித் தரும்வரை அவரைச் சிறையில் அடைக்கப் பணித்தார். 'ரூல்'படி பார்த்தால் இது நியாயந்தான். ஆனால், கடவுளின்

நோக்கு, கருத்து வேறு. இயற்கை நியதி எல்லாம் துன்புறும் மாணிக்கருக்கு அநுதாபம் காட்டினவாம். சூரியன் தன் சுடர்களை அடக்கிக் கொண்டானாம். திங்கள் தனது ஒளியை சிறிதே மங்க வைத்தானாம். நட்சத்திரங்கள் இமைக்கவில்லையாம். மரங்களும் செடி கொடிகளும் தலை தாழ்ந்தனவாம். வையகமே துயரில் ஆழ்ந்தது என்கிறார் கவிஞர். சிறைபூண்ட மணிவாசகர் இறைவனை ஓயாது துதிக்கின்றார். குதிரைகள் வரப் போகும் நாளோ அருகே, அருகருகே வந்துகொண்டிருக் கிறது.

4. குதிரைகள்

''தம் மக்களின் துயர் துடைப்பது தந்தையின் கடமை'' என்ற நெறி பிறழாமல் சிவனார் மதுரைக்கு குதிரைகளுடன் வருகிறார். தனையனைக் காக்கும் கடன்தான் அவர் வருகை, எனினும் ஒன்றை மனத்தில் கொள்ள வேண்டும். சிவபெருமான் குறும்புக்காரர். தம் பக்தர்களைத் திகைக்க வைப்பார். குழப்புவார். ஏமாற்றிக் கெக்கெலி கொட்டுவார். திருவிளையாடல் என்று சிவ பக்தர்கள் கூறிப் புகழ் பாடுவது இந்தத் தன்மையைத் தான். தில்லைத் தாண்டவம் வேறெது பற்றியது?[10]

இங்கு எப்படி விளையாடுவது? பக்கத்துக் காடுகளில் உள்ள நரிகளைத் திரட்டி, அவற்றைக் குதிரைகளாய் மாற்றி, மாறுவேடம் பூண்ட சிவகணங்களை அவற்றின் மேல் ஆரோகணித்து வரச் சொல்லுகிறார். தானே குதிரை வணிகர் வேடம் பூண்டு குதிரை அணிவகுப்புக்குத் தலைமை தாங்குகிறார்.

பாண்டிய மன்னனுக்குச் செய்தி போகிறது. ''நாம் வாங்க விழைந்த குதிரைகள் வந்துவிட்டன; எத்தனை

---

10. விளக்கக் குறிப்பு ஆறு.

குதிரைகள்? அவற்றின் குளம்பெழுப்பும் புழுதி மேகத்தையே மறைத்து விட்டது.'' மன்னனுக்குச் சொல்லொணா வருத்தம். பரிவு. நம் முதலமைச்சரை எவ்வளவு கேவலமாக மதிப்பிட்டு விட்டோம்? தவறு. பெருந்தவறு. சிறைப்பட்ட முதல்வரை விடுவித்து, வாங்கி வந்த குதிரைகளைப் பார்வையிட்டு வாங்கும் சடங்கிற்கு அவரைத் தன்னுடன் அழைத்துப் போகிறான்.

குதிரைப் பட்டாளத்தின் தலைவனை மணிவாசகர் பார்க்கிறார். ஓ! இவர் நமக்கு உபதேசமளித்த சிவஞான போதகர் அன்றோ? ஒரு தலை அசைவு, ஆசிரியர் தம் மாறுவேடத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை. வல்லமை யின் எல்லையாம் கடவுளே பாண்டியன் முன் நிற் கின்றார், குதிரைச் சாட்டையுடன். பேரம் முடிந்தது. என்ன விந்தை! பாண்டிய மன்னன் கொடுத்தனுப்பிய தொகையைப்போல் நான்கு மடங்கு பெறும் அரபுக் குதிரைகளை விலை பேசி முடித்தாகி விட்டது. மன்னனுக்குப் பெருமகிழ்ச்சி; பரமானந்தம். மாண்பு மிக்கோர் அணியும் ஆடை ஆபரணங்களைக் குதிரைத் தலைவருக்கும் அவருடன் வந்தவர்க்கும் அளித்தார். அவற்றை ஏனோ அவர்கள் மகிழ்வுடன் பெற்றுக் கொள்ள வில்லை. சற்று உதாசீனம் செய்ததாகவே தோன்றியது. ''பரவாயில்லை. வெளிநாட்டு ஆட்கள் நமது மரபு தெரிந்திருக்க மாட்டார்கள்'' என்று மன்னன் அதைப் பொருட்படுத்தவில்லை.

குதிரைகளை அவற்றின் இருப்பிடம் சேர்த்தாயிற்று. குதிரை வர்த்தகரும், அவரைச் சார்ந்தோரும் விடை பெற்றுச் சென்று விட்டார்கள். மன்னனும் மந்திரியும் தத்தம் மாளிகைகட்கு ஏகினர். துயிலாட்டும் இரவின் இருள் மதுரை மாநகரைச் சூழ்ந்தது. நெடு நேரத்துக் கில்லை. வெள்ளி முளைக்குமுன் பயங்கர ஊளைச் சத்தம். எங்கிருந்து வருகிறது அது? மன்னரது குதிரை இலாயங்களிலிருந்தல்லவா? ஆம்; பரிவேடம் பூணப்பெற்ற

நரிகள், தம் சுயருபத்தை அடைந்து ஊளையிடலாயின. பக்கத்தில் உள்ள நிஜப்பரிகளையே தாக்கிக் கடித்துமிழ்ந்தன. இவ்வளவு அட்டகாசம் செய்தபின்னர் பரி—நரிகள் வானகத்துள் சென்று மறைந்தன.

மன்னன் விழித்துக் கொண்டான். நம்மை ஏமாற்றி விட்டார்கள் என்று உணர்ந்து கொண்டான். ''யார் செய்தது இது?'' ''மாணிக்கவாசகர்.'' ''அழைத்துவா உடனே அவனை வருகிறார். மன்னன் வெடிக்கின்றான். ''என்னையா வேடமிது? என்ன ஏமாற்று? நான் கொடுத்த செல்வத்தையெல்லாம் நீ எனக்குத் திருப்பித் தர வேண்டும். அதுவரை வறுக்கும் வெயிலில் இப்போது வறண்டிருக்கும் வைகைநதி தீரத்து மணலில் முதுகில் ஒரு பாறையைத் தாங்கி மண்டியிட்டு இருக்க வேண்டும். சேவகர்களே, கொண்டுபோம் இவனை.''

என்ன செய்வார் மணிவாசகர்? தன்னையும் மன்னனையும் ஏமாற்றிய தம் தலைவரிடமே முறையிட்டுக் குமுறினார். சிவனுக்கா தெரியாது, என்ன செய்வதென்று? திருவிளையாடல் பழக்கமான காரியம் தானே? தன் சடைமுடியில் உள்ள கங்கையைப் பணித்தார். ''நீ உடனே சென்று வைகையில் வெள்ளம் வரச்செய். மதுரை மாநகரத்தையே புனலில் அமிழச் செய்.'' கங்கை அவ்வாறே செய்தாள். 'மதயானைக் கூட்டம் மலையினின்று இழுந்து வந்தற்று' கங்கை வெள்ளம் வைகையில் பாய்ந்தோடியது. மதுரை மாநகர் நீரில் அமிழும் நிலை வந்தது, மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. நேற்று வறண்டிருந்த வைகையில் இன்றைக்கு இத்தனை வெள்ளமா? நாம் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும். கூப்பிடு முதலமைச்சர் வாசகரை. ''ஐயா, நீரே முதலமைச்சர், மதுரை நகர் அழியாது பாதுகாப்பது உம் பொறுப்பு. செய்யும் ஏதாவது. பொறுப்பு உமது.''

கடமை வழுவ முடியுமா? முதலமைச்சர் ஆணையிடுகிறார். மதுரைவாழ் மக்கள் அனைவரும் ஒத்துழைத்து

வெள்ளத்துக்கு அணை போடவேண்டும். இன்னார்க்கு இதுவென்று திட்டம் போடப்பட்டது. அதன்படி ஒவ்வொருவரும் அணைபோடச் செயல்பட வேண்டும்.

மதுரையில் ஒரு ஏழைக்கிழவி. செம்மனச் செல்வி என்று பெயர்.[11] பிட்டு செய்து அதை விற்று ஜீவனம் நடத்தி வந்தாள். அவளுக்கும் இந்த ஆணை போயிற்று. ''உன் பொறுப்பில் உள்ள இடத்துக்கு நீ அணை கட்ட வேண்டும்.'' உடலிலோ சக்தி இல்லை. கூலியாள் அமர்த்தலாம் என்றால் கூலி கொடுக்கக் காசில்லை. செய்வதென்ன? சொக்கநாதரிடம் முறையிடுதான். முறையிட்டு ஆலயத்தை விடுத்து கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளிவந்த பாட்டியை ஒரு இளைஞன்—கிராமத்துக்காரன்—தலைமேல் மண் சுமக்கும் கூடையும், தோள்மீது ஒரு மண்வெட்டியும் கொண்டு எதிர்ப் படுகிறான்.[12]

''எனக்கு வேலையில்லை, ஒரு வேலை தருவாயா? எனக்குச் சாப்பாடு போடு போதும், நீ என்ன வேலை சொன்னாலும் செய்கிறேன்'' என்றான். கிழவிக்குப் பெருமகிழ்ச்சி. என் பிரார்த்தனைக்கு இத்தனை விரைவில் பலனா? பாவம், அவளுக்கெப்படித் தெரியும் தன் முன் நிற்பது, தான் முறையிட்டுக் கொண்ட சிவனே என்று?[13]

---

11. வந்தி என்பது கர்ணபரம்பரையாக வழக்கத்தில் உள்ள பெயர். ('The true-hearted happy one') என்பது போப் அவர்களின் ஆங்கில ஆக்கம்.

12. மொ.பெ.கு. 'பதினாறாண்டின் பருவத்துப் புழுதி படைத்த திருமேனி பொலிய வலிய நடை நடந்தான்' (திருவிளையாடற்புராணம், பதிப்பாசிரியர் மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஸ்ரீ தியாகராஜ விலாச வெளியீடு, (1972) பக்கம் 143. முற்குறிப்பிட்டது).

13. கூலி பேசியது பற்றி போப் அவர்கள் குறிப்பிட வில்லை. பிட்டுக்கு மண் சுமந்த 'ஒப்பந்தம்' பற்றிய

ஒப்பந்தப்படி இளைஞன் வேலையை மேற்கொண்டான். மண்ணை இங்கு கொஞ்சம் கொட்டுவான். அங்கு சிறிது கொட்டுவான். அங்கெங்கும் திரிந்து, பாட்டுக்கள் பாடி, ஆட்டங்கள் ஆடி வெகு உற்சாகத்துடன் இருந்தான். மேற்பார்வையாளர்கள் ('inspectors of the work' என்பது போப் அவர்களின் வாக்கு) 'இவன் ஒரு கிறுக்கு' என்று தீர்மானித்தார்கள். ஆனால், என்னதான் குறும்புத்தனம் செய்தாலும், இளைஞன் 'பணி' வீண் போகவில்லை. நதிக்கா அவனைத் தெரியாது? அவன் 'வேலை' செய்யும் இடத்தினில் தன்னைக் குறுக்கிக் கொண்டாள் கங்கை. வேலையாள் பிட்டெல்லாம் தீர்த்து விட்டு மண் சுமக்கும் கூடையையே தலையணையாய் வைத்து ஒரு சிறு தூக்கம் போட்டான். மன்னருக்கு இந்தச் செய்தி போயிற்று. தூங்கும் கூலிக்காரனை கஷ்டப்பட்டு எழுப்பி மன்னர் முன் நிறுத்துகிறார்கள். இன்னும் தூக்கக் கலக்கம். தன் தரப்பாக (in defence) ஒன்றுமே சொல்லவில்லை அவன். இவனுக்குப் பிரம்படி கொடுங்கள் என்று பணிக்கிறான் மன்னன். கொடுக்கப்பட்டது பிரம்படி, உலகனைத்தும் உள்ளவர் ஒவ்வொருவர் முதுகிலும் அந்த அடி வலித்தது. கடவுளர்க்கும் வலித்தது. உலகமே அசைவின்றி நின்றது. கண்விழித்துப் பார்த்தால், கூலியாள் மாயமாய் மறைந்து விட்டான்.[14] அந்தர்த்தியானம்.

கவிதை திருவிளையாடற்புராணத்தில் உள்ளது. (முன் குறிப்பிட்டது), பக்கம் 144. கவிதை இது:

''அந்தித்து இருக்கும் பொருளில்லை ஐயரே
கந்தித்து வெந்தாய் நறுவிதாய்க் கண்ணுக்குச்
சிந்தை குவந்திருக்கும் செவ்விகூர் பிட்டுண்டு
முந்தத் தருகவல்யான் என்றாள் முதுநிரையாள்''

14. இது பற்றிப் போப் அவர்கள் நினைவூட்டும் திருவாசகப் பதிகம் இது:

5. மணிவாசகரது அமைச்சரவை

இப்படி நடந்ததொன்றும் மாணிக்கவாசகருக்குத் தெரியாது. இந்தச் செய்தி கிடைத்ததும், அவருக்கு அளவிலாத் துயரம். சிவனையே இப்படி அவமதித்து விட்டார்களே என்று ஒரு புறம். இத்தனை தூரம் அவர் வந்தும் அவரைப் பார்த்துப் பேசத் தருணம் கிடைக்க வில்லையே என்ற ஆற்றாமை மறுபுறம். மன்னன் வருகிறான், தன் முதலமைச்சரைக் காண. ''தவறெல் லாம் எனது; தங்களைப் போன்றவரை அமைச்சராக்கிக் கொள்ள எனக்குத் தகுதி ஏதும் இல்லை. இந்த அரசு இனி உமதே. நான் விலகிக் கொள்ளுகிறேன்'' என்றான். மணிவாசகருக்கு விருப்பம் ஒன்றே. பெருந்துறைக்கு மீண்டும் சென்று, சிவனடியில் பணி செய்து கிடப்பதே. மன்னனுக்கு வேறென்ன வழி? ஒப்புக் கொண்டு தன் அரண்மனைக்குத் திரும்பிச் செல்கிறான். மணிவாசகப் பெருமான் மந்திரிக்குரிய ஆடை ஆபரணங்களைக் களைந்து, துறவியின் உடையணிந்து, புது வாழ்வினை எதிர்நோக்கி நின்றார். அவரது மாற்றம் முழுமை பெற்றது. அவர் எதிர்ப்பட்ட சோதனைகள் எல்லாம் முடிந்தன. இனி தம் குருவின் சேவடியில் தம்மை அர்ப் பணிப்பதே அவர் கடன்.

'' மண் சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தின் பெம்மான்,
பெருந்துறையான்,
விண் சுமந்த கீர்த்தி விபன் மண்டலத்தீசன்,
கண் சுமந்த நெற்றிக் கடவுள், கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக் கோவான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி, பாடுதுங்காண்
அம்மானாய்''

(திரு அம்மானை 47)

(உரைநடை 'மொழி பெயர்ப்பு' அவசியமில்லை என்று நம்புகிறேன். —மொ. பெ.)

(சிவனுக்கும் அலுத்துவிட்டது போலும்!) ''நாம் இவ்வுலகிற்கு வந்த பயன் கிட்டிவிட்டது. நாமும் கைலாசம் திரும்பிப் போகிறோம்'' என்றார். தம்மோடு வந்த 999 சிவகணங்களுக்கு இது ஆணை. 'மாணிக்க வாசகருடன் இங்கேயே இருந்து அவர் பணிக்கு உதவி செய்யுங்கள். இத்தடாகத்தில் தீ வளரும் போது அதில் குதித்து எம்மிடம் வந்து சேருங்கள்'. பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். புதுச்சீடருக்கோ இது மற்றுமோர் சோதனை. நண்பர்களெல்லாம் சென்று விட்டபின், தனித்திருந்து சைவ சித்தாந்தத்தை நிலைநிறுத்த வேண்டும். இயலுமா? சிவனார் செல்வதன்முன், பிறகு ஒரு தரம் கொன்றை மரத்தடியில் இறைஞ்சுகின்றார். ''ஐயா, உம்முடனே நான் வந்து வெள்ளியங்கிரியில் என்றென்றும் உம்மோடு இருக்கப் பணித்தருள்க.'' ''இல்லையப்பா, நாம் எங்கும் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள். எம் பணி நீ செய்யும் போதெல்லாம், செய்யும் இடத்திலெல்லாம் நாம் உன்னருகேயே இருப்போம், பொறுத்திரு. உத்திரகோசமங்கையில் எண்வகை சித்திகளும் உனக்கு உபதேசமாகும் (ஆறாவது சதகம் காண்க).[15] அங்கிருந்து நீ ஆலயம் ஆலயமாய் யாத்திரை செய்து சிதம்பரம் சேருவாய். அங்கு புத்தர் களை வாதிட்டு வென்று நம்மிடம் வருவாய்''. இவ்வாறு செப்பிச் சிவனார் மறைந்து விட்டார். தனியனாராகிய மணிவாசகர் கொன்றை மரத்தடியில் ஒரு இலிங்கத்தை உருவகித்து, அதை அனவரதமும் பூசை செய்யலுற்றார். அவரது கவிதை வெள்ளம் அப்போதே தொடங்கியது. மாணிக்கவாசகர் பாடி அருளிய திருவாசகத்தின் ஐம்பத்தி இரண்டு பாடல்களில் இருபத்தொன்றைப் பெருந்துறை யிலேயே இயற்றினர் என்பர். சிவனார் புகழ், அவரைப் பிரிந்திருக்க வேண்டிய நிலையினால் விளைந்த துயரம் —

---

15. மொ. பெ. கு. நீத்தல் விண்ணப்பம்.

இவையே அக்கவிதைகளின் கரு.[16] துக்கமும் துயரமும் மேல் எழுகின்றன — நாளுக்கு நாள். முடிவு வேண்டாவா இதற்கு? முடிவு வருகிறது. ஒரு நாள், எல்லோரும் தொழுகையில் ஈடுபட்டிருக்கையில், தடாகத்தில் தீக்கனல் பொங்கி எழுகின்றது. சிவனார் சொற்படி 999 சிவகணங் களும் அத்தீயினில் பாய்ந்து மறைகின்றனர்.

மணிவாசகர் தனியன் ஆனார். கொன்றை மரத் தடியில் சிவனார் இருந்து மறைந்த அம்மரத்தடியில்— தனியே, தன்னந் தனியே, அமர்ந்து தமது துயரங்களை, இடர்பாடுகளைக் கவிதைகளாய்ப் பொழிகின்றார். பெருநிதியாம் திருச்சதகம் அப்போதே இயற்றப்பட்டது.

போதும் இத்தனி வாழ்க்கை. மணிவாசகர் வாழ்வினில் ஒரு புதிய வேற்றுநிலை பிறந்தது. ஊர்

---

16. மொ. பெ. கு. திருச்சதகமும் (திருப்பெருந் துறையில் எழுதப்பட்டது.) நீத்தல் விண்ணப்பமும் (உத்தரகோசமங்கையில் பாடல்களில் இயற்றப்பட்டது.) மாணிக்கவாசகரது இம்மனநிலையைச் சித்தரிக்கின்றன. எடுத்துக்காட்டுக்கு இரு பாடல்கள்.

'' பாட வேண்டு நான் போற்றி ! நின்னையே
பாடி நைந்து நைந்துஉருகி நெக்கு நெக்
காட வேண்டு நான் போற்றி ! அம்பலத்(து)
ஆடு நின் கழற்போது நாயினேன்
கூட வேண்டு நான் போற்றி ! இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி ! வீடுதந்(து)
அருளு போற்றி, நின் மெய்யர் மெய்யனே''

—திருச்சதகம் 100

கடையவனேனைக் கருணையினால் கலந்து
ஆண்டுகொண்ட
விடையவனே, விட்டிடுதி, கண்டாய் ! விறல்
வேங்கையின் தோல்
உடையவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே !
சடையவனே, தளர்ந்தேன், எம்பிரான், என்னைத்
தாங்கிக் கொள்ளே?

—நீத்தல் விண்ணப்பம்

ஊராய்ச் செல்லலானார். சென்ற இடங்களெல்லாம், அவ்வூர்த்திருக்கோயில் பற்றிக் கவிதைகள் ஆற்றலானார். சம்பந்தர், அப்பர் போன்ற சமயக்குரவர்களை விட இவரது பயணம் சற்றுச் சுருக்கமாகவே, அடக்கமாகவே இருந்தது.

இறுதியில் தில்லை வந்து சேர்கிறார் மாணிக்கவாசகர். தில்லை அவரது எல்லை. மதுரைக்கோ, பாண்டிய நாட்டுக்கோ அவர் செல்லவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அவர் தில்லை மாமுனிவர் ஆயினார். சோழ நாட்டுச் சொத்து அவர் இப்போது. தில்லைமாநகரில் எழுந்தருளிய சிவபெருமானைப் பற்றிய அவரது பாடல்கள் — என்ன சொல்லுவது — கிடைத்தற்கரியவை (விளக்கத்திற்கு ஆறாம் குறிப்பைக் காண்க). துயரும் வருத்தமும் இல்லை, இப்பாடல்களில். நடமாடும் அம்பல வாணனைக் கண்டு அனுதினமும் அவனை வணங்கும் பாக்கியம் பெற்ற பெரு மகிழ்ச்சி இவற்றில் கும்மாள மிட்டுக் குதித்தாடுகின்றது. (விளக்கம் ஏழாவது குறிப்பில்.)

6. புத்தர்கள் வருகை, மணிவாசகரின் உய்வு

சில நாட்கள் சென்றபின், அவருக்கு இருப்புக் கொள்ள வில்லை. இலங்கைக்குப் பயணமுற்றார். அந்நாட்களில், இலங்கைக்கும் தமிழகத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. இலங்கைவாழ் மக்களுடன் உரையாட வல்லவர் மணிவாசகர் என்று சரித்திரம் கூறுகிறது. எனவே, தமிழர்கள் அதிகம் வாழும் இலங்கையின் வடபகுதிக்கே அவர் சென்றிருக்க வேண்டும். துறவுக் கோலம் பூண்டு சென்றார். கோவணம் மட்டுமே அணிந்து, உருத்திராக்ஷ மாலை சூடி, மேனியெல்லாம் வெண்ணீறு துலங்க, ஒரு கையில் மணி பதித்த தண்டமும், மற்றொரு கையில் மண்டையோடுமாய் பிச்சை எடுத்து

உண்டு அவர் இலங்கையில் திரியலானார். அனுதினமும் பொன்னம்பலத்தவரே அவரது மூச்சு, நினைவு, பேச்சு !

புத்த குருமார்கள் இவரது வருகை பற்றித் தம் மன்னருக்கு அறிவித்தார்கள். அரசன் இவரைத் தன்னை வந்து காணுமாறு பணித்தான். முதலில் மாணிக்க வாசகர் இசையவில்லை. ''நானோ பரதேசி, பிச்சை யெடுத்து உண்பவன். மன்னர்களிடம் எனக்கு என்ன வேலை?'' இறுதியில் மன்னனைச் சந்திக்க இசைந்து, சந்திக்கவும் செய்கிறார். அரசவையில் புத்த குரு, தமது சமய ஆகமங்களுடன் சிவனடியாரைச் சந்திக்கிறார். துறவுப் பண்பில் புத்த குரு நமது சைவ குரவருக்குச் சற்றும் சளைத்தவர், இளைத்தவர் அல்லர். 'இதென்ன ஐயா, பொன்னம்பலம் என்று நீர் கூறி வருவது?' என்று புத்த சமயத்தார் கேட்டார்கள். 'ஓ, அதுவா, சிவபெருமான் தாண்டவமாடும் சந்நிதி அது. சோழ மன்னர் எப்போதும் வழிபடும் கோயில்.' — இது மறுமொழி ! (சிதம்பரத்தைப் பற்றிய கூற்றுக்கள் எல்லாம் உமாபதியார் இயற்றிய கோயில் புராணத்தில் விவரிக்கப் பட்டுள்ளன. விளக்கத்திற்கு ஆறாம் குறிப்பைக் காண்க.) புத்தகுருத் தலைவர் எள்ளி நகையாடினார். 'தில்லைக் கோயிலுக்கு வந்து உம் கடவுளை அவரது இருக்கை யிலிருந்து — சிம்மாசனம் என்பீர்கள் இல்லையா? — அதிலிருந்து இறக்கித் தள்ளிவிடுகிறேன்' என்று சூளுரைத் தார்.

காட்சி மாற்றம். இடம் தில்லையம்பலம். இலங்கை யிலிருந்து வந்த புத்த குருமார்கள் கோயில் பிராஹாரத் திலேயே தங்கி இருக்கிறார்கள். ஈழ மன்னனும், பிறவி ஊமையாகிய தன் மகளுடன் வந்திருக்கிறான், சோழ மன்னருக்குச் செலுத்த வேண்டிய கப்பத்துடன்.

7. முனிவரும் சிங்களத்துப் புத்தர்களும்

தில்லைவாழ் மக்களுக்கு ஒரே மலைப்பு. ஈழத்தரசன் சோழநாட்டைக் கைப்பற்றிப் புத்தமதத்தை நம்பால் திணிக்க முற்பட்டானோ? தில்லை மூவாயிரவர் சினந்தனர். நம் கோயிலில் அழையா விருந்தாளிகளாக இருக்கும் இந்த சிங்களவரை வன்முறையால் வெளியேற்றி விடலாமா? இவ்வாறு அவர்கள் சிந்திக்கையில், சிவபிரான் அவர்கள் கனவில் தோன்றிக் கோயிலுக்கருகே தியானத்திலிருக்கும் மாணிக்கவாசகரை அழைக்குமாறு பணித்தார். கடவுளே அழைக்கும்போது வாராதிருந்தால் எப்படி? சிவநேசர் வருகிறார். பெருஞ்சபை ஒன்று கூடுகிறது. மேடையில் ஒரு புறம் சோழமன்னர், அவரது அமைச்சர்கள், மணிவாசகர். எதிர்ப்புறம் சிங்கள மன்னன், அவரது பரிவாரங்கள், தலைமை புத்த குரு. சைவ மதத்தின் ஒரே பிரதிநிதியான மணிவாசகருக்கு ஒரு உயர்ந்த இருக்கை உருவாக்கப்பட்டது. அது, மற்ற இருக்கைகளை விட உயரமானதாக அமைக்கப்பட்டது. பிரம்மதேவனும் தேவகணங்களும் வீற்றிருக்கின்றனர்.[17] சோழமன்னன், மணிவாசகருக்குத் தலைதாழ்ந்து கூறுகின்றான்: ''மாமுனியே! சைவ சித்தாந்தத்தை உலகெங்கும் பரப்புவது உம் பொறுப்பு. இந்த புத்தர்களைச் சிதைத்தெறிவது என் பொறுப்பு.'' (நடைபெறும் இவ் வாதத்தினைப் பற்றி எட்டாம் குறிப்பில் விரிவாகக் காணலாம்.) விவாதத்தின் கருப்பொருள் என்ன? புத்த சமய சித்தாந்தப்படி 'கடவுளுமில்லை, ஆன்மாவும் இல்லை, முக்தியும் இல்லை.' வாதங்கள் தொடர்கின்றன. முடிவில் மணிவாசகர் பொறுமை இழந்து கலைமகள் வாணியை

---

17. மொ. பெ. கு. இதன் பொருள் எனக்குச் சரியாக விளங்கவில்லை. உயர்வு நவிற்சியாக இருக்கலாம்.

விளிக்கின்றார்: ''இறைவனைப் பழிக்கும் இக் கயவர் நாக்குகளை நீ ஏன் பேசவிட்டாய்?''

அவ்வளவில், புத்தர்கள் அனைவரும் ஊமைகளாயினர். ஈழத்து அரசனுக்கு அதிர்ச்சி. என்ன அதிசயம் இது! நடந்ததைக் கண்டு உணர்ந்து தானும் சைவனானேன் என்று கூறுகிறான். 'ஒன்று மட்டும்; பிறவி ஊமையாகிய என் மகளின் நா திறக்கச் செய்யுங்கள்.' அவ்வாறே ஆயிற்று. அரசகுமாரியின் உயிர் பெற்ற நாவினின்று புத்த சமயக் கொள்கைகளின் எதிர்ப்பு மடைமடையாய்ப் புனலெனப் பொங்கி வந்தது. அவள் அப்போது கூறியன திருவாசகத்தின் பன்னிரெண்டாம் சதகமான திருச்சாழலில்[18] இடம் பெற்றவை என்று சொல்லுவர். இறுதியில் புத்தர்கள் தம் மத உடைகளை நீத்துத் திருநீறணிந்து தில்லையில் வாழ்வுற்றனர். இது நம் முனிவரின் நிறைவான வெற்றியாம்.

8. உய்வு

புத்தர்களை வெற்றி கண்டபின் வாதவூரார் நான்கு அழகிய பதிகங்களை இயற்றினார் என்பது மரபு. ஒரு நாள், பாண்டி நாட்டினின்று ஒருவன் — முற்றிலும் அறிமுகமில்லாதவன் — மணிவாசகரிடம் வந்து அவரது பாக்களை அவரே பாடி அவற்றைத் தான் பிரதி செய்து கொள்ள வேண்டுமெனக் கோரினான். 'அவ்வாறே ஆகுக!' கவிஞர் சொல்லச்! சொல்ல, அவற்றை ஓலையில்

---

18. மொ. பெ. கு.: திருச்சாழலில் (சாழல் என்பது ஒரு வகை மகளிர் விளையாட்டாகும். முதற் செய்யுள்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

பதித்துக் கொண்டு வந்த இளைஞன் மறைந்து போனான். சிவனே அவன், சொக்கநாயகன். தன் மதுரைப் பீடத்தினின்று விட்டிறங்கி இதற்காகவே தில்லை ஏகினவன். நேரே கைலாயத்துக்குச் சென்று, தெய்வ கணங்களைக் கூட்டி, அவர்களுக்கு மணிவாசகரின் பாக்களை அறிமுகப்படுத்துகின்றான்.

மறுநாட் காலை: தேவன் சிலையடியில், தேவன் தம் கையால் எழுதிய மணிவாசகரின் பாடல்கள், தேவனது முத்திரையுடன் கிடக்கின்றன. அடியார்கள் இதைக்கண்டு இறும்பூது எய்தியவர்களாய், இப்பாடல் களைப் பாடலாயினர். இவற்றிற்கெல்லாம் உட்பொருள் என்ன? ஆசிரியரையே கேட்டு விடலாமே. செல்வோம் வாருங்கள். மணிவாசகரிடம் போகிறார்கள் அவர்கள். விடை தேடி என்னோடு வாருங்கள் என்றார் அவர். பொன்னம்பலத்துக்கு அவர்களை அழைத்துச் சென்று, கடவுள் சிலையைக் காட்டிச் 'சபாபதியே இவற்றின் உட்பொருள்' என்று கூறி மறைந்தார். இறைவனுக்குள் இரண்டறக் கலந்தார். கூடச் சென்ற சிவபக்தர்கள் எல்லையிலா ஆனந்தத்தோடும், மாணிக்கவாசகரை வணங்கும் உணர்வோடும் தத்தம் இல்லம் ஏகினர்.[19]

''ஆண்டு (தில்லையில்) நிகழ்ந்த ஐயமும் வினாவும், அவற்றைப் போக்க மெய்மை நாட்டிய விடையும் உலகில் நிலைத்து நின்று வழிகாட்ட அவ்வூமைப் பெண் ணின் வாய்மொழியாகத் தோற்றுவித்தருளினர் இத்திருப் பதிகத்தை என்ப.''

திருவாசகம்: திரு. ப. இராமநாத பிள்ளை — விளக்க வுரை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு, (1976) பக்கம் உருக (251)

19. மொ. பெ. கு. ஒவென்று

சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
—சிவபுராணம்: 91—3

மாணிக்கவாசகரின் பாடல்களை ஆனந்தக் கண்ணிருடன் எல்லா ஆலயங்களிலும் பாடுகின்றனர் பக்தர்கள். திருவாசகத்தால் உருகாத இதயம் கல்லே என்பது பரம்பரை வழக்கு. இப்பாடல்களில் சில இடைச்செருகல்களாய் இருக்கலாம். எவ்வளவு தூரம் இப்பாடல்களில் மேற்றிசைக் காற்றின் சாயல் உள்ளது என்பதைக் கணிப்பது கடினம்.[20] வாதவூரர் மனமொழி மெய்யால் கடவுளை இறைஞ்சி நின்றார் என்பதில் மட்டும் ஐயமில்லை.

தாழ்வுற்ற சைவத்தைத் தழைக்கச் செய்த மணிவாசகரின் பணி மிகமிக விரைவில் செயலாற்றப்பட்டதொன்று. விரைவு மட்டுமன்று. அப்பணி நிலைபெற்றதாகவே ஆயிற்று. நிலைபெற்றது என்று எதற்குச் சொல்லுகிறேன் என்றால், பிறிதொரு காலத்தில் புத்த சமண சமயங்கள் தலை தூக்கினாலும், சைவக் குரவர்கள் பலர் — அவர்களை மணிவாசகரின் சீடர்கள் என்றே கொள்ளவேண்டும்; எனினும், அவர்களது பாடல்களில், வாதவூரரைப் பற்றி ஒரு குறிப்பும் இல்லாதது வியப்பே— அவற்றை மீண்டும் தலைதாழச் செய்தனர். சிவாலயங்கள் பற்பல தமிழகத்தில் சமைக்கப்பட்டனவென்றால், அதற்கு அடிக்கல் நாட்டியவர் மாணிக்கவாசகரே.

---

20. மொ. பெ. கு.: ஏற்கனவே போப் அவர்கள், புனித அகஸ்டின், புனித பால், புனிதஃபிரான்சிஸ் ஆகியோரை மணிவாசகருடன், ஒப்புமை காட்டியிருக்கிறார். சரித்திரப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்தை இங்கு நினைவு கூறவேண்டும். அவர் கூறுவது: "Some would trace Christian influences in the trend of the saint's (Manikkavacagar's) thought and feeling; the parallel with some aspects of Christian experience is clear enough; but of any direct borrowing, there is no proof; and, on the whole, the differences are more important than the resemblances", K. A. Nilakanta Sastri, op; cit; p. 360.

இந்நிலையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர் ஆணைப்படி பலரையும் துன்புறுத்தியதாகக் கூறப்படுபவை கற்பனைக் கதைகள். உண்மையானால் இவை மற்றோர் சகாப்தத்தைச் சேர்ந்ததாகவே இருக்கும். மணிவாசகரது பக்தியும் பற்றும் ஐயத்துக்கு அப்பாற்பட்டவை. 'பெருந்துறையில் சிவனைக் கண்டேன், அவரைக் கண்டதிலிருந்து இருளினின்று வெளிப்பட்டு ஒளியைக் கண்டேன்' என்று அவர் சொல்லிக் கொண்டே இருந்தார். தாம் எதைக் கண்டேன், எதை உணர்ந்தேன் என்று நம்பினாரோ, அவற்றை எல்லாருக்கும் அவர் எடுத்துரைத்தார். போதிப்பதில் மிகத் தேர்ந்தவர் அவர்.[21] மிக உண்மையானவர். அவரது அடிப்படைப் போதனைகள் தாம் என்ன? கடவுள் ஒருவரே. நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கடவுள் (personal God) இருக்கலாம். இது வெறும் தத்துவக் கருத்தன்று. கடவுள் நிலையாக இருக்கிறார். அவர் எல்லோருக்கும் அதிபதி. (மணிவாசகரின் கூற்றுப்படி) சிவன் தம் கருணை நோக்கினால், இப்பூவுலகிற்கு மானிட வேடம் தாங்கிக் குருவாக வந்தருளினார். அவர் கூறும் முக்தி வழியை அனைவரும் பின்பற்றலாம். இதில் சாதி பேதமில்லை. விடுபட்ட ஆன்மாவுக்கு அழிவில்லை. அது நித்தியம். இவைகளில்தாம் பௌத்த மதக்கொள்கைகளுடன் வேறுபாடு உள்ளன.

ஆன்மாவுக்கு அழிவில்லை என்பதே சைவ சித்தாந்தம். ஒன்றை மனதில் கொள்ளவேண்டும் — இந்த அடிப்படைத் தத்துவத்தில், சைவக் கோட்பாட்டுக்கும் கிறித்துவக் கோட்பாட்டுக்கும் உள்ள ஒருமைப்பாட்டை, அடிப்படைத் தத்துவத்தைச் சகுனங்கள், சடங்குகள் போன்றவை ஒளிமறையச் செய்து விட்டன. எங்கும் இந்தக் கதைதான்.

---

21. மொ.பெ.கு. புனித பால் அவர்களது சாதனைகளை ஒப்பு நோக்கவேண்டும்.

சைவர்கள் தம் மதத்தைப் பரப்பியது இனிய தமிழ்ப் பாடல்கள் மூலமே. எளிமையான, இனிமையான இதயத்தைத் தொடும் மணிவாசகரின் பாடல்களுக்கு எத்தனை ஈர்ப்புச் சக்தி! நெஞ்சின் நாணினைத் தொட்டசைக்கும் கவிதைகள் அவை. அவற்றைப் படிப்பவர், கேட்பவர் எவருமே உணர்ச்சி வசப்படாமல் இருக்க இயலாது.

சிலை வழிபாடு தத்தம் மதக்கோட்பாடுகள் பற்றிச் சிலருக்குத் தவறாக இருக்கலாம். ஆயினும் கவிச்செல்வம் என்றும் போற்றற்குரியது.

சமண மதக் காவியங்கள் யாப்பிலக்கணப்படி சிறந்தனவே. கேலிச் சித்திரங்கள் மிக்கன. உலகாயதமானவை. ஆனால் மதப்பற்றினைத் தூண்டி எழுப்புவிக்கும் துடிப்பு அவற்றில் இல்லை. சொல்லப்போனால் நாலடியாரின் நானூறு செய்யுட்களில் இறைவன் பெயர் ஒன்றிலும் இல்லை. ஏன், தமிழ்மறையான திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாக்களில்கூட, இறைவனைப் பற்றிய குறிப்பு காணப்படுவது பத்தே குறள்களில்தான். இதனால்தான் மணிவாசகரது பக்திப் பாடல்கள் மக்கள் மனத்தை ஈர்த்தன. நேர் வழிபாட்டுக்கு ஒரு தேவன் தேவை. ஆன்மாவின் அழிவற்ற தன்மைக்கு ஒரு ஊன்றுகோல் தேவை. வழிபாட்டுக்கு ஒரு குரல் தேவை. மாணிக்கவாசகர் தம் கவிதைகளில் தமிழ் மக்களுக்கு இவற்றைத் தொகுத்து அடுக்கித் தந்தருளினார்.[22] [ஏழாம் குறிப்பைக் (Note VII) காண்க].

---

22. மொ. பெ. கு: சரித்திரப் பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்து இங்கு நோக்கற்பாலது. சாஸ்திரியார் கூறுவார். "The 307 padigams [hymns] of Appar constitute Books 4-6 of the Saiva Canon (Tirumurai) ...... the intensity of devotion that characterises them is excelled only in the Tiruvasagam of Manikkavasagar. K.A. Nilakanta Sastri, Op. Cit. P. 358.

(மேற்கண்டவை போப் அவர்கள் லண்டன் விக்டோரியா நிறுவனத்தில் ஆற்றிய உரை என்று கண்டோம். கீழ் வருவன அதைப்பற்றிய கருத்துப் பரிமாறல்கள்)

அவைத்தலைவர் திரு. ஹோவர்ட் (D. Howard, D.L.): டாக்டர் போப் அவர்களது கருத்துச் செறிந்த உரைக்கு நம் அனைவர் தரப்பிலும் முதலில் நன்றி கூறுகிறேன்.

போப் அவர்களது ஆராய்ச்சி அளப்பதற்கரியது. எவ்வளவோ காலம் செலவிட்டு, வெகுநுட்பமாக அவர் ஆற்றிய கருத்துரைபற்றி விமர்சனம் செய்ய எனக்கு தகுதி இல்லைதான். இருப்பினும் அவர் ஆற்றிய உரை, குறுகிய வரைக்கு உட்பட்ட விமர்சனத்துக்கோ, குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற புருவச் சுளிப்பிற்கோ, அப்பாற்பட்டது.

இத்தகைய ஆராய்ச்சிகள் அரியவை. அவர் கூறியவற்றுள் முக்கியமானதாக எனக்குப்பட்டது, புத்த ஆகமத்தின் நிர்வாண தத்துவம் (Nirvana). புத்தமத ஆகமங்களைப்பற்றி பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழும் நாம், சில கருத்துக்களை மனதில் கொண்டிருக்கிறோம். இத்தகைய நமது கருத்துக்களைவிடப் புத்த மதம் பரவிப்பெருகிய காலத்திலேயே வாழ்ந்திருந்த மாணிக்கவாசகரின் கருத்துக்கள் நுண்மையாகக் கூர்ந்து படித்து ஆராயப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. போப் அவர்களின் கருத்துரை சைவ சித்தாந்தத்தின் கொள்கைகளை, முறைகளை மிக அருமையாக சித்தரிக்கின்றது. கூர்ந்து பார்த்தால் ஒன்று தெரியும். பலருக்கு இது புரிவது இல்லை. சைவ சித்தாந்தத்தின் கொள்கைகள் பற்றிய அறிவு மாத்திரம் போதாது. அறிவினும் உயர்ந்தது உணர்வு. அதைத்தான் போப் அவர்கள் தம் உரையில் நுட்பமாக வலியுறுத்தி உள்ளார். நம்மில் பலர் கூறக்கூடும்: எத்தகைய உயர்ந்த மக்களவர்கள்? ஆனால் அவர்கள் எவ்வளவு தூரம் தமது கொள்கைகளை

கடைபிடித்தார்கள் என்பது அவர்களைப்பற்றி அவர்களுடன் வாழ்ந்தவர்களுக்கே புரியும்.

மேலெழுந்தவாரியாக ஒருசில கருத்துக்களைச் சொன்னேன். அவற்றைப் பற்றி என்னைவிட அறிந்த பலர் இங்கு உள்ளனர். அவர்களது கருத்துக்களை வரவேற்கின்றேன்.

அருள்மிகு கிர்பாட்ரிக் (Rev. R. C. Kirpatrick, M.A.,):

இக்காலத்தில் பல்வேறு மதங்களைப் பற்றிய ஆராய்ச்சி மிக முக்கியமானதொன்று. உலகில் உள்ள எந்த மதத்தைப் பற்றியினும் ஆராய்ந்து கூறும் கருத்துக்கள் கூர்ந்து எண்ணற்பாலவை, என் கருத்துப்படி, எல்லா மதக்கொள்கைகளையும் ஆராய்வது மிகவும் வேண்டற்பாலதொன்று.

பேராசிரியர் ஆர்சர்ட் (Professor H. L. Orchard, D. Sc.,)

ஓர் அரிய மனிதரைப் பற்றி, உலகம் யாவையும் கடந்து நிற்கும் பேருண்மையை ஆராய்ந்த ஒரு மகத்தான தனி மனிதரைப் பற்றி, எடுத்துக் கூறிய போப் அவர்களுக்கு நமது நன்றி. போப் அவர்கள் இறுதியாகச் சொன்னது: ''தமிழகத்தில் நேர்வழிபாட்டுக்கு தேவன் தேவை என்று அவர்கள் உணர்ந்தனர். அதே போல, ஆன்மாவின் அழிவற்ற தன்மைக்கு ஓர் ஊன்றுகோல் தேவை. வழிபாட்டுக்கு ஓர் குரல் தேவை?'' இக்கருத்துக்களை நான் மிகவும் மதிக்கின்றேன்.

கேப்டன் பெட்ரீ (Capt. F. Petrie, F. G. S., Honorary Secretary):

போப் அவர்கள் மறுமொழி சொல்வதற்கு முன்னால் நான் சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். இந்தப் பொருள் பற்றி போப் அவர்கள் உரையாற்றினார் என்பதே ஒரு பெருமதிப்பு. இதுபற்றித் தேர்வுடன்,

திறமையுடன், ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் சொல்லக் கூடியவர் நம் நாட்டில் (இங்கிலாந்தில்) எவரும் இல்லை. தமக்குரிய அடக்கத்துடன் அவர் இதை மறுக்கக்கூடும். எனினும் இது உண்மை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் பார்சி (Zoraster) மதத்தினைப்பற்றி ஓர் அறிஞர் உரையாற்றினார். அவ் வுரையில், இலங்கையைச் சேர்ந்த திரு. ஃபெர்கூஃசன் (Fergusson) இவ்வாறு கூறினார்:

"பதினேழு ஆண்டுகளாக நான் கிழக்கு நாடுகளில் (கிறித்துவ) மதப்பணி ஆற்றினேன். நான் புரிந்து கொண்டது என்னவென்றால், கிறித்துவ மதத்தைப் பற்றி எந்த சமுதாயத்துக்குப் போதிக்கிறோமோ, அவர்களது மதாபிமானத்தையும், மதச் சிந்தனைகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து அறிதல் வேண்டும். அவற்றைக் கனிவுடன், பணிவுடன், மனத்தூய்மையுடன், 'நான் — பெரியவர் — அவன் — சின்னவன்' என்ற செருக்கில்லாமல் கற்றறிய வேண்டும். நான் அறிந்து கொண்டது, நாம் யாருக்குக் கிறித்துவ மத போதனைகளைப் புகட்ட முயற்சிக்கின்றோமோ, அவர்களது மொழி, அவர்களது மதத் தத்துவங்கள் முதலியவற்றை நாம் முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். என் அநுபவம், பாரதத்தின் வட பகுதி. மேற்கு தேசம், பாரசீகம் ஆகிய பிராந்தியங் களுக்குச் செல்பவர்க்கு உதவியாக இருக்குமென்று நம்பு கிறேன். முக்கியமாக, அறிவுசால் இந்தியர்களிடம் சென்று உரையாடுவதற்கு என் அனுபவம் மிகப் பயன் படும்."

போப் அவர்களின் தமிழ்நாடு பற்றிய கருத்துசால் உரைக்கு இவ்வழக்கு மிக மிகப் பொருந்தும்.

போப் அவர்கள்: நான் ஒருசில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சுருக்கமாகத்தான்

சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் எடுத்துக் கொண்ட பொருள், எந்த சிறு கறும்பலகைக்குள்ளும் அடங்காது. அது எல்லையற்ற — எல்லை காண வொண்ணாத — பெருங்கடல். முதற்கண், நான் முன்பு கூறியதுபோல நான் எடுத்துரைத்தது, ஒரு துகளே. சொல்லப் போனால், இந்த பொருள் பற்றி ஏழு, எட்டு அத்தியாயங்கள் எழுதியிருக்கிறேன். டைப் கூட அடித் தாகி விட்டது. இனி பிரசுரகர்த்தர்கள் தயவு வேண்டும். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. இத்தகைய புத்தகங்கள் விலை போவது கடினம். போட்ட முதல் திரும்பி வருமா என்று அவர்கள் ஐயப்படுவதில் ஆச்சரிய மில்லை. இது முதல் பிரச்சனை. இரண்டாவது, நான் கூறியவற்றுள் சர்ச்சைக்கு இடமிருக்கலாம்; இடமிருக்கும். அவைபற்றி விளக்கமாகக் கூற எனக்குச் சற்றுத் தயக்க மாக உள்ளது.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாணிக்கவாசகர் மேற்கத்திய மரபிலிருந்து ஏதும் கற்றுக் கொண்டார் என்பதை எனது இந்து நண்பர்கள் சிலர் மறுக்கிறார்கள். அதனால் என் உரையில் அதைப் பற்றி விரிவாகச் சொல்ல வில்லை. (வேறோரிடத்தில் இது குறித்து எழுதியிருக் கிறேன். சில சரித்திரச் சான்று குழப்பங்களும் கூட.) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மத போதகர்கள் தமிழ்நாட்டில் இருந்தார்கள். ஆனால் அனைவரும் சொல்லுவதுபோல், கருதுவதுபோல், புனித தாமஸ் அவர்கள் (St. Thomas) தமிழ்நாட்டில் இல்லை. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், பாண்டேனியஸ் (Pantcanus) தமிழகத்திற்கு வந்து, கிறிஸ்துவ மத போதனை செய்தார். பிறகு நெஸ்டோரியக் குழுவினர் (Nestorians) வந்தனர். அவர்கள் மிக சாமர்த்தியசாலிகள். சொல்லப் போனால் திருவாங்கூர் மன்னரே, அக்காலத்தில் ஒரு நெஸ்டோரியக் கிறிஸ்துவர் ஆனார். அக்காலத்தில், மாணிக்கவாசகர் வாழ்ந்தார் என்பது சரித்திர மரபு.

ஆனால் இந்த நெஸ்டோரியன் மத போதனைகள், ஆன்மீகத்தை அவ்வளவாகத் தழுவவில்லை. பாவத்தைப் பற்றியோ, பாவ மன்னிப்பு குறித்தோ அவர்கள் குறிப்பிட்டுக் கூறவில்லை. சொல்லப் போனால், இந்தக் குறையைக் கிறிஸ்துவர்களாகிய நாம் 'மிலேச்சன்' என்று சொல்லப்படும் சைவர் ஒருவர் நீக்கினார். இந்தக் குறை நிறைவைத் தமிழ்ப்பண்களால் தமிழ்நாடெங்கும் பரப்பினார். நாம் மட்டும் இவற்றைப் புரிந்து கொண்டு மத பேதமின்றி, ஒருவரையொருவர் நேசித்தால் குறைவுகள் எல்லாம் நிறைவுபடும். மாணிக்கவாசகரது பக்தி பொங்கும், பக்தி கொப்பளிக்கும் கவிதைகள் எல்லாம் நமது கிறிஸ்துவ பக்திப் பிரவாகத்திற்கு எவ்விதத்தில் தாழ்ந்தன? அவரது பக்திப் பண்களில் கனிந்து கண்ணீர் மல்கி ஈடுபட்ட அனைவரும் இறைவன்பால் நெருங்கி நெருங்கி வருபவர்கள் ஆவர். தமிழர்களுக்குத் திருவாசகம் நமக்கு Book of Psalms போல.

ஒரு வார்த்தை சொல்லுகிறேன். தமிழகத்து இந்து மக்கள் தீவிர மத ஈடுபாட்டில் எவருக்கும் தாழ்ந்தவர் அல்லர். இந்துக்களைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அவர்கள் கடவுளை நம்புவது மட்டுமில்லை; காதலிப்பவர்கள்.[23]

---

23. மொ. பெ. கு: என்றோ, எப்போதோ கடவுளைக் கண்டறிவோம் என்று காரிருளில் தட்டித் தயங்கித் தடுமாறிச் செல்பவர் போல் இருந்தாலும் இதுவரையும்—காணக்கிடைக்காத கடவுளிடம்—காணக்கிடைக்கும் ஒரு நாள்—அவர்களுக்கு மட்டில்லா அன்பு, கரைகொள்ளாக் காதல்.

காணாத ஒன்றைக் கண்டு கொண்டாற்போல, இறைவனை மனத்தில் பாவித்து அவருடன் ஒன்றியவாறு உருகிப்பாடும் கவிதைகள் பல. நாவுக்கரசர் கும்மாளி போட்டுப் பாடவில்லையா?

'தேடிக்கண்டு கொண்டேன்—திரு
மாலொடு நான் முகனும்

நான் இந்தியாவிலிருந்து செல்லும் முன்னர் ஒரு இந்து நண்பர் என்னைப் பார்க்க வந்தார். அவர் முகத்தில் அறிவு ஒளி. என்னுடைய தேவாலயத்தில் அவரை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் அவருடன் பேசியது இல்லை. அவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு பெரிய அதிகாரி. அவரை உட்காரச் சொன்னேன். அவர் சொன்னார்: ''நீங்கள் திரும்பி உங்கள் நாட்டுக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். நான் ஒரு கிறிஸ்தவன்.'' எனக்கு ஆச்சரியமாகப் போயிற்று. ''அப்படியா!'' என்று தான் சொல்ல முடிந்தது. அவர் சொன்னார்: ''என் அம்மாவையும் தங்கையையும், மனைவியையும் நீர் பார்த்தால், அவர்களுடன் பழகினால், என்னை முறைப்படி கிறிஸ்தவனாக்க முடியாது என்பது உங்களுக்குப் புரியும். ஆனால் நான் ஒரு கிறிஸ்தவன். கிறிஸ்துவ மதத்திற்காக, என் உயிரைப் பணயம் வைக்கத்தயார்.'' மெல்ல மெல்ல மேலும் சொன்னார்: ''எனக்கு ஒரு கிறிஸ்துவ வேதப் புத்தகம் வேண்டும் (நான் முறையாக பைபிள் படிப்பவன்). அனுதினமும் நான் படித்து என்னை ஆட்கொண்டு வழி காட்ட நீங்கள் கொடுக்கும் நூல் உதவி செய்ய வேண்டும்.''

அவர் சரியான சமயத்திற்குத்தான் வந்தார். Jeremy Taylor அவர்களது புத்தகங்கள் இரண்டு அப்போது தான் எனக்கு வந்திருந்தன. ஒன்று—தெய்வீக வாழ்வு (Holy Living); இரண்டாவது-தெய்வீக மறைவு (Holy

---

தேடித் தேமொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்!'

ஏன், மணிவாசகரே சொல்லவில்லையா?

'யானுனைத் தொடர்ந்து
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருள்வது இனியே!'

இத்தகைய எண்ணிலாப் பாடல்களைப் போப் அவர்கள் மனத்தில் கொண்டு இக்கருத்தைச் சொல்லியிருப்பார் என்று எண்ணுகிறேன்.

Dying). அந்தப் புத்தகங்களை அவரிடம் காண்பித்தேன். ஆனால் அவருக்குக் கொடுக்கவில்லை. 'பதிப்பாசிரியர் விலாசம் உள்ளது. இவற்றை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்' என்று சொன்னேன். இச் சம்பவத்தை நான் மறந்து விட்டேன். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து நான் கிளம்பிக் கொண்டிருக்கும்போது அவர் என்னைத் திரும்பச் சந்தித்தார். 'நீங்கள் சிபாரிசு செய்த புத்தகங்களுக்கு மிக்க நன்றி; இரண்டு புத்தகங்களையும் வாங்கினேன். முதற் புத்தகத்தைப் ('Holy Living') படித்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கையையும், மனத்தையும் அந் நூல் மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், மிக மெதுவாகத்தான் நான் படித்துக் கொண்டிருக்கிறேன்.' நான் சொன்னேன்: ''நண்பரே! இத்தனை காலத்தில் அதில் கால் பாகம் கூட நான் படித்தது இல்லை.'' இப்போது நான் நினைக்கிறேன்: என் இந்து நண்பர்—மனத்திலும் நம்பிக்கையிலும் கிறிஸ்துவர் — இன்னும் அவற்றை படித்துக் கொண்டிருக்கிறார் என்று. இந்த எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் அன்புடனும், நம்பிக்கை யுடனும் எவரை அணுகினாலும் அவர் மனத்தைப் புரிந்து கொண்டு கிறிஸ்துவ தத்துவங்களுக்கு அவரை ஈர்க்க வேண்டும். அன்பும் அருளும் கருணையும் தானே கிறிஸ்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்?

கடைசியாகப் புத்தமதத்தைப் பற்றி ஒரு வார்த்தை. என்னுடைய குறிப்புகளில் மாணிக்கவாசகர் எவ்வாறு, புத்த மதத்தினர்களிடமிருந்து வேறுபட்டார் என்று தெளிவாக எழுதியிருக்கிறேன். ஒரே ஒரு சொல். புத்தர்கள் நாஸ்திகவாதிகள் என்று அவர் நிரூபித்தார். புத்தர்கள் ஆன்மா அழிவற்றது என்ற கொள்கையை அவர்கள் நம்ப வில்லை. சிறுகக் கற்றாலும், பெருகக் கற்றாலும் கடவுள்

இருக்கிறார். அநித்தியம் உண்மை என்பதை நாம் திண்ணமாக உறுதியாக நம்ப வேண்டும்.

(இத்துடன் கருத்தரங்கு முடிவடைந்தது)

பதிப்பாளர் குறிப்பு:

இந்தக் கருத்துரையால் புலனாவது ஒன்று நிச்சயம். போப் அவர்களின் ஆராய்ச்சி உரையை இந்தியாவில் மட்டுமின்றி நம் ஐரோப்பிய நாடுகளிலும் கூர்ந்து படிக்க வேண்டும். ஏனெனில் நம் நாட்டவர்களில் பலர் புத்த-சமயக் கூற்றுக்களை மெச்சிப் பாராட்டுவதோடு, அவற்றைத் தழுவவும் முற்படுகிறார்கள்.

மணிவாசகரின் வாதங்கள் ஒரு படிப்பினை, ஒரு எச்சரிக்கை, ஒரு கடிந்துரை—விளக்கைக் கையில் வைத்துக் கொண்டே இருளைத் தேடுபவர்களுக்கு.

APPENDIX.

Note I.

CIVAN'S ACTS OR OPERATIONS; THE 'SACRED SPORTS' OF THE GOD.

In the Civa legends and poems three kinds of actions are very commonly referred to as having been performed by Civa, and each of these requires consideration. Sometimes these are five. (See Tiruvacagam, I, 41; III, 13.)

1. We find Civa perpetually spoken of as disporting Himself amidst His subjects, and His actions are often represented in a more or less grotesque aspect. This idea of the god as engaged in sport quite permeates the Caiva system. You hear the minstrel in the street singing, *Kelati ande, Kelati pinde*—('He sports in the world; He sports in the Soul'), and the notion is explained by reference to His omnipotence. All His operations are easy to Him, involving no effort, so that He is said to 'act without acting', and thus everything is the sport of Civa: the whole universe is bright with His smile, and alive with His joyous movements. This is so thoroughly inwrought into the system that such names as 'Deceiver' and 'Maniac' (Kalvar, கள்வர்) are perpetually given to the god. The Puranam of Madura, containing the history of the sixty-four amusements of Civa (திருவிளையாடற் புராணம்), illustrates this. Some of

these quasi-divine sports seem to us very ridiculous, but we are required by our Caiva friends to receive the mystic interpretation of each! In the history of *Manikka-Vacagar*, which is really taken from hints in the same Puranam, the change of the jackals into horses, and *vice versa*, and the god's behaviour as a labourer are somewhat extreme cases of this, but are not quite incapable, I suppose, of a serious application.

2. Closely connected with this are the very frequent manifestations of the god for the purpose of trying His votaries; and in several of these (not translated) the god is represented in an exceedingly unfavourable light. (See Note VI.) Throughout the whole of the legends there runs the idea that, as there were innumerable mendicants assuming the conventional garb and appearance of the god, He might at any time appear to any of His worshippers in such a form; and thus all pious souls were rendered eager to exercise due hospitality to Caiva mendicants, as they knew not but that their love might any day be rewarded by receiving the visit of the Master Himself. Of course, the old classical stories, such as that of Baucis and Philemon, are of a similar kind.

3. The dancing of Civa, especially in the Golden Hall at *Cithambaram*, is connected with an especial legend, which will be given, but is always interpreted in the same way as the sports referred to above. (See Note VI.) His dancing is symbolical of His perpetual and gracious action throughout the universe and in loving hearts. In fact, it takes us back to the manifestations of the *pre-Aryan* demon, or Bhairava, that dances

in the burning grounds, smearing himself with the ashes of the dead, and adorning himself with necklaces of their bones, and bearing away with him a skull as a trophy. There are many composite elements in these very ancient histories; and it is but fair to allow those who yet regard them with reverence to give them any reasonable interpretation of which they may be considered susceptible.

Note II

THE MYSTIC FORMULA OF THE FIVE LETTERS (OR SYLLABLES)

The following, which is Ch. IX of *Uma-pati's* great work entitled 'The Fruit of Divine Grace', gives the whole mystery of 'The Grace of the Five Letters' that is the grace gained by the use of the invocation consisting of Ci-va-ya-na-ma (=*Adoration to Civa*). 'This is a help to those who cannot otherwise attain to the bliss of mystic quietude (Samadhi)'.

Question 1.—If the unutterable rapture has not been gained by the means already explained, is there any other method?

The systems of grace (the twenty-eight Caiva Agamas), the Vedas, and other sacred scriptures have for their object the teaching of that which is the mystic meaning of the 'Five Syllables' (81.)

Commentary. — On examination by the devout scholar it will be found that the substance of the

teaching of the sacred 'Five Letters' is the LORD, the FLOCK, and the BOND. Such is the conclusion of those who are mighty in the Agamas, the Vedas, and other sacred books.

Summary.—The substance of all TRUTH is included in the 'Five Letters.'

Q. 2.—What does this pentad of letters declare?

The King, the (*Divine*) Energy, the Bond, the beautous Maya, the Soul—all these are contained in the *Om-garam,* (82.)

Com.—The Piranavam contains within it, (1) the grace of Civan, and (2) of Catti, with the (3) knowledge of *Anavam,* and (4) of fair Maya, and of (5) the Soul (Note XV). These are symbolised by the 'Five Syllables', and in OM the whole are concentrated.

Sum.—Here is expounded the doctrine of the mystic OM, which is the subtle form of the 'Five Letters.'

Q. 3.—What is the order in which the 'Five Letters' take their stand?

There is on the one side the mystic dance of weakness, on the other side the dance of mystic Wisdom, the Soul being between the two. (83).

Com.—The syllables NA and MA represent the energetic whirl of Impurity both in itself, and also as operating in the Soul; the syllables

CI and VA represent the mystic action of Grace and of Civa. Between these stands YA, which represents the Soul.[1]

The 'dance' is the divine impulse and guidance given to the Soul in this state of bondage and in the state of emancipation.

Sum.—In this the nature and significance of the 'Five Letters' are explained.

Q. 4.—How is it that by means of the 'Five Letters' the Soul does not obtain the 'Known'?

MA and NA prevail over the mind (or *the mind is dissipated*): thus it returns not to Him; whenever it obtains CI its deeds are cancelled. (84.)

Com.—(This couplet admits of two distinct interpretations. Below the more authoritative is given.)

When MA and NA, which are Impurity and Tirotham, bind the Soul tight, it (the YA) cannot return; when their great bond is loosed, it obtains CI, which is supreme blessedness.

Sum.—Here the Bond and the method of release are shown in the 'Five Letters'.

[Compare CI. Pr. II, 41 (p. 372).]

Q. 5.—How is it that, though there are the 'Five Letters,' Anava (Impurity) does not depart?

While the bewildering power of the veiler (Tirotham) and of Impurity is first, how can they

---

1. See Song V; 196, *note*.

depart? Not unless the dominant Anavam change its place. (85.)

Com.—While NA and MA, representatives of Tirotham and Impurity, are pronounced first, can these be removed? Put these after, and CI first, and then Anavam will cease to obscure.

Sum.—They who would be set free must utter the formula thus: CIVAYA NAMA, and not NAMA CIVAYA.

[Compare *Un. Vil.*, 44.]

Q. 6.—Will 'Impurity' depart from those who repeat the 'Five Letters'?

Alas, thou mayest worship, but if the foundation, Civan, be not known, since Ci precedes not, Impurity will still assert itself. (86.)

Com.—When men repeat the sacred formula unmindful of the foundation, which is Civan, desire will reassert itself, still clinging to *Na* and *Ma*.

Sum.—Here he commiserates those who thus recite them, and still suffer, having no divine assistance.

Q. 7.—Why is this pentad of letters recited thus? If Civam come first, and thou so recite it, the pain of embodiments will cease. This is your method. (87.)

Com.—If the devotee recite the pentad so that CI and VA precede, by this position the grief of

embodiment will be removed. Thou, O disciple, who desirest release, recite it thus!

Sum.—This teaches that the released say, Ci va ya na ma.

Q. 8.—What benefit accrues from this order of recitation?

VA will in grace give CI, and bring prosperity. This spotless Form will appear to such souls. (88.)

Com.—When thus recited, VA, which is grace, points out Ci, which is Civan, and establishes YA, which is the Soul, in the abode of delight. And that is the faultless, sacred form of Civam.

Sum.—Here the significance of VA,—the Energy of Grace,—in the sacred formula is taught.

Q. 9.—How will that soul exist in the heaven of liberation?

No longer placed between the spotless NA and VA, by grace the Soul will stand between VA and CI. (89.)

Com.—The Soul (*ya*) standing no longer between the spotless (it may be read 'Acin Na' or 'Acil Na,' *i. e. spotted or spotless;* and each of these presents an orthodox view of Tirotham) *Na* and *Va* (Catti), now stands between VA and Ci.

(It is said that this arrangement must be learned from a guru.)

Sum.—This defines the position attained by those who rightly use the formula.

[See *Un. Vil.*, 46.]

Q. 10.—Is there any manifest evidence of our being in this state of deliverance?

In every possible way the sacred writings teach that you should fix your mind upon the path that leads not away from Him. (90.)

Com.—The sacred writings teach us evary method, so that we should ponder them, and never forsake the sacred influence of Civan and His Catti.

Sum.—This couplet sums up the teaching of the last four chapters (VI-IX).

End of Chapter IX: The 'Five Letters'.

Note III.

THE SOULS'S EMANCIPATION (வீடு).

Mutti, முத்தி.

In Sanskrit, *Mukti or Moksha.*

The best explanation of the Caiva Siddhanta doctrine of Mutti, or the Soul's final emancipation from embodiment (*erlosung von den weltlichen banden, Seligkeit*) is found in the treatise called Civa-piragacam (சிவப்பிரகாசம்) by the same great sage Umapati (I, 38, *etc.*). This has been translated by Mr. Hoisington (*American Oriental Soc. Journal*, 1854). Mr. J. M. Nalla-

sami, of Madras, has recently published a translation of Civa-nana-botham, with notes (see p. 100, *etc.*). This is a most useful compendium.

Ten faulty (or imperfect) theories of this consummation so devoutly wished for by all Hindus are enumerated in these works or in the commentaries on them:—

(1) There is the bliss aspired to by the Lokayattar ('Worldlings'). This is simply gross sensual enjoyment in this world. These heretics are continually attacked in the Siddhanta books. [See *Sarva-darshana Sangraha* (Trubner's Series)] These were atheistic Epicureans, followers of *Charvaka* (Note XIV.).

(2) There is the cessation of the five *Kanda.* This is the Buddhist Nirvana, and is always considered by Tamil authors to be mere annihilation. The South Indian view of Buddhism is illustrated in Note VIII.

(Sar. darsh. San., p. 31.)

(3) The destruction of the three (? eight) qualities is pronounced to be the final emancipation by some Jains, and by the teachers of the atheistic Sankhya system. This would reduce the human Soul to the condition of an unqualified mass, a mere chaos of thought and feeling.

(4) There is the cessation of deeds by mystic wisdom. This is the system of *Prabhakara* (Sar. darsh. San., p. 184). The deeds mentioned are 'all rites and

services whatsoever.' The devotee becomes in this case, so the Caivite urges, like a mere image of clay or stone.

(5) 'Mutti' is represented by some Caiva sectaries as consisting in the removal from the Soul of all impurity, as a copper vessel is supposed to be cleansed from verdigris by the action of mercury. There is a good deal of abstruse reasoning about the pollution aforesaid. 'Copper is not really in this sense purified by the removal of the green stain on its surface; the innate weakness of the metal is in its constant liability to this defilement. Gold is never coated by such impure matter. Copper will always be so; it is, as it were, congenital. Now these sectarians preach that, by the grace of Civa, the innate corruption of the Soul may be removed, from which will necessarily follow permanent release from all bonds'. This seems to resemble very closely the Christian idea of the sanctification of the souls of men by divine grace infused. The *Siddhanta*, however, insists upon it that for ever, even in the emancipated state, the power of defilement, the capacity of corruption, remains (*pacam*, is eternal). The corruption cannot, it is true, operate any longer in the emancipated condition; but it is still there,—dead, uniluminated, the dark part of the Soul turned away from the central light, like the unilluminated part of the moon's orb. Personal identity and the imperfections necessarily clinging to a nature eternally finite are not destroyed even in *Mutti*.

(6) Another class of Caiva sectaries taught that in emancipation the body itself is transformed, irradiated, with Civan's light, and rendered immortal. This system supposed that intimate union with Civa transmuted rather than sanctified the Soul.

(7) There is then the system of the *Vedantis*, who taught that the absolute union of the Soul with the Infinite Wisdom, its commingling with the Divine Spirit, as the air in a jar becomes one with the circumambient air when the jar is broken, was *Mutti*. But here personality is lost.

(8) The doctrine of Palkariyam (followers of *Bhaskara*) is, that in emancipation there is an absolute destruction of the human Soul, which is entirely absorbed in the supreme essence.

(9) There were some Caivites who taught that in emancipation the Soul acquires mystic miraculous powers; that, in fact, the emancipated one is so made partaker of the divine nature and attributes, that he is able to gain possession of and exercise miraculous powers, which are called the eight 'Siddhis.' Persons professing to wield such magical powers are not unfrequently found in India, and there is in them very often a bewildering mixture of enthusiasm and fraud.

(10) There were also some who taught that in emancipation the Soul becomes, like a stone, insensible. This stationary, apathetic existence, if existence

it can be called, is the refuge of the Soul from the sufferings and struggles of embodiment.

In opposition to all these faulty theories, the true doctrine of emancipation is thus defined: *When the Soul, finally set free from the influence of threefold defilement through the grace of Civa, obtains divine wisdom, and so rises to live eternally in the conscious, full enjoyment of Civa's presence, in conclusive bliss, this is* EMANCIPATION, *according to the Siddhanta philosophy.*

Note IV.

THE 'GURU' (S = *venerable.*)

The Guru plays a most important part in all Hindu religion. He is the 'venerable' preceptor, master, and embodied god. In the Caiva system His dignity culminates. He is one who in successive embodiments has drawn nearer and nearer to final deliverance (Mutti), and is now in His last stage of embodiment (Note V). Civa lives in Him, looks lovingly on the meet disciple through His eyes, blesses with His hands, with His mouth whispers into the disciple's ear the mystic words of initiation, and crowns with the lotus flowers of His feet the bowed head of the postulant, who thus is to become as his master. (See *Tiruvacagam*, IV, 95)

The exact doctrine is set forth in the following ten sections of Chapter V in Umapati's authoritative work 'The Fruits of Divine Grace' (திருவருட்பயன்).

Each of these sections consists of a question, an answer with its commentary, and a summary. The answer is the master's teaching, and is a couplet of exquisite Tamil, in imitation of Tiruvalluvar. (See Pope's Kurral, Int, p. vii,)

Tiru-arul-payan, Chapter V. [Comp. Notes II-XV.]

The Form of GRACE.

This chapter speaks of *grace in the form of the Guru* (divine Teacher), who is mystic knowledge made manifest. This manifestation is the 'fruit of the GRACE' spoken of in the last chapter.

Q. 1.—Who is He that comes when twofold deeds are balanced?

[Catti Nibatham. See Note V.]

He who, taking His stand by the disciple in the time of ignorance and bondage, gives grace,—the King who departs not, made manifest by visible signs. (41.)

Com.—While, man is in this state of ignorant bondage, the Divine Lord, the very centre of knowledge, appears in bodily shape as a Guru. Neither from before the eyes, nor from within the Soul, does this KING henceforth depart.

Sum.—Here we are told that divine grace assumes the form of a GURU.

Q. 2.—Is it essentially necessary that He Himself should come as Guru? Will not learned men suffice?

None know the disease that is within but those that are within. Can the outer world too discern it? (42.)

Com.—In any house if one be diseased, those in the house will be aware of it, but the distant world knows it not; so, if Civan, who dwells within the Soul, come as a Guru, our disease shall be healed.

Sum.—This removes the doubt as to the necessity of Civan's advent as a Guru.

Q. 3.—Can all recognise the Guru thus appearing?

Who on this earth will be able to discern such a Dispenser of grace not ever given before? (43.)

Com.—He performed the works of creation, preservation, destruction, and 'veiling' (Note XIII, Catti) without any manifest appearance; but now His work of grace is performed in a way not known before, while He wears a human form as a robe, and thus conceals Himself. This men know not.

Sum.—Men think of the Guru, who is Civan Himself made manifest, as though He were a mere man like themselves.

Q. 4.—How is it that inferior souls know not the Guru?

Souls that are immersed in falsehood and darkness cannot recognise these two things: the teachings of divine grace and the divine Teacher. (44.)

Com.—Those who live in the enjoyment of fleeting, worldly enjoyments, and whose understandings are veiled by the darkness of *Anavam* [NOTE XV], cannot know the two great truths of the blessedness of mystic Wisdom and of the grace embodied in the Guru, by which it may be reached.

Sum.—This gives the reason for men's ignorance of the Guru.

Q. 5.—Is it necessary that He should have a divine form, visible to such as ourselves?

The world does not discern that the bodily form of the Guru is but the cloak assumed to take souls, as beasts are taken by the exhibition of a shape like their own. (45.)

Com.—It is common in the world to ensnare beasts and birds by exhibiting their own shape as a lure. Here men would dread any appearance manifestly divine; and so grace clothes itself in a human dress, beneath which men fail to discern the divine.

Sum.—In this and the two preceding verses, the ignorance of men in not recognising the Guru is reproved.

Q. 6.—May we not consider any teacher as a manifested image of Civa?

What profit would thus accrue to us? Though any one may know anything superficially, the true meaning of any teaching is known only from the Guru. Seek Him, and be free from doubt. (46.)

Com.—Whether you ordinarily rely upon a particular Guru or not signifies nothing; seek Him who alone can interpret the truth. So only can you escape from Impurity and emerge into pure light.

Sum.—The real meaning of any scientific treatise cannot be understood without the assistance of the true teacher.

Q. 7.—Is it not enough that divine grace teaches you from within, is the core of your knowledge? Is it necessary that He should also come as a Guru?

When snake-poison has entered the system, the mere presence of the 'Mangus' (Ichneumon) will not expel it. A skilful physician is necessary to remove the poison. (47.)

Com.—The mystic art of the snake-charmer is necessary to cure one bitten by a poisonous serpent. Thus a Guru bearing Civan's very image must look upon us with the eye of mystic Wisdom, and darkness will disappear, not otherwise.

Sum.—Here it is taught us that the Bond is only loosed by the divine Teacher.

Q. 8.—Is this gracious manifestation as a Teacher for the benefit of all, or of one class only?

To those already become *akalar* He gives precious gifts of grace. He cancels deeds. To those still *cakalar* He gives His grace. (48.)

Com.—To the *Vinnaana-kalar* and to the *Piralaiya-kalar*, who are freed from Kalai (sense-deception), He reveals Himself in their inner consciousness, and removes *Anavam.*[1] To others, in the form of a Guru, He comes and bestows grace.

Sum.—This shows why and for the sake of whom He puts on the vestment of humanity.

Q.9. —Can salvation not be effected without the coming of the Guru?

Who can know unless the gracious Revealer of the wide extended way, the great Knower, shall appear? (49.)

Com.—Unless the Lord, possessed of the wisdom surpassing the six ATTUVA,[2] and the Revealer of the way of release, shall come in the form of a Guru, who can know these things.

---

1. For Anavam see Note XV.

2. This word is an adaptation of S. ADHVA, and expresses the physiological elements of all being. The idea is obsolete.

Sum.—The knowledge of the really existent can only be given by the Lord possessed of perfect knowledge.

Q. 10.—Is it necessary that He should come in the form of another devotee? Is it not enough that He is within my sentient mind?

Mystic knowledge can visit us without His intervention when the crystal kindles fire without the sun. (50.)

Com.—The crystal may be faultless, but will not act as a burning glass in the absence of the sun; even so divine and mystic Wisdom enters not the mind, whatever knowlege it may possess, without the Guru, Civan's grace made manifest.

Sum.—In this it is taught that religious knowledge has no excellence without the teaching of the Guru.

Note V.

Catti-ni-batham (சத்தி-நிபாதம் = 'Cessation of Energy'.)

It is sometimes thought and said that the idols in these temples are mere signs, representing as symbols the Divine Being and some of his works and attributes. This is not altogether an adequate statement of the case. Each image by a peculiar service which is called Avaganam (S. AVAHANAM = 'bringing unto') becomes the permanent abode of an indwelling deity, and is itself divine. The worshippers, as will be seen in our legends, seem to believe that the images of the god consume the food presented to them, and are strengthened and refreshed by it. The images are treated and spoken of as living and sentient beings. They are seen to smile, to lift up hands to bless, to move from place to place, and to issue audible commands. Devout and enthusiastic worshippers amid the glare of the lamps and the smoke of the incense seem to be carried away so as to entirely identify the invisible object of their thoughts with that which is presented before their eyes. It was certainly so with our poet. If it is remembered that some of these images have been worshipped, tended, garlanded, and treated as human beings, for a thousand years; that each generation has done them service and lavished gifts upon them; that they are connected by association with long lines of saints and sages; and that it is believed that Civan's method of gracious manifestation is by, and through, and in these, as what we should call sacraments of his perpetual presence, we shall understand with what profound awe and enthusiastic affection even images, to us most unsightly can be held by multitudes of good and excellent people.

Note X.

'CIVAN ENTHRONED ON THE SILVER MOUNTAIN'.

'Civan sat upon his throne, and on his left side was with him his gracious energy, the world's mother, the goddess Parvathi. He is from eternity free from all impurity, the Everlasting, the All-Pervader, possessed of all wisdom, all pre-eminence, and all spontaneous grace. Through his infinite compassion towards souls, for which they can render him no return, he ever performs, without performance, the acts of creation, protection, destruction, veiling and dispensing grace. He is the first and only god, having one sacred face and three eyes, which are the glowing splendours of the sun, the moon, and the god of fire. His crest of matted hair (சடை, S. Jata) is crowned with the Ganges, the crescent moon, and the *kondrai* (*cassia*) garland. His sacred ears are adorned with earrings of conch-shell and flower-petals (தோடு). His throat is black with the poison churned out form the milky sea. (See notes to Lyric XII.) His sacred hands grasp, one the antelope, and one the axe; one gives the sign of safety, and the fourth assurance of gifts of grace. His body, ruddy like coral, is besmeared with sacred ashes. His breast is adorned with the white investing thread and necklaces consisting of the bones of innumerable Brahmas and Vishnus and the skulls of Brahmas of innumerable aeons. He has girt himself with the tiger's skin (Note VI). His waist is resplendent with dagger and girdle. His feet, like red lotus-flowers, tinkle with the heroic anklets and sounding bells. Such is the body that he wears as

Cri-Kanthar (*He of the auspicious throat*). He sits on the silver hill of *Kailacam*, whose innumerable white peaks are adorned with divers jewels. There in a shrine of ruddy gold he gleams, while his crowding hosts make music with innumerable instruments. Many on either side wave the white Camaram (the white tail of the Yak, or *Bos grunniens*), and many others wave flower-twined fans. The heavenly musicians and choristers of every degree sing in sweet harmony. The leaders of his hosts, their frames dissolved in ecstasy like wax in fire, their quivering bodies thrilled in every part with joy, while rapture fills them as the torrent from the open sluice, plunging into the very gulf of delight, were dancing and singing before his face. The ascetics, hands clasped above their heads, were reciting the Upanishads which are the heads of the Vedas. Brahma, Vishnu, and Indra with the other gods stood afar off, kept back by the wand of sacred Nandi, and, with hands upon their mouths, humbly made known their wants to him who sat upon the throne.'

I have translated this literally from the introduction to the *Peryia Puranam* in order to show the mythological conception entertained by the Caivas of the object of their worship. Nothing can be nobler and more spiritual than the accounts found in many of their writings of PATI (the Lord); but mingled with everything are the incongrous conceptions a few of which are here shadowed forth. In such descriptions every legend is introduced, every form in which the god is anywhere worshipped is brought in, and the result often to our minds is inexpressibly grotesque. Yet for every particular an explanation is offered, mystic

meanings are given, and the whole is resolved into a series of allegories which are supposed to teach the gracious operations of Civa, the Lord of all. In reading these legends it is necessary to keep always in memory this twofold character of the religious system of South India. Gross and ridiculous representations (so they strike the foreigner) are found in juxtaposition with refined, pathetic, devout, and even sublime expressions. This is peculiarly the case in the lyrics of the profound enthusiast Manikka Vacagar.

Note XI.

The *Caiva Siddhanta* SYSTEM OF PHILOSOPHY AND RELIGION IN SOUTH INDIA.

The *Caiva Siddhanta* system is the most elaborate, influential, and intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil religion, and must be studied by every one who hopes to understand and influence the great South Indian peoples. The *Vaishnava* sect has also many influential followers in the Tamil lands, but these are chiefly immigrants from the North. Caivism is the old prehistoric religion of South India, essentially existing from pre-Aryan times, and sways the hearts of the Tamil people. But this great attempt to solve the problems of God, the soul, humanity, nature, evil, suffering, and the unseen world, has never been fully expounded in English. Its text-books (probably its sources) exist in Tamil only, and in high Tamil, in verse, which is often made of set purpose obscure and difficult. Classical Tamil is very

little studied, yet this key alone can unlock the hearts of probably ten millions of the most intelligent and progressive of the Hindu races.

In a period quite antecedent to all historic data, the native Dravidian religion was a kind of Caivism. It had peculiar forms of sacrifice, ecstatic religious dances, rites of demon worship, and other ceremonies which still exist among the villagers of the extreme South,[1] and more or less among the rural population everywhere. In process of time northern — Aryan, Vedic, Brahmanical — influences were brought to bear upon these original forms of worship, and those who introduced the Vedic religion into the South found a place for the superstitions of the aborigines in their own system. The inhabitants of South India adopted to a great extent the social institutions, the myths, and forms of worship of the Aryan settlers. In the Vedas, Civan is not named, but the god Rudra, the god of storms and tempests, seems to have been the type of a divinity most in unison with the ideas of the inhabitants of the South, who probably came originally from Central Asia, and brought with them their Scythian divinity, who was cruel, and was worshipped with rude and cruel ceremonies. Rudra-Civan became therefore the type of the divinity, as the destroyer. In process of time Buddhism and the Jain system found their way into the South, propagated by zealous and able men, and thus undoubtedly a softer and more genial character was imparted to the whole of South India. Meanwhile on the eastern

1. See *Naladi*, 16.

coast Christianity was introduced by the Nestorians, and spread abroad very rapidly, becoming widely known and exerting great influence even where it did not make converts. It is undoubtedly the fact that these Christian influences pervaded the whole South. Muhammadanism also in various directions entered the Tamil land, and exerted great influence over the thinkers in those regions Thus the elements out of which the present and finished Caivism of the South has been evolved are numerous and diverse. It must also be noticed that since the twelfth century the *Vaishnava* system has been a formidable rival of Caivism, and the rivalry has tended to develop and systematize the dogmatic parts of the system most decidedly. We have now to do with the historic beginnings of South Indian Caivism. A sage from the North, whose name was *Kumarila Bhatta*, in the eighth century came from Behar and taught the existence of a personal deity in opposition to the Buddhists. His disciple was the very celebrated sage *Cankara Acharya*, who is the father of religious philosophy in the South. Various sects claim him as their founder, but he certainly was a Caiva, and is regarded as an incarnation of Civan himself.

The great revival and spread however of Caivism is due to certain saints or devotees who were men of great devotion, unwearied activity, and remarkable power. The first of these was Manikka Vacagar, whose date is uncertain, but may reasonably be assigned to the tenth century A. D. Probably about a century later arose Nana Sambandhar and the various lesser devotees whose legends are collected, amplified and idealizep in the peria Puranam. Some notice of these is essential

to a clear view of our subject. The next stage in the history is the rise of the great philosophical school called the CAIVA SIDDHANTA system. These sages were fourteen in number, and are called the *Santana Gurus.* (Succession of teachers.) The only date which appears to be reliable is that given by one of these in a polemical treatise. He wrote in 1313. Thus the early fourteenth century was remarkable for the existence of a most able and zealous band of philosophical Caivites, whose influence still pervades the land. This system is called the Pati-pacu-pacam system. Here Pati is the Lord or Supreme Being, Pacu is the soul, and Pacam is the bond; and on the interpretation of these three words everything depends. The Lord of course is Civa, and the attributes with which he is invested are very remarkable. In the Caivite catechism the question occurs, What is Pati? and the answer is, 'He is the eternal, all-pervading, all-wise, eternally blessed, absolutely independent Creator of all, who is from all eternity free from taint of evil.'

Note XII

THE THREE CATEGORIES (*padartha*)

In the first quatrain of his greatest work, Umapati, the ablest of the Caiva schoolmen, throws down the gauntlet and challenges the teachers of all the Hindu schools, declaring that the real and only intention of all the Vedas and other sacred writings is summed up in the three mystic words PATI (the Lord), PACU (the flock), and PACAM (the bond). These are the three categories of the *Caiva Siddhanta* system. Though this

system received its final development some centuries after our sage, implicitly he held its principles, and it is necessary for the illustration of these poems and legends to bring together, connect, and illustrate the main dogmas of that elaborate, thoughtful, and influential religious philosophy which has been evolved in connection with these words.

The three eternal entities of the system are (1) the LORD, who is Civa himself; (2) the aggregate of all souls or lives that constitutes Civa's FLOCK, which, by his grace, he wills to conduct to the blessedness of final disentanglement from all embodiments; and (3) the BOND, or the sum total of all those elements which bind souls and hinder them from finding release in union with the 'Lord'. These three—Pati, Pacu, Pacam — are equally eternal, existing unchanged and undiminished through successive aeons. The idea of the 'Lord' is a philosophical refinement of that of the Civa of the older mythology. Among other titles given to Rudra we find that of *Pacunam-pati* ('Lord of the flocks'), and from that has been evolved the ingenious allegory on which this system is founded. Umapati's doctrine in regard to the 'Lord' is set forth in many quatrains of his text-book. This is the sum of his theology as to this topic:

i. Pati is the Supreme Being;

ii. He is neither permanently manifested nor unmanifested;

iii. He is without qualities or distinguishing marks;

iv. He is free from all impurity;

v. He is absolutely one;

vi. He is eternal;

vii. He is the source of wisdom to innumerable souls;

viii. He is not subject to fluctuations;

ix. He is immaterial (indiscerptible);

x. He is the essence of bliss;

xi. He is difficult of access to the perverse, but the final goal of those that truly worship him;

xii. He is infinitely small and infinitely great;

xiii. He is the true Civam, or 'blessedness.'

The second of these statements is thus explained: Whatever has a visible form must be subject to the laws of production, maintenance, and decay; therefore the Supreme is without visible form. On the other hand, that which has no form by which it can become mainfest is a mere fancy, like the 'horn of a hare' or 'flowers of the atmosphere.' But Pati is real and makes himself known to souls. This will be further explained in connection with another part of the subject.

Civan as thus described is said to be *Nish-kalam*, i.e., without parts or adjuncts, perfect in Himself, the absolute Lord. But He is capable of manifestation, and in order to energise in souls, and in the various constituents of that eternal aggregate of impurity which constitutes the *bond*, He assumes a Ca-kala nature, i. e. one composed of a species of spiritual body.

NOTE XIII

THE BRIDE, PARA-CATTI = CIVAN'S 'PRIMAL ENERGY'

In order that the supreme *Pati* may energise in soul and in the Pacam (Malam) from which the universe is evolved, there proceeds forth from him an energy (Catti, S. CAKTI) which in its various manifestations will require attentive consideration. The doctrine is thus summed up: "The supreme Catti, or essential energy that subsists in and one with Civam, sends forth in successive developments (1) the energy of desire, (2) the energy of wisdom, and (3) the energy of action. These powers in operation constitute the sacred body of Caiva. This 'the uncontaminated one approaches, manifesting himself as inscrutable grace, and thus joins himself to the pure maya.' He then approaches 'impure maya, the causal one, and establishes bodies, organs, worlds, and fruition in all their plenitude in order that deeds eternal and inexorable may be consumed,' as it is curiously phrased. Thus souls are embodied, involved in the bond from which, when deeds are consumed, they will be evolved. This is the mystery of the developed and undeveloped forms of the Supreme. What is specially important here is that supreme divinity (Pati) manifests himself and operates in the universe through his Catti, or energy, only. 'Civan and Catti are as the sun and its radiance.' This noun is in Sanskrit feminine, and thus the effective energy of Civan is represented as a female, a goddess, and it is very wonderful what an amount of mythology and ritual has been accumulated around this one word. The question is repeated again

and again, How is Pati, who is pure spirit, to mingle with and energise in souls and amid impurities? and the answer is, that he does so by sending forth an energy that is like a ray of light, a mighty influence that quickens, illuminates, and purifies all things, and this energy, personified as a goddess, has led to all the developments of Catti worship. This is in fact the way in which the Caiva philosophy bridges over the gulf between the finite and the infinite. (Compare Civa-nana-Bodham, p. 54, Madras, 1825.)

Note XIV.

'EVOLUTION,' 'PRESERVATION,' and 'INVOLUTION' IN OPPOSITION TO ATHEISM.

The doctors of the Caiva Siddhanta are strenuous opponents of the atheistic school, or *Lokayatikas* (see the Sarva-Darsana-Sangraha, Chapter I), where they are called Charvakas. These deny the existence of a creator, and the argument against them for the existence of a supreme Being, who evolves, sustains, and involves the phenomenal universe, is as follows: 'The whole universe, with its entire complement of beings, male, female, and without life, comes into phenomenal existence, subsists awhile, and then subsides; this is our experience. It is therefore necessary to assert the existence of a Lord, or *Pathi*, who creates, maintains, and destroys. That after dissolution, the phenomenal universe reappears in a new aeon is the result of the bond, *impurity*. For souls must again and again have embodiments; there must be a long chain of metempsy-

choses in order that these impurities may be matured. work out their legitimate tendencies, and produce their various results in the experience of each being. So when these are exhausted, may souls be released from their power. Since then these embodied living ones (souls) come upon the stage of being, act a while. and then pass away there must be a Lord (*Pathi*), who directs their course; especially as every element of the bond is unintelligent, and cannot seek out for itself the souls to which it clings; nor can the souls themselves select their own appropriate forms and successive embodiments, and cannot of themselves select the deeds which pertain to them. It is therefore necessary that the Supreme, the Uncontaminated One, should preside over and direct each embodiment. We thus see in this universe a succession of living beings with material environments. Now, what is thus manifestly subject to decay, and is ever being renewed and changed, must have an intelligent Author, Sustainer, and Restorer of its manifold frame. Therefore the Lord exists, and is first, and midst, and last,'

Note XV.

ANAVAM, OR THE 'BOND OF IGNORANCE.'

This is in later Caiva books called *Anavam* (=*minuteness*), an abstract noun from ANU (அணு) 'anything minute, subtile'. It is a word in its metaphysical sense coined by the Tamil Caivas.

The following (Chap. III) from the Tiru-arul-payan throws as much light upon this conception as it is

perhaps çapable of receiving. It corresponds in some ways to 'original sin': Sahaja-Mala.

Presented in this formal way it is the latest development of Caivism. (XIIth Century).

Chapter III.

THE NATURE OF THE BOND (PACAM), OR THE IMPURITY OF DARKNESS.[1]

The author has spoken of the LORD and of the FLOCK, and here he speaks of the BOND, which is threefold: darkness, deeds and delusion. But especially he speaks of *Anavam*, the first of these, ignorance assuming a concrete form.

Q. 1.—What is the sorrow that clings to the soul?

That (Anavam) which denies that there is the unceasing grievous round of embodiment, and that there is also bliss and means of help, is ever existent, though ever hidden. (21.)

Com.—There is an eternally clinging impurity of darkness[1] that conceals all that the soul should know in regard to afflictions from birth, the joys of release, and the help the Lord imparts.

Sum.—In this and the following couplet (1) the reality of *Anavam* and (2) its bewildering power are shown.

[The Tamil name "*Avicca*" is used as a synonym of Anavam. It is also called "darkness" (S. A+VIDYA)

1. Anava-malam.

(*irul*, for which *arul* =grace) is the remedy. (Chapter IV)]

Q. 2.—Unto what may this Anavam—'impurity'—be likened?

> There is nothing except darkness that shows itself and hides everything else, so as to make them one with itself. (22.)

Com.—Darkness, and it alone, has the power to abide, hiding things so that their distinctives differences shall not appear. So Anavam hides birth and death, the way of release, and the means of deliverance.

Sum.—The bewildering effect of Anavam is here shown.

Q. 3.—Is it in all things the analogue of darkness?

> Darkness hides objects of vision, but shows itself; Anavam hides all things else, and itself remains concealed. (23.)

Com.—Darkness in the phenomenal world wraps all things in concealment, but is itself clearly perceived. This mental darkness conceals both divine knowledge and its own presence in the soul.

Sum.—The spiritual darkness of Anavam is shown to be more cruel in its effect than ordinary darkness.

Q. 4.—This power which conceals and is itself concealed—does it affect the Lord?

> This Anavam exists from eternal ages, commingling with the soul, which is essentially united with the inner light, and abides until now. (24.)

Com.—From all eternity it co-exists in the soul together with the inner light of divine mystic wisdom; spreads not indeed over the divine essence, but dwells persistent in the soul, and obscures it even until now.

Sum.—Here it is taught that Anavam is from infinite ages, and that it does not pass out of the soul like "deeds" and "delusion."

Q. 5.—Is this Anavam really unknown to the souls it enshrouds?

'My lady Darkness' has an infinity of lovers, but hides herself from all with strictest chaste reserve! (25.)

Com.—Though this "darkness" pervades and interpenetrates all souls, yet to the soul in which it dwells the energy of ignorance reveals not herself.

Som.—This teaches the mysterious power of Anavam.

[Anavam is *one*, though pervading an infinity of souls.

There is a personification here, as in the next. In Tiruvacagam 4; 43-45,

'Soon as I thought of that Being, free from hate, unique,
Delusive powers in ever-changing millions swarmed,
And straight began their ever-varying, delusive play.'

In Manikka Vacagar's days the theory of Anavam had not been fully worked out.]

Q. 6.—How can one come to know this *Anavam*?

> No need of many words! This ignorance of all that souls ought to know is the gift of the 'sons of darkness.' (26.)

Com.—What good can come from using many words? The condition that is ignorant of the difference between temporal and eternal things must be caused by the powers of black darkness. Anavam is the parent of innumerable active energies of unwisdom.

Sum.—We learn here that this root impurity is the cause of a mighty power of darkness, and so is known by its effects.

Q. 7.—If any one denied the existence of Anavam,[1] what would you reply?

> If there be no darkness, why is there embodiment, and the joys and sorrows of earthly life? If you define it to be nothing else than the soul's essence, when it departs the soul must perish with it. (27.)

Com.—If you deny the concrete existence of this darkness of ignorance, why was the soul subjected to this sorrow of embodiment, which is the source of the life of sense? If you say that it is merely the natural condition of the soul, then if divine mystic wisdom be given, this ignorance departing, the soul will itself cease to be. (Cleansing would mean destruction.)

---

1. The *Aikkiya-vathi* school. See Civa-piragacam, 22. This school is the second in the 'refutation of heresies' by our author.

Sum.—This is a refutation of those who deny the existence of a specific impurity to which the name of Anavam is given.

Q. 8.—If one should say Anavam came incidentally in the course of development, what reply is there?

> If this impurity has a beginning, how can we explain the reason of its sudden appearance in the midst? Also in that case may not this disease spontaneously reappear even in the realms of deliverance? (28.)

Com.—If Anavam has sprung up incidentally, there must be some cause for its appearance, as there is for a soil on a white garment or for a tarnish on the surface of a mirror, nor in that case can there be any absolute and final deliverance for the soul, for Anavam may again spontaneously appear. The crucial question of *the origin of evil.*

Sum.—This is a refutation of those who teach that Anavam has had a beginning.

Q. 9.—If it be from all eternity, surely it never will depart.

> Though darkness grow snd spread, light if received will disperse it. If not, it never can leave the mind. (Even so, if Anavam yields not to successive impartations of grace, [1] the office of the guru is useless. But this office does rid the soul of it.) (29.)

---

1. Lit, '*Kalai* and the rest.'

Com.—Material light ever dissipates the darkness that admits it; if it were not so, perpetual darkness would brood over all things. Even thus if Anavam does not yield to the successive operations of grace, ignorance can never be dispersed. The soul must have a faculty of receiving effectual grace.

Sum.—Here one of the means of deliverance from Anavam is suggested.

Q. 10.—How would you answer a person who deemed that primal delusion, and not Anavam, concealed things?

குறிப்பு ஒன்று

சிவபெருமானின் தொழில்கள்; திருவிளையாடல்கள்

சைவ சித்தாந்த சரித்திரம், சிவபெருமான் மானிடர்களுக்கு, மானிடர்களின் உய்வுக்காக ஆற்றிய பணிகளை விவரமாகக் குறிப்பிட்டுள்ளது. பொதுவாகப் பார்த்தால் இவை முத்தொழில்; ஆக்கல், காப்பு, அழிப்பு. மணிவாசகர் மூன்றல்ல, ஐந்தொழில்களை குறிப்பிட்டுள்ளார். இவை என்னச் சேர்க்கை—அருள் தருவது, பிறவிச் சூழலிலிருந்து விடுதலை அளிப்பது.[1] சிவபெருமான் தமது அன்பர்களை ஒரு கொடூர விளையாட்டிற்கு உட்படுத்தி இருக்கிறார் என்பது சரிதை. எங்கும் நிறைந்தவர், எந்த ஆற்றலையும் கொண்டவர்;எந்த விதத்தில் சிவனாரது தொழில்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன? அவருக்கு எல்லாமே எளிது. நடிப்பின்றியே நடிப்பார். எல்லாத் திருவிளையாடல்களும் அவருக்குக் கைவந்த கலை. உலகெல்லாம் அவரதுப் புன்முறுவலில் மின்னொளிபட்டுத் திகழ்ந்தது. அவரது ஆட்டங்களே, நடனங்களே, உலகின் உயிர்மூச்சு. உலகு நடப்பின் ஆதாரமே அவைதான். அவரது அறுபத்து

---

1. ....''அனைத்துலகும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய் போக்குவாய்............''

—திருவாசகம் சிவபுராணம் 41—43

நான்கு திருவிளையாடல்களில் ஏமாற்று எத்தனை? கள்ளத்தனங்கள் எத்தனை? தெரியாமலா அவரைக் கள்வர் என்று சொல்வர்? அவரது அடியார்கள் அவரை இந்தக் கள்ளத்தனத்துக்காகக் குறை கூறினார்களா? இகழ்ந்தார்களா? கடிந்தார்களா? இல்லை. கள்வர் என்றுப் போற்றிப் புகழ்ந்தார்கள். மேலெழுந்தவாறு பார்க்கப் போனால் இந்தத் திருவிளையாடல்கள்—எடுத்துக்காட்டாக நரி பரியாக்கிப் பின்னர் பரி நரியாக்கிய விளையாட்டு—ஏதோ பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும். எனினும், இவை ஒவ்வொன்றிற்கும் நமது சைவ அன்பர்கள், சிவநேசச் செல்வர்கள், ஒரு வேதாந்தத் தத்துவத்தை ஆதாரம் காட்டுகிறார்கள். சிவபெருமான் தனது அன்பர்களைச் சோதிப்பது ஒரு புறம். இந்நாளில், எந்த நேரத்திலும் அவர் தமது அடியார்களை சோதிப்பவர் அன்றோ! இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, பலரும் சிவனடியார் போல் வேடம் பூண்டார்கள்; காஷாயத்துண்டு, சடைமுடி உட்பட. இவர்களில் எவராவது, ஒருவராவது, சிவபெருமானின் அருளுக்குப் பாத்திரமானவராக இருக்கக்கூடும். இந்த நினைப்பில் இந்தப் போலி சிவனடியார்கள் மீதும்—போலி என்று எப்படித் தெரியும்? — மக்கள் அன்பும், ஆதரவும் காட்டினார்கள். யாருக்குத் தெரியும் இந்த ஜடாதாரிகளில் ஒருவரைச் சிவன் வந்து ஆட்கொள்ளக் கூடும். அச்சமயத்தில், அவரை ஆதரித்த நமக்கும் கூட ஏதோ ஒரு பலன் கிட்டக்கூடும் அல்லவா? பார்த்தால் சற்று அருவருப்பாகக் கூடத் தோன்றலாம். இத்தகைய மனப்பான்மை, அதைச் சார்ந்த செயற்பாடுகள் புதியவை ஒன்றும் அல்ல. மேல் நாட்டுப் புராணங்களில் இத்தகைய செய்திகள் குறிப்பிடப் படவில்லையா என்ன? எடுத்துக்காட்டாக பாசிஸ், ஃபிலோமொன் பற்றிய கதை.[3]

---

2. இந்த மூத்த தம்பதியர், தமக்குத் தெரியாமலே, கடவுளர்களைத் தம் இல்லத்தில் அழைத்து உபசரித்

சிவபெருமானின் திருவிளையாடல்களில் மிக முக்கியமானது: தில்லை பொன்னம்பலத்தில் அவரது தாண்டவம் (ஆறாவது குறிப்பைக் காண்க) அநித்தியமான அவரது தொழில்களைச் சித்தரிப்பது இந்த நடனம். ஆனந்த நடனம்; அசுர நடனம், கபால நடனம், இடுகாட்டிலிருந்து வந்த நீறு என்ன? மழு என்ன? ஆனந்தம் என்ன? எல்லோருக்கும் இன்பம் ஊட்டும் பரமானந்தம் என்ன? இந்த அழிவிலா மகிழ்ச்சியை உலகனைத்திற்கும் இந்த கபாலி தன் தாண்டவத்தின் மூலம் எப்படி அளிக்கப் போகிறார்? தர்க்க ரீதியாக ஒன்றும் சொல்ல இயலாது. நம்பிக்கைதான் ஆதாரம்.

குறிப்பு இரண்டு

ஐந்தெழுத்துக்களில் மறைந்து உறைந்து நிற்கும் தத்துவம்

நான் இங்கு கூறப்போவது உமாபதி சிவாசாரியர்[1] அருளிச்செய்த திருவருட்பயன் எனும் பதிகத்தின் ஒன்ப

தனராம். இறுதியில் அந்த இல்லமே, ஒரு ஆலயமாக்கப் பட்டதாம். இதை ஜானதன் ஸ்ஃபிட் என்ற ஆங்கிலக் கவிஞர் தமது கவிதையில் வடித்துள்ளார்.

Baucis and Philomen, a poem by Swift published 1709; Baucis and Philomen were the aged couple, who entertained the gods unawares, and whose cottage was transformed by Zeus into a temple.*

*The oxford Composition to English Literature, Fifth Edition, Ed. Margaret Drabble, oxford University Press, (1985).

1. உமாபதியாரின் வாழ்க்கை வரலாற்றையும் இங்கு குறிப்பிடவேண்டும். இதை எழுதியவர் கழகப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாதபிள்ளை அவர்கள்

தாம் அதிகாரத்தில் விளக்கப்பட்டனவே, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். சி-வா-ய-ந-ம என்ற

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் (1969) - பக். 39-42.

உமாபதி சிவநாயனார் திருவரலாறு

உமாபதி சிவநாயனார் தில்லைவாழ் அந்தணரில் ஒருவர் இவர் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு என்ப. இவர் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் திகழும் அம்மை அம்பலவாணரைப் பூசை செய்யும் உரிமையுடையவர். இவர் ஒருநாள் பூசை முடித்துப் பல்லக்கில் ஊர்ந்து குடை, கொடி, சின்னம், பகல் விளக்கு முதலிய சிறப்புகள் முன்னே வர வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது சந்தான ஆசாரியர் நால்வருள் மூன்றாம் நிலையினராய் உள்ள மறைஞான சம்பந்தர் தெருவினில் நின்றுகொண்டிருந்தனர். அவர் இவர்தம் செலவினைக் கண்டு "பட்ட கட்டையிற் பகல்குருடு போகுது பாரீர்" என்று பகர்ந்தருளினர். அஃதாவது பட்ட மரத்தாலாகியது பல்லக்கு. அதன்மேற் செல்பவன் பகலில் தீப்பந்தத்தின் துணைகொண்டு செல்லுவதால் பகல் குருடு என்பதாம். எல்லாரும் இரவில் விளக்கின் துணையினை வேண்டுவர்; இவர் பகலிலும் விளக்கின் துணை வேண்டுவதால் பகல் குருடு எனப்பட்டார்.

இதனைச் செவியுற்றதும் உமாபதி சிவநாயனார் பல்லக்கினின்றுங் கீழிறங்கினர். நடுக்கத்துடன் மறைஞான சம்பந்தர் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். தன்னை ஆட்கொண்டருளும்படி முறையிட்டனர். ஆசிரியரும் இவர் தம் செவ்வி முதிர்வு நோக்கி ஏற்றருளினர். ஆசிரியர் முன்னே செல்ல இவரும் நீங்கா நிழல் போல் ஓங்கிய அன்பாற் பாங்குறப் பின்தொடர்ந்தனர். ஆசிரியர் கைக்கோளர் தெருவிற் சென்றனர். அவர்கள் நெசவுக்காக வைத்திருந்த கஞ்சியை வார்த்தனர். ஆசிரியரும் இருகையும் ஏற்று மகிழ்வோடு பருகினர். உமாபதி சிவனாரும் ஆசிரியர் முழங்கை வழியாக ஒழுகும் எச்சிற் கஞ்சியை மிக்க காதலொடுங் கை ஏற்றுப் பருகினர்.

ஆசிரியரும் சிவதீக்கை புரிந்து ஆதி மந்திரம் எனப்படும் அருந்தமிழ் மந்திரம் அஞ்செழுத்தைச் செவியறியுறூஉ

ஐந்தெழுத்துக்களின் தத்துவத்தை, மூலக்கருத்தைச் சிவாசாரியர் தெளிவுபடுத்துகிறார். வேறு வழிகளில்—

எனப்படும் உபதேசம் புரிந்தருளினர். பல்லக்கை விடுத்தலும் நடந்து தொடர்தலும் ஆகிய இரண்டானும் எனது எனப்படும் உடைமை உடற்பற்றுகள் நீங்கின. எச்சில் மயங்கி உபதேசங் கேட்டு அடிமையாயினமையின் யான் எனப்படும் அகப்பற்று நீங்கிற்று.

பின் ''சிவஞான போதம்'' எனப்படும் தனித் தமிழ் மெய் கண்ட முதல் நூலை உபதேசித் தருளினர். பின் தம் ஆசிரியர் அருளிய ''சிவஞான சித்தியாரை''யும் விளக்கியருளினர். இவ்விருபெரு நூல்களையும் முறையே உயிரும் உடம்புமாகக் கொண்டுள்ளது சித்தாந்தச் சைவ நன்னெறி என்று தலைமேற்கொண்டனர். கொண்டு ஓதினர். ஓதி, ''இவ்விரண்டு நூல்களையும் விரும்பி நோக்கிக் கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும் கலந்து பொது உண்மையென'' வகுத்துச் ''சிவப் பிரகாசம்'' என்னும் சித்தாந்த நூலை அருளினர். இஃது அந் நன்னெறிக்கு உடை போன்றாகும்.

இந்நிலையில் தில்லைவாழந்தணர்கள் இவர் தனித் தமிழ் மெய்கண்ட சந்தானத்தைக் குருவாகக் கொண்டு திகழ்கின்றமையானும், ''சிவப்பிரகாசம்'' என்னும் தனித் தமிழ்ப் புடைநூல் இயற்றினமையானும் தங்கள் மரபுக்குப் புறம்பென நீக்கினர். இவரும் கொற்றவன் குடியில் திருமடம் அமைத்து வீற்றிருந்தருளினர். நன் மாணவர் பலர்க்கும் மெய்கண்ட நூல்களை நவின்றருளினர். திருமுறை வழியாக நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும் புரிந்து வந்தனர்.

அம்பலக் கூத்தனை அகந்தழீஇ ஒழுகுமிவர் தமக்குரிய பூசை முறை வந்ததும், கால்நடையாக மாணவர் பலர் புடைசூழப் பொன்னம்பலம் வந்தனர். வந்ததும், ஆங்குள்ள அந்தணர் இவரை மறுத்து விட்டனர். இவரும் திருமடம் திரும்பினர். அந்தணரில் ஒருவர் பூசைபுரியத் தொடங்கினர். முதற்கண் செய்யப்படும் உடையவர் பூசைக்குரிய அழகிய சிற்றம்பலம் உடையாரைப் பேழையைத் திறந்து பார்த்தனர். அங்குக் காணப் பெற வில்லை. பெரிதும் நடுங்கினர். அருளொலியாக ''உமாபதி சிவம் வந்தால் காணப்பெறும்'' என ஒரு

கடுமையான துறவு முறைகளில்— சமாதி, சாந்நித்திய நிலையை அடைய இயலாதவர்களுக்கு, சிவனைத் துதித்து

மொழி எழுந்தது. எல்லாரும் உமாபதி சிவத்தினிடம் வந்து அடிதொழுது வணங்கிப் பெரிதும் வேண்டினர். அவரும் வந்தனர். அழகிய சிற்றம்பல முடையாரும் காணப்பெற்றனர். முறைப்படி திருமுறை வாயிலாக வழி பாடும் இயற்றி மீண்டனர்.

தில்லைமாநகரில் ''பெற்றான் சாம்பான்'' என்னும் நற்றவப் பேறுடையார் ஒருவர் வாழ்ந்து வந்தனர். அவர் சிவப்பேறு எய்துங் காதலால் சிவத்தொண்டு புரிய உன்னினர். தாமும் மனைவியும் காட்டிற் சென்று விறகொடித்துக் கொண்டு வருவர். தம் சுமையைக் கூத்தப்பெருமான் திருமடைப் பள்ளிக்கு நல்குவர். மனைவியார் தம் சுமையை விற்று வந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவர். இவ்வாறு தொண்டு பல நாள் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அம்பலவாணர் வெளிப்பட் டருளினர்; சாம்பனார்பால் செந்தமிழ்ச் சீட்டு ஒன்று அருளினர். அது வருமாறு:

'' அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.''

என்பதாம்.

இதனைப் பெற்ற அவர் அந்நாள் முதல் தம் விறகுத் தொண்டைத் திருமடத்துக்குப் புரிந்து வந்தனர். இது ''படமாடுங் கோயிலைவிட, நடமாடுங் கோயில் சிறப் புடைத்து'' என்பதை நினைவுறுத்துவதாகும். பல நாள் செய்த தொண்டின் பின் ஒருநாள் மழை மிகுதியால் தொண்டு முட்டுப்பட்டது. அதனால் திருமடத்தில் சமையல் தொண்டு சுணங்க நேர்ந்தது. இதனால் உமாபதி சிவனார்க்கு இச்செய்தி எட்டியது. அவர் சாம்பானாரைத் தம் முன் கொண்டுவரப் பணித்தனர்.

மறுநாள் சாம்பானார் இரண்டு விறகுச் சுமையுடன் திருமடம் வந்தனர். அடியவர்கள் திருவாணைவழிச் சாம்பானாரை முதல்வர் திருமுன் கொண்டு வந்து நிறுத் தினர். தொண்டனாரும் திருச் சீட்டை வைத்து வணங்

விளிக்கும் இவ்வைந்தெழுத்துக்கள் கைகொடுக்கும் என்பது அவரது முடிவு.

கினர். முதல்வரும் சீட்டை உச்சிமேற்கொண்டு சிவதீக்கை புரிந்தருளினர். தீக்கைச் சிறப்பால் திருவருளின் துணையால் ''பெத்தான் சாம்பானாரும்'' உடனே திருவடிப் பேறெய்தினர்.

இதனை உணர்ந்த சாம்பானாரின் மனைவியார் தெளிவு பெறாமல் அரசன்பாற் சென்று முறையிட்டனர். அரசன் சிறிதும் ஐயுறவு கொண்டிலன். எனினும் அம்மையாரைத் தெளிவிக்கும் பொருட்டு அவரை உடனழைத்துக் கொண்டு முதல்வர்பால் வந்தனன். வந்து முதல்வரை வணங்கி அவரைத் தெளிவிக்கும் பொருட்டு இப்பொழுதொன்று இயற்றியருளும்படி வேண்டினர். முதல்வரும் அங்குள்ளாரை நோக்கினர். எவரும் செவ்வி வாய்ந்தவராகக் காணப்படவில்லை. எனினும் தாம் வழிபடும் உடையவர்க்கு ஆட்டுந் திருமஞ்சனநீர் பாய்ந்து அதனால் வளர்ந்து அடியவர் திருவமுதுக்குக் காய் நல்குந் தன்மையிலிருந்தது முள்ளிச் செடி. அதனை உணர்ந்து அச் செடியினுக்கு அப்பொழுதே சிவதீக்கை புரிந்தருளினர். அச்செடி பலருங்காண வானிலிருந்து வந்த விமானத திலேறி மேலே சென்றது. யாவரும் தொழுதனர். அரசனுங் களிகூர்ந்தனன்; அம்மையாரும் உள்ளந் தெளிந்து உவகையுற்று முதல்வர் அடிதொழுது சென்றனர்.

பின்னொருநாள் அம்பலவாணர் திருவிழா வந்தது. உமாபதி சிவனாரை அழையாமல் கொடி ஏற்ற முயன்றனர். பலர் கூடி இழுத்தும் கொடி ஏறிய பாடில்லை. அனைவரும் வருந்தினர். அப்பொழுதும் முன்பு போலவே அருளொலி உண்டாயது. அம்மொழி ''உமாபதி சிவனார் வந்தால், கொடி ஏறும்'' என்பதாம். எல்லோரும் சென்று உமாபதி சிவனாரைத் தொழுது அழைத்து வந்தனர். அவர் வந்ததும் கொடிக்கவி பாடியருளினர். அப்பொழுது அனைவருங் களிகூரக் கொடி தானாகவே ஏறி நிலை நின்றது. இதனால் திருவருள் உலகுக்கு உணர்த்தும் ஒரு பெரும் உண்மையொன்றுண்டு. அஃதாவது :

தமிழகத்துத் திருக்கோவில்கள் அனைத்திலும் நாள் விழாச் சிறப்புவிழா முதலிய எல்லாம் தனித்தமிழால்

வினா-விடை முறையினால் இதைப் புரிந்து கொள்ளப் பார்க்கலாம். வினா-விடை: பத்து. பார்க்கலாமா?[1]

I. சொல்லொணாத இந்தப் பேரின்பத்தை அடைய வேறு வழி ஏதும் உண்டா?

ஏன் இல்லாமல்? பரமசிவன் திருவுளம் பற்றி இருபத் தெட்டு ஆகமங்கள் உண்டென்று சொல்லுவார்கள். வேதங்கள் நான்கு. இவை தவிரப் பரந்து கிடக்கும்

நிகழ்த்த வேண்டுமென்பதே. அதற்கென அருளால் அமைந்தனவே நால்வர் நற்றமிழ் மந்திரமும், திருமூலர் திருமந்திரமும், இவற்றோடிணைந்த ஏனைத் திருமுறை களுமாம். இதுகொண்டே உமாபதி சிவனார் ஆற்றிய வழி பாடனைத்தும் திருமுறை வாயிலாக வென்பது துணிய லாம். அம்மட்டுமன்றி உமாபதி சிவனார் மூவர் தேவாரத் தினின்றும் தொண்ணூற்று ஒன்பது திருப்பாடல்களைத் திரட்டிப் ''பதிமுதுநிலை'' முதலாக ''அணைந்தோர் தன்மை'' முடிவாகப் பத்துத் தலைப்புக்கள் அமைத்துத் ''தேவார அருண்முறைத் திரட்டு'' என்னும் பெயருடன் ஒரு நூல் வெளியிட்டுள்ளனர். இத்திரட்டு நூல் முப் பொருளுண்மை தெளிக்கும் ஒப்பரிய நூலாகும்.

இம் முதல்வர் ''க. சிவப்பிரகாசம், உ. திருவருட் பயன், ங. வினாவெண்பா, ச. போற்றிப்பஃறொடை, ரு. கொடிக்கவி, சா. நெஞ்சுவிடுதூது, எ. உண்மை நெறிவிளக்கம், அ. சங்கற்ப நிராகரணம்'' என எட்டுச் சித்தாந்த நூல்களை அருளியுள்ளார். அம்மட்டுமன்றிக் 'கோயிற்புராணம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம்' என மூன்று நூல்களும் அருளி யுள்ளனர். சித்தாந்த நூல்கள் எட்டின் சிறப்புகளை அவ்வவற்றின் பதிப்புரைகளில் விளக்கியுள்ளாம். இம் முதல்வர் ஒரு சித்திரை அத்த நாளில் சிவபெருமான் திருவடியில் முப்புணர்ப்பாய் இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு எய்தினரெனப.

2. மொ. பெ. கு: போப் அவர்களது உரையில், திருவருட்பயனில் உள்ள மூலச் செய்யுட்கள் குறிப்பிடப் படவில்லை. வாசகர்களது நுண்ணிய இரசனைக்காக அச்செய்யுட்களையும் இப்பகுதியில் சேர்த்துள்ளேன்.

எத்தனை, எத்தனையோ நூல்கள். இவை அனைத்தும் ஐந்தெழுத்தின் — பஞ்சாட்சரத்தின் — அடிப்படை உண்மையையே கருவூலமாகக் கொண்டவை. இவ்வைந்தெழுத்துக்களில், உலகின் தத்துவமெல்லாம் அடக்கம்.

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின் — IX-81

விளக்கம்: ஐந்தெழுத்துக்களின் சாரம், இறைவன், இறைவனை வழிபடும் மக்கள், அம்மக்களைத் தூண்டி ஈர்க்கும் பாச உணர்வு என்பவற்றையே ஆதாரமாகக் கொண்டது.[3]

---

3. மொ. பொ. கு: உமாபதியாரது சிவப்பிரகாசம் என்ற நூலிலேயே இக்கருத்து காணப்படுகின்றது, என்று கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் கோடி காட்டியிருக்கிறார்கள். ''பல கலை ஆகம வேதம் யாவையினுங் கருத்துப் பதி பசு பாசம் தெரிதல்'' (திருவருட்பயன், சைவசித்தாந்தக் கழக வெளியீடு - (1968)

திருமூலரின் திருமந்திரத்திலும் பதி - பசு - பாச சம்பந்தம் விளக்கப் பெற்றுள்ளது.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகில் பசு பாசம் நிலாவே

(முதல் தந்திரம்; கருணாமகம் : பாடல் 159)

இதன் 'விரிவுரை'யாக மற்றுமொரு மந்திரம்:

பசுப்பல கோடிப் பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாச மூன்றுண்டு
பசுத்தன்மை நீக்கிய பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே

(எட்டாம் தந்திரம்: பதிபசுபாசம் பேறன்மை. பாடல் 2367)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுகபற்று விடற்கு

என்ற வள்ளுவர் வாக்கையும் இங்கு நினைவுகூரலாம்.

சுருக்கம்: சத்தியத்தின் உட்பொருள் ஐந்தெழுத்துக் களில் அடக்கம்.

II. இந்த ஐந்தெழுத்துக்கள் கூறுவன தான் என்ன?

சிவன் (இறைவன்), சக்தி, பாசம், எழில் மாயை, அநித்தியமான ஆன்மா இவை ஐந்தும் பிரணவ நாதமான ஓங்காரத்தை விட்டுப் பிரியாத இந்த எழுத்தஞ்சிலே அடங்கும்.

இறைசத்தி பாசம் எழில் மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத் துள் — IX-82

விளக்கம்: ஐந்தெழுத்துக்களில் பொதிந்தவை: ஒன்று - சிவனார் பெருமையும் அருளும்; இரண்டு - சக்தி (சிவனுள் சார்ந்தது); மூன்று - பாசத்தைப் பற்றிய அறிவு; நான்கு - எழில் மாயையைப் பற்றிய உணர்வு; ஐந்து - ஆன்மா. இவை அனைத்தையும் அடைத்துப் பிடித்துக் குறுக்கித் தன்னுள் கொண்டது ஓங்காரம் என்ற பிரணவ மந்திரம்.[4]

சுருக்கம்: ஓங்காரமே ஐந்தெழுத்தின் சிறு, சிறிய, சின்னஞ்சிறு பிரதிபிம்பம்.[5]

III. இவ்வைந்தெழுத்துக்களின் சார்பு என்ன? முறை (order) என்ன? எந்த முறைப்பாட்டில் இவை இருக்கின்றன?

ஒரு புறத்தில் மக்களும் மாக்களும் இரசிக்கும் நடனம்; மறுபுறத்தில் அருளும் சிவமும் தாண்டவமாடும்

---

4. சி-வ-ய-ந-ம என்ற ஐந்தெழுத்துக்களுக்குத் திரு. இராமநாதபிள்ளை அவர்களது விளக்கம் சுவை யானது. சி - சிறப்பு; வ - வனப்பு; ய - யாப்பு; ந - நடப்பு; ம - மறைப்பு.

(திருவருட்பயன் - முற்குறிப்பிட்டுள்ளது.)

5. Microfilm என்பது போல வைத்துக் கொள்ளுங் களேன்!

ஞான நடனம்; இவற்றின் இடையே ஆன்மா. (எதைத் தேர்ந்தெடுப்பது?)

ஊன நடனம் ஒருபால் ஒரு பாலாம்
ஞான நடனம் தான் நடுவே நாடு — IX-83

விளக்கம்: ந, ம என்பவை 'ரசனை' நடனத்தைக் குறிக்கும் என்று கொள்ளலாம். அவ்வாறே, சி, வ என்புவை அருட்தாண்டவத்தை அறிவுறுத்தும். ய (யாக்கை என்று சொல்லலாமா?) இந்த இரு மத்தளங்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்ட ஆத்மா.

சுருக்கம் : தேவையா?

IV. இவ் வைந்தெழுத்துக்களின் மூலம் ஆன்மா மெய்ஞ் ஞானம் அடையாதது ஏன்?

ஏனென்று பார்க்கலாம். 'ம' என்பது, பாச பந்தத்தளை; 'ந' -பாசத்திரை; மாயை. இவை இரண்டும் ஒருவரது மனத்தை ஆக்கிரமித்திருக்கும்போது சிவம் செல்லாது. இவை அகன்றால், மனம் சிவனிடத்தில் ஒன்றும்.[6]

விளக்கம்: இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம் என்று தோன்றுகிறது. மேற்கண்டதுதான் பொருத்தம் என்பது என் கருத்து. மலமும் (Impurity) திரையும் (veil) சிக்கெனப் பிடித்துக் கொண்டால், சிவனை அடைய முடியாது. இவற்றின் தளையி லிருந்து விடுபடும்போது ஆன்மா சிவானந்தத்தை அனுபவிக்க முடியும்.[7]

---

6. மொ. பெ. கு :
விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும் — IX-84

7. முன்னர் குறிப்பிட்ட பதி—பசு—பாச வட்டம் தான்.

சுருக்கம்: பாசத்தளை, அதிலிருந்து விடுபடுதல் இவை இரண்டுமே ஐந்தெழுத்துக்களில் அடங்கியுள்ளன.

ஒப்புமைக்கு, உமாபதியாரின் சிவப்பிரகாசத்திலிருந்தே ஒரு பாடலைப் போப் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்.

ஐவகையால் உறுபயன்கள் நுகர, வருங்காலம்
அது புருட தத்துவமென்று அறைந்திடுவர் அறிந்தோர்
மெய்வகைய கலாசுத்தி தனின் இதற்கும் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும்.
செய்வகையின் தொடர்ச்சி இங்குத் தோன்றுவிக்கும் குணத்தின்
சேர்வு புரி பிரகிருதி திரிகுணமாம் அவை தாம்
இவ்வகையில் சாத்துவித ராசத தாமதமாய்
இயம்பு வர்கள் ஒன்றிரண்டு குணம் ஏற்க உடைத்தே.
— சிவப்பிரகாசம், இரண்டாம் சூத்திரம் : 41

[மொ. பெ. கு. : ஐவகை — காலம், நியதி, கலை, வித்தை, காதல். விரும்பிய நூல் — நம்மால் விரும்பப் பட்ட திவ்விய ஆகமங்கள்; திரிகுணம் — சாத்துவிக ராசத, தாமத குணங்கள்.]

V. இவை இவ்வாறு இருந்தும், பஞ்சாட்சரம் நாவில் இருந்தும் ஆணவம் ஏன் அகலவில்லை?

இதில் உருசூட்சுமம் இருக்கிறது — உச்சரிப்பில் 'சிவ' என்று தொடங்கி ஐந்தெழுத்தை உச்சரித்தால், மலமும் (Impurity) மாயையும் அகலும்.

மாலோர் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாகி மீளா விடின். — XI : 85

விளக்கம் : ஐந்தெழுத்துக்களை இரு முறையாக ஓதலாம்! 'நம சிவய' — ஒன்று; 'சிவய நம' — இரண்டு.

இவ்வெழுத்துக்களில் முன்பே கூறியபடி, 'ந'வும், 'ம' வும், நடப்பினையும், மறைப்பினையும் குறிக்கும். இவற்றை முதற்கண் உச்சரித்தால், பாசமும், மாயமும் மறைவது எப்படி? எனவே, 'சிவய நம' என்று சிவனை முதலில் சொன்னால், ஆணவம் தானே அகலும்.

சுருக்கம்: பாசத்தளை அகற்றிட வேண்டுபவர் 'நம சிவய' என்பதற்குப் பதில், 'சிவய நம' என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

VI. இப்படி உச்சரித்தால் சிவனைக் கூடலாமோ?

என்ன கேள்வி இது? நீர் ஐந்தெழுத்தைச் சொல்லிச் சொல்லிப் பாராயணம் செய்யலாம். ஆனால், சிவனை முதலிற் சொல்ல வேண்டும்.

ஆராதி ஆதாரம் அந்தோ அது மீண்டு
பாராது மேல் ஓதம் பற்று — XI : 86

விளக்கம் / சுருக்கம் : அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் ஐந்தெழுத்தை ஓதுவதில் பயனில்லை.[8]

VII. சரி: எப்படித்தான் இதை ஓதுவது?

எத்தனை தரம் தான் சொல்லுவது? சிவ என்று முதலில் சொன்னால், உன் ஜனன — மரண பயம் நீங்கும் (உனக்கு மறுபிறவி இல்லை— அதுதானே கவலை?).

---

8. மொ. பெ. கு: 'சிவய நம' என்று ஓதுதலே முதற் படி ஆகும். இரண்டாவது படி — 'சிவய சிவ'. எனவே, சிலர்த்தார்க்குச் 'சிவய நம'வும், நோன்பினர்க்குச் 'சிவய சிவமும்', செறிவினர்க்குச் 'சிவய'வுமும், அறிவினர்க்குச் 'சிவசிவ'மும் படிமுறையாக் கொள்கும் பான்மைத் தென்ப. — திரு. ப. இராமநாதபிள்ளை (முற்குறிப் பிட்டது).

சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம் இதுநீ ஓதும்படி. — XI : 87

விளக்கம் : (மொ. பெ. கு)

ஒப்புமை காண்க.

'' உனதருளால் திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று
நீறணிந்தேன்'' — திருநாவுக்கரசர்

'' நானேயோ—தவஞ்செய்தேன் சிவாய நம எனப்
பெற்றேன்'' — மணிவாசகர்

VIII. சரிதானையா, இம்முறையில் ஐந்தெழுத்துக்களை ஒப்புவித்தால், கிடைக்கும் பயன்தான் என்ன?

உனக்கு எளிதாகச் சொன்னால் புரியாது. சொல்லுகிறேன் கேட்டுக் கொள். வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தை ஆன்மாவுக்குக் கொடுத்து மேலாகிய பரமசுகத்தை விளையா நிற்கும், அந்தச் சிவத்துக்கு.

வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு — XI : 88

விளக்கம் : 'வ' என்பது அருளைக் குறிக்கும். சி — பேரின்பம் — அருள் மூலம் சிவன் முத்தி அடையலாம்.[9]

IX. ஆன்மா நிற்கும் முறை எப்படி?

மறுவில்லாத மறைப்பாற்றலைக் குறிக்கும் 'ந'கரத்துக்கும், சிறப்பாற்றலாகிய 'வ'கரத்துக்கும் இடையே நில்லாது சிறப்பாற்றலாகிய 'வ'கரத்துக்கும், சிகரமான 'சி'க்கும் இடையே இருக்கும்.

---

9. மொ. பெ. கு: அன்பு, அருத்தி, காதல், அருள் என்று உணர்வுகளை வகைப்படுத்தியுள்ளார்கள். ''அருள் எனும் அன்பீன் குழவி'' என்ற வள்ளுவர் வாக்கினை இங்கு நினைவு கொள்ளவேண்டும்.

ஆசில் நாப்பண் அடையா(து) அருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு —XI : 89

விளக்கம் : அருளுக்கும் பேரின்பத்துக்கும் இடையே நிற்கும் ஆன்மா.

X. என்னென்னவோ சொன்னீர்கள். ஆன்மா வீடு பெறும் தருணம் இருக்கிறதா?

என்ன சொல்லுவது? இறைவனை அடையும் பாதையை மனத்தில் வழுவாது கொண்டு, அதையே குறிக்கோளாய்க் கொள்ள வேண்டுமென்று இறைப் பாட்டுக்களெல்லாம் இறைஞ்சுகின்றன.

எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து — XI : 90

விளக்கம் : சிவன்—சக்தியின் அருளினைக் கைவிடாமல், மறக்காமல் அவர்களையே எஞ்ஞான்றும் சிந்தித் திருக்கவேண்டும். உமாபதியாரின் போதனைகளின் சாரம் இது.

குறிப்பு மூன்று

முத்தி—வீடு

சைவ சித்தாந்தத்தில் முத்தி என்பதை ஸம்ஸ்கிருதத்தில் 'முக்தி' அல்லது 'மோக்ஷம்' என்று சொல்லுவார்கள்; தமிழில் 'வீடு'; இக்கோட்பாட்டை மிகத் தெளிவாக விளக்குவது உமாபதியாரின் (அவரைப் பற்றி முன்பே சொல்லியிருக்கிறோம்) சிவப்பிரகாசம் என்ற கவிதைத் தொகை[1] ஆகும்.

---

1. ''சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப் பிரகாசம் என்ற மூன்றிற்கும் ஒரு தொடர்பு உண்டு. சிவ ஞானபோதம், நூல் உணர்த்தும் ஆசானுக்கு ஒப்பாகும். சிவஞானசித்தியார், அந்நூலைக் கற்றுணரும் மாண

இந்து சமயத்தை சார்ந்தவர்களுக்கெல்லாம் இறுதிச் குறிக்கோள் முத்தியே. எனினும் முத்தி என்றால் என்ன?' அதை அடைவது எப்படி? என்பதில் பல கருத்து வேற்றுமைகள். இவற்றைச் சிறிது விளக்க விழைகின்றேன்.

1. லோகாயுதர்கள் சொல்வர், இது இம்மையிலேயே இன்பங்களை அனுபவித்துப் பெறக்கூடியது என்று. சித்தாந்த நூலகர்கள் இவர்களைப் போலிகள் என்று இகழ்ந்தனர்.

2. புத்தர்கள் நிர்வாண நிலை என்றார்கள்; இது அழிவு நிலையே அன்றி முத்திநிலை அல்ல என்பது தமிழ் சைவ குரவர்களின் வாக்கு.

3. ஆசாபாசங்களை (மும்மலங்கள்) அழித்தாலே முத்தி கிட்டும் என்பது சில ஜைன (சமண) மதத்தவர்களின் வாதம். நாஸ்திகவாதிகளாம் சாக்கிய (Sankhya) கொள்கைக்காரர்களும் இதையே சொன்னார்கள். இது நமது சைவப் புலவர்களுக்கு ஒப்புதலாக இல்லை.

4. தொழுகையே வேண்டாம், வழிபாடு வேண்டாம், வேண்டுதலையும் வேண்டாம். இது ஒரு கட்சி. என்றோ, எப்படியோ ஞானம் வந்து உதிக்கும். அப்படி என்றால், தொண்டன் கல்லா, களி மண்ணா? இது மாற்று வாதம்.

வருக்கு ஒப்பாகும். சிவப்பிரகாசமோ, கற்றுணர்ந்த மாணவர் தாம் கற்றுணர்ந்ததைச் செயல்படுத்தும் கொள்கைகளுக்கு ஒப்பாகும். ''இம்மூன்றும் முறையே, சிவபெருமானின் நெற்றிக்கண், வலக்கண், இடக்கண் போன்றவை. அவை, அறிவு, ஆள்வினை, அன்பு என்றும் அவன்றன் முக்குணங்களும் போன்றனவாகும்.''

—பதிப்புரை: சிவப்பிரகாசம் மூலமும் உரையும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், (1969).

5. ஆன்மாவிலிருந்து எல்லா அழுக்குகளையும் அகற்றினால் முத்தி கிட்டும், என்றொரு போதனை—பித்தளைப் பாத்திரங்களில் ஈயம் பூசினால் அதிலுள்ள அழுக்குகள் அகலும் அல்லவா, அதுபோல. இதற்குப் பதில்: 'ஈயம்' பூசுவதால் பித்தளை தூய்மை அடைவதில்லை. அதன் அழுக்கு அழுக்குத்தான். ஈயம் ஒரு மேற்பூச்சே தவிர பித்தளையின் அழுக்குகளை அதனால் அகற்ற முடியாது. மேற்பூச்சு மாத்திரம் அல்ல. எடுத்துக்காட்டிற்குப் பொன்னை எடுத்துக் கொள்ளலாம். பித்தளை மேல் சேரும் மலங்கள் பொன்னைச் சேரா. பித்தளை பித்தளையே; பொன் பொன்னே; சிவனாரின் அருள் வெறும் ஈயப் பூச்சுதானா? (கிறித்துவ மதக் கொள்கைகளிலும் இத்தகைய வாதம் உள்ளது) மலங்களும், பாசமும் அநித்தியம் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் ஒன்று. இவற்றிலிருந்து விடுதலை பெற்றோர் இருக்கக் கூடும். எனினும் இம்மலங்களும் பாசமும் ஒளிந்து நிற்கவே செய்யும்— நாம் காணவொண்ணாத சந்திரனின் மறுபுறம் போல.

6. மற்றும் சில சிவாசாரியர்கள் கூறுவர்;—சிவனாரின் கருணை ஒளியால் பூதஉடலும், அதைச் சார்ந்தனவும் மாறுபட்டு, ஆன்மா அநித்தியம் ஆகின்றது என்று. அப்படியென்றால், இதுவும் ஒரு வெளிப்பூச்சு தானே?

7. வேதாந்திகள் ஓர் உதாரணம் சொல்லுவார்கள். மூடி வைத்திருக்கும் ஒரு ஜாடியை உடைத்தால் அந்த ஜாடியில் இருந்த காற்று வெளிக்காற்றுடன் சேர்ந்து ஒன்றாகும் அல்லவா? அதைப் போலவே சிறைப்பட்டிருக்கும் மனித ஆன்மாவும் இறையுடன் ஒன்று கலக்கக் கூடும்.

8. இன்னும் சிலர் சொல்வர்—முத்திநிலை அடைய வேண்டுமானால் மனிதனின் ஆன்மா அற்றே அழிந்து இறைவனுடன் ஒன்றாகின்றது.

9. மற்றும் ஒரு வாதம்—சில சிவாசாரியர்கள் கூறியது தான்—பந்தத்திலிருந்து விடுதலை பெற்ற மனித ஆன்மா இறைவனின் அபூர்வ சக்தியைப் பெற்றுச் சித்திகள் செய்யும் ஆற்றலைப் பெறுகின்றது என்று. அத்தகைய அமானுஷ்யமான ஆற்றல்கள் பெற்ற வர்கள் என்று சொல்லிக் கொள்வோர் இந்தியாவில் பலர். இதில் எத்தனை தூரம் ஏமாற்று இருக்கிறது என்பது வேறு விஷயம்.

10. மற்றொரு கூற்று—விடுதலை பெற்ற மனித ஆன்மா ஒரு கல் போல், செல்போல் உணர்வற்றது ஆகிறது. உணர்வற்ற, நகர்வற்ற பாறை நிலை அது.

மேற்கூறிய இந்தப் பத்து கூற்றுக்களிலும் உள்ள குறை பாடுகளைச் சுட்டிக்காட்டி யிருக்கின்றனர். உண்மை யான வீடுதான் என்ன? இப்படிச் சொல்லலாமா? ஆணவம், கண்மம், மாயை என்ற மும்மலங்களினின்றும் விடுபட்டுச் சிவனருளால் ஞானம் எய்திச் சிவனாரின் முன்னிலையில் இறுதியான, அறுதியான பேரின்பத்தை அனுபவிப்பவர் எவரோ அவரே வீடு பெற்றார், முத்தி அடைந்தார், மோட்சம் எய்தினார் என்று சைவ சித்தாந்தக் கொள்கைப்படி சொல்லக்கூடும்.

குறிப்பு நான்கு

குருவின் தத்துவம்

இந்து மதத்தில் குரு — ஆசான் — மிக முக்கிய அங்கம் வகிக்கிறார். இறைவனே மனித உருவாகி வந்தவர் ஆசான் என்று கூறுவார்கள். குறிப்பாக, சைவ சித்தாந்தத்தில் ஆசானின் மேன்மை மிக மிக உயர்வாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பிறவிப் பயனின் இறுதிப் படியான முக்தியை நோக்கி, வழிகாட்டி, அழைத்துச் செல்பவர் அவர். (ஐந்தாம் குறிப்பை ஒப்பு நோக்கவும்)

ஆசானுக்குள்ளே சிவனார் உறைகிறார். தகுதி வாய்ந்த சீடரை தம் அருட் கண்ணால் பார்க்கிறார். மெய் தடவி, உளம் உருகி, வாழ்த்துகிறார். சீடர்க்கு உபதேசம் செய்து அருளுகிறார். சீடர் தலை குனிந்து வணங்கும் குருவின் பாதங்களே சிவனாரின் பொற்றாமரை அடிகள்.[1] இந்த தத்துவத்தை உமாபதி சிவாச்சாரியார் தமது திருவருட்பயனில் விளக்கமாக சித்திரித்துள்ளார்.

(அருள் கூறு நிலை - ஐந்தாம் அத்தியாயம், திருவருட் பயன்.)

திருக்குறள் பாணியில் அமைந்திருக்கும் இப்பாக்கள் வினா-விடை முறையில் ஆக்கப் பெற்றிருக்கின்றன. வினா, ஐயம் நீங்காத சீடர்களது; விடை, மெய்ப்பொருள் உணர்த்தும் ஆசிரியரது.[2]

---

1. மொ. பெ. கு: ஒப்புமைக்காகத் திருவாசகத் திலிருந்து மேற்கோள்:

கூடல் இலங்கு குருமணி, போற்றி !
தென் தில்லை மன்றினுள் ஆடி, போற்றி !
....
ஆவா, என்றெனக் கருளாய் போற்றி !
— போற்றித் திரு அகவல்

2. மொ. பெ. கு: எடுத்துக்காட்டாக ஒரு 'சிவா சாரியார் குறள்' :

அகத்துறு நோய்க் குள்ளினர் அன்றி, அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.

விளக்கவுரை: உடலில் ஒரு நோய் வந்து ஒட்டினால், அதை அவ்வுடலைச் சார்ந்த ஆன்மா உணர்கிறதே அன்றி, மற்றச் சுற்றத்தார் எவரும் உணர, அநுபவிக்க முடியுமா? அதுபோல, ஆன்மாவிடம் உள்ள அறியாமையை உயிர்க்குயிராய் இருக்கிற பரமசிவனே, ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்து நீக்குவாரே அன்றிப் பிறரால் ஆகாது.

கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை (முற்குறிப்பிட்டது.)

குறிப்பு ஐந்து

சக்தியின் எல்லை: நிறைவு

மக்களின் ஆன்மாக்கள் ஒரு கட்டுப்பட்ட, பந்த நிலையில் உள்ளன. இந்தக் கட்டிலிருந்து விடுதலை பெற்று முக்தி நிலை அடைவது எப்படி என்று சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் விளக்குகின்றன.

உலக இன்பங்களைத் தீர்த்து உயிர்த்து 'நான்' என்ற அகப்பற்றினால் கட்டுண்டு இருப்பது முதல் கட்டம். இவற்றினின்று சிறுகச் சிறுக இறைவன் அருளால் விடுபடுவது இரண்டாவது படி. இதனினின்று உலகப் பந்தங்களை, பாம்பு சட்டையை உரிப்பது போல, மெல்ல மெல்ல உரித்து, இறைவனுக்கு அருகே செல்லும் கட்டம் இது. இந்நிலையை அடைந்த பிறகு, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் முத்தி நிலை மூன்றாவது படி.

முதல்படியிலிருந்து இரண்டாவது படிக்குச் செல்வதே கடினமான காரியம். அதாவது, மனிதன் — உலகப் பற்றுள்ள மனிதன் — ஜீவன் முக்தன் ஆவன். எப்படி இந்நிலையை அடைய முடியும்? முதல் கட்டத்திற்கும் இரண்டாவது கட்டத்திற்கும் இடையே ஐந்து படிகள்.

முதற் படி: சிவனாரின் சக்தியால் உந்தப்பட்டு, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கண் விழிக்கின்றவன் அனுபவிக்கும் வேதனைகள்.

இரண்டாவது படி: மாயையின் போர்வையில் தன் செயல் என்ன, தன் சுய அறிவால் பகுத்தறிவால் ஆற்றிய செயல்கள் என்ன, ஏதோ ஒரு எதிர்க்க மாட்டாத சக்தியினால் உந்தப்பட்டுச் செய்த செயல்கள் என்ன என்ற தடுமாற்றம்.

மூன்றாவது படி: மும்மலங்கள் என்று கூறினோம். அவை ஈன்ற கனிகள் பழுத்து விட்டன. இவை என்ன? இதைப் பற்றிய சிந்தனை, ஆன்மயோகம்.

நான்காவது படி: நன்மையும் செய்திருக்கலாம். தீமையும் செய்திருக்கலாம். இவற்றை முற்றறிந்த கருணைக் கடலாம் இறைவன் தராசில் இட்டுச் சமப் படுத்துகிறார். இச்செயல்களை மூன்று கூறுகளாக ஆன்மா புரிந்துகொள்கிறது — பழவினை; முற்பிறப்பில் செய்த தீவினைகளுக்குப் பரிகாரமாக இப்பிறப்பில் செய்த நல்வினைகள்; முற்றிய முக்திநிலை அடைவதற்கு முன்னால் இன்னும் செய்ய வேண்டிய நல்வினைகள்.[1]

ஐந்தாவது படி: உலக உணர்ச்சி எல்லாம் நீங்கி ஒரு புத்தொளி பிறக்கின்றது. இதையே சிவ-சக்தி-நிபாதம்- என்று சொல்லுவர். (சக்தியைப் பற்றி விரிவாக 13-ம் குறிப்பில் காண்க.)

ஐந்து படிகளையும் கஷ்டப்பட்டு இடர்ப்பாடுகளை எதிர்த்துக் கடந்து தாண்டியாகி விட்டது. இனி இறுதி நிலை — நிறைவு நிலை — முக்தி, மோட்சம், வீடு.

---

1. மொ.பெ.கு: போப் அவர்கள் இங்கு, நாலடியார் ஒன்பதாம் அதிகாரமான 'பழவினை'யைச் சுட்டிக் காட்டு கின்றார். செய்யுட்களை அவர் குறிப்பிடவில்லை எனினும், கீழ்வரும் இரண்டும் ஈண்டுப் பொருத்தமாக இருக்குமென்பது என் கணிப்பு.

(i) பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு

[விளக்கவுரை: இளம் பசுங் கன்றுக்குத் தன் தாய்ப் பசுவை அடையாளம் தெரியாதா? அதேபோலப் பழவினையும் தன்னைச் செயலாற்றியவரை இனங் கண்டு அவர் பின்னே செல்லும். சுருங்கக் கூறினால், பழவினை தனக்குரியவனைத் தவறாது பின் சென்று பற்றும்.]

குறிப்பு ஆறு

சிதம்பரம சிவதாண்டவம்

சைவர்களுக்குத் தில்லையைவிடப் புனிதமான கோயில் வேறு ஒன்றும் இல்லை. உமாபதியாரின் (இவரைப் பற்றிய விளக்கம் குறிப்புக்கள் இரண்டிலும், நான்கிலும் காண்க) கோயில் புராணம் தில்லையின் சிறப்பை விளக்குகின்றது. பெரிய புராணம் 63 (அறுபத்தி மூன்று) சிவநேசச் செல்வர்களின் சரிதை. இதற்கும் முற்பட்டது உமாபதியாரின் கோயில் புராணம். வியாக்கிய பாதர் (புலி — அடியோன்), பதஞ்சலி (அரவத் தொண்டர்) சிவதாண்டவம், ஹிரண்ய வன்மர் (பொன்னடியார்) இவை பற்றியது உமாபதியாரின் கோயில் புராணம். இத்துடன், பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு இதில்.

I வியாக்கிய பாதரது பெயர் மிகத் தொன்மை யானது. தென்னகத்தில் பிராமணச் சித்தாந்தம் ஊன்றப்பட்ட பழைய காலத்திலேயே இவரது பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. ரிக் வேதத்திலேயே இவரது பெயர் காணப்படுகின்றது. சமீபத்திய சைவ சித்தாந் தத்தின் மிகப் பழமையான வேத காலத்திற்கு ஒரு பாலம்

(ii) உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்
ஒருவழி நில்லாமை கண்டும்—ஒரு வழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து

[விளக்கவுரை: அழகிய தோற்றமும், இளமை மிடுக்கும், பொருட் செல்வமும் எல்லோரிடமும் சமமாக இருக்கிறதோ? இல்லை. காரணம், அவரது பழ வினை. நல்வாழ்வுக்குக் காரணம் நல்வினையே. இதை அறிந்துகொண்டு இப்பிறப்பிலாவது இயன்ற வரை நல்லது செய்தல் வேண்டும். செய்யாவிட்டால் இப்பிறவியும் வீணே.]

போல அவரைச் சொல்லுகிறார்கள். கதை இது. கங்கை நதிதீரத்தில் வேத வித்தான ஒரு அந்தணருக்கு ஒரு பிள்ளை பிறந்தான். சிறு வயதிலேயே அவனது அறிவு ஒளி பளிரிட்டது. தந்தையார் தமக்குத் தெரிந்ததெல் லாம் மகனுக்குப் போதித்தார். 'இன்னும் நான் என்ன செய்ய உனக்கு?' என்று தந்தை கேட்டார், தனையனை. தந்தையை நமஸ்கரித்துப் பிள்ளை சொல்லுவான்: "தெய்வ வழிபாட்டில் எது மிக உயர்ந்தது?" "கேட்க வேண்டுமா? சிவ ஆராதனையே துறவு நோன்பின் உச்சக் கட்டம். அதைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லை."

"எப்படி அவரை ஆராதிப்பது?"

"பரப்பிரம்மம், பிரபஞ்சம் அனைத்திலும் நிலைத்து நிறைந்துள்ளார். ஆயினும், உலகில் சில இடங்களில் அவர் பிரத்தியேகமாகக் காணப்படுவார். அவற்றில் ஒன்றென்ன? அதுவே அவரது முதன்மைத் தலம் — மூல ஸ்தானம் என்று சொல்லுவர். அங்கு சென்றால், சிவனை ஆராதித்துப் பிறவிப்பயனை அடையலாம். அங்கு சிவன் உன்னை ஏற்றுக் கொள்ளுவார். அங்கு ஒரு லிங்கம் உண்டு. வாயுலிங்கம் என்று அதைச் சொல்லுவார்கள். அதை முறையாக வழிபடு!"

இத்துடன் தாய் தந்தையரிடம் விடை பெற்றுக் கொண்டு இளைஞர் தில்லை நோக்கிச் செல்லலானார். வழியில் மலைகளைக் கடந்தார், நதிகளில் நீந்திச் சென்றார், எத்தனையோ தூரம் வயல் வரப்புகளில் நடந்தார். இறுதியில், ஒரு தாமரைத் தடாகம் வந்தது (சிவகங்கை தீர்த்தம்). அதனிடையே ஒரு பெரிய ஆல மரத்தின் நிழலில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டார். கண்ட வுடன், நமஸ்கரித்து வழிபட்டார், லிங்கத்தினை. ஆராதனைகள் அனைத்தும் செய்தார் அதன் பிறகு கீழ்த்திசையை நோக்கிச் சிறிது தூரம் சென்று ஒரு அழகிய குளத்தருகில் வசந்த மலர் பூக்கும் மரத்தடியில்

தமக்கு ஒரு ஆசிரமத்தை ஏற்படுத்திக்கொண்டார். தனது தனிப்பட்ட கொள்கைக்காக ஒரு லிங்கத்தையும் அங்கு பிரதிஷ்டை செய்தார். இரண்டு கோயில்கள் ஆயின. இரண்டு லிங்கங்களையும் ஆராதிக்க வேண்டும். எப்படிச் செய்வது, முக்கியமாக மலர் ஆராதனையை? மலர்கள் அருகில் உள்ள செடிகளிலும் உள்ளன; தூரத்தில் உள்ள காட்டுக் கொடிகளிலும் உள்ளன; அதற்கும் அப்பால் நெடிதுயர்ந்த மரங்களிலும் உள்ளன. இவற்றை எப்படிப் பறித்து இரண்டு லிங்கங்களுக்கும் ஆராதிப்பது? காலையில் செல்லுவார்; அருகில் உள்ள மலர்களைக் கொய்வார். திரும்பி வந்து மரங்களில் பூத்திருக்கும் மலர்களைத் தொடும் முன்னேயே, முன்பு பறித்த மலர்கள் வாடிவிடும். இதற்கு என்ன செய்வது? ஒரே வழி தான் உண்டு. புலியைப் போன்ற நகங்கள் வேண்டும்; கூர்மையான பார்வை வேண்டும். விரைந்து ஓடி நெடிதுயர்ந்த மரங்களில் பூத்திருக்கும் மலர்களைக் கொய்யச் சக்தி வேண்டும். 'இறைவனே! உன்னை ஆராதிக்க இந்த வரம் தந்தருள்வாயா?' வரம் அருளப்பட்டது. நமது இளைய சிவனடியார் புலிக்கால் கொண்டார்—வியாக்கிரப் பாதர் ஆனார். அவர் இருந்த, தங்கிய இடமே திருப்புலியூர் என்று பெயர் பெற்றது.

II. சில நாட்களுக்குப் பின்னர் புலி அடியாருடன் இன்னொரு அடியார் சேர்ந்து கொண்டார். இவர் ஒரு பாம்பின் உருவத்தைக் கொண்டவர். புலி அடியாரோடு அரவடியார். இந்த பாம்பு உருக்கொண்ட பக்தரின் சரிதைக்கும் சிவதாண்டவத்திற்கும் நெருங்கிய உறவு உண்டு. ஆயிரம் தலைகொண்ட ஆதிசேஷனின் திரு உருவமே இவர் என்று சொல்வர். ஆதிசேஷனைப் பற்றித் தெரியும் அல்லவா? பாற்கடலில் இந்த ஆதிசேஷன் மீது விஷ்ணு துயில் கொண்டிருப்பார். ஒரு கதை உண்டு. ஒருநாள் விஷ்ணு தன் உறக்கத்திலிருந்து எழுந்து சிவனாரை வழிபடுவதற்காகக் கைலாயம் சென்றதாக

மரபு. இந்தச் சந்திப்பின்போது, அருகிலுள்ள தேவதாரு வனத்தில் பல முனிவர்கள் தத்தம் மனைவியர்களோடு தங்கியிருப்பதாகச் சிவனார் விஷ்ணுவிடம் சொன்னார். இந்த முனிபுங்கவர்கள் சிவனுக்கே எதிராகப் போர்க் கொடி உயர்த்துகிறார்களாம். 'மீமாம்சை' என்ற தத்து வத்தைப் பின்பற்றும் அவர்கள், தமது படிப்புத் திறனால் செருக்குற்று, ''இந்த சிவன் யார்? அவரது ஆளுகைக்கு நாம் ஏன் கட்டுப்படவேண்டும்?'' என்று உரையாடிக் கொண்டிருப்பதாக ஒரு வதந்தி. (அக்காலத்தில் வேதாந்திகளுக்கும் சைவர்களுக்கும் இடையே நிலவிய கருத்துப் போராட்டத்தை இந்த மரபுச் சரிதை சித்தரித் திருக்கலாம் என்றும் கூறலாம்.) இந்த வனாந்திரத்துக்குச் சென்று அங்கே உள்ள முனிவர்கள் என்னதான் செய் கிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிப்பது என்பது சிவனாரின் இச்சை. தம்முடன் வரு மாறு அவர் விஷ்ணுவைப் பணித்தார். வருமாறு என்றால் எப்படி? பெண்ணுருவம் கொண்டு. ஒரு பிட்சு வேடத்தில் சிவனாரும் கப்பரையைக் கையில் கொண்டு அவரது மனைவியாக விஷ்ணுவும் தேவதாரு வனத்தை அடை கிறார்கள். இந்தக் கதையின் சார்பாகவே சிவனைக் 'கள்வர்' என்று வர்ணித்திருக்கக் கூடும் (குறிப்பு ஒன்றைக் காண்க).

இந்தக் கதையில் வரும் சம்பவங்கள் சற்றுக் கீழ்த்தர மானவையே. எனினும், ஒவ்வொன்றிற்கும் உமாபதியார் ஒரு தத்துவமுலாம் பூசுகிறார். இவர்கள் ஆசிரமத்துக்குள் நுழைந்தவுடனேயே ரிஷி பத்தினிகள்யெல்லாம் வேடதாரி பிட்சுவின் மேல் சொல்லொணா மையல் கொண்டனர்; காமம் கொண்டனர். அதே சமயத்தில், முனிவர்களுக்கு பெண் வேடத்தில் இருந்த விஷ்ணுவின் மேல் அடங்காக் காமம். இந்தக் காம மாயை விரைவில் அகன்றது. ரிஷி களுக்கும் அவர்களது மனைவியர்களுக்கும் தெரிந்து போயிற்று, வந்திருப்பவர்கள் வேஷதாரிகள் என்று.

இப்படியா நாம் ஏமாந்து போய்விட்டோம் என்று வெட்கினர். முனிவர்கள்—பத்தாயிரம் பேர் அவர்கள்—வேடம் பூண்டு வந்த கடவுளர்களைச் சபித்தனர். முனி பத்தினிகளும் அவ்வாறே செய்தனர். சாபம் ஒன்றும் பலிக்கவில்லை. சரி; நேரடிப் போராட்டம் துவக்க வேண்டியதுதான். ஒரு யாகக்குண்டத்தைத் தயாரித்தனர். மந்திரத்தை ஓதினர். இதன் விளைவாக யாகக் குண்டத்திலிருந்து ஒரு பெரும் புலி தோன்றிச் சிவன் மேல் பாய்ந்தது. சிவனார் அலட்டிக் கொள்ளவில்லை. ஒரு சிறு புன்முறுவலுடன் பாய்ந்து வந்த புலியைத் தம் கைகளால் தாங்கித் தனது சுண்டுவிரல் நகத்தால் அதன் தோலைக் கிழித்து, அப்புலித்தோலை ஏதோ ஒரு பட்டாடையைப் போல் தம்மீது அணிந்து கொண்டார். புலித்தோல் போர்த்தவன் என்று சிவனாரைக் குறிப்பிடுவது இதனால்தான் போலும்! (குறிப்பு ஒன்றைக் காண்க.) முதல் முயற்சி தோல்வி, முனிவர்களுக்கு. விட்டு விடலாமா? மீண்டும் முயலுவோம். தீவிர மந்திர உச்சாடனம்! யாகக் குண்டத்திலிருந்து இப்பொழுது எழுந்தது, சீறிக்கொண்டு படமெடுத்தாடும் பாம்பு ஒன்று. அதுவும் சிவனாரை ஒன்றும் செய்ய இயலவில்லை. மாறாக, சிவனார் அந்தப் பாம்பைப் பிடித்து தம் கழுத்தைச் சுற்றி அணிந்து கொண்டார். இதுவே, சிவதாண்டவத்தின் முதற்படி. கடைசியாக வந்தது ஒரு அரக்க உருவம். கறுத்த குட்டையனாகக் கண்களில் சின ஒளி தெறிக்க, ஒரு குறுந்தடியோடு பாய்ந்து வந்தது இவ்வுருவம். இதையே, முயலகன் என்று சொல்லுவார்கள். சிவனார் இவ்வுருவத்தின் மேல் தம் காலை ஊன்றி அதன் முதுகை ஒடித்தார். (சிவனாரின் பாதத்தின் கீழ் துடித்துக் கொண்டிருக்கும் முயலகனின் உருவத்தை எல்லாச் சிவாலயங்களிலும் உள்ள சிற்பங்களில் காணலாம்.)

கடைசிப் பகைவனையும் முறியடித்தாயிற்று. இதன் பின்னர் சிவனார் தம் தாண்டவத்தைத் தொடர்ந்தார்.

ரிஷிகள் மூட்டிய யாகக்குண்டத்தின் கனலே அவர்களை வாட்டியது. சினம் அடங்கிச் சிவதாண்டவத்தின் லயத்தில் மயங்கி இறந்தவர்போல் தரையில் வீழ்ந்து, பிறகு எழுந்து சிவனாரை வழிபட்டனர்.

கோயில் புராணத்தைப் பதுப்பித்த யாழ்ப்பாண அறிஞர் ஆறுமுக நாவலருக்கு விளக்கம் இது. அவரது கூற்றுப்படி நமது பத்தாயிரம் முனிவர்களும் பூர்வ மிமாம்சை என்ற கருத்தைத் தழுவினவர்கள். அவர்களுக்கு ஏழு கோட்பாடுகள். (தவறான கோட்பாடுகள் என்பது நாவலரின் கருத்து.)

—பிரபஞ்சம் அழிவற்றது.

—ஆன்மாக்களை எவரும் தோற்றுவிக்கவில்லை.

—சிவனாரும், மற்றக் கடவுளர்களும் சிரஞ்சீவிகள் அல்லர்.

—வேதமே பிரதானம்; நித்தியம்.

—வேத வாக்குகளே இறைவனைச் சார்ந்தவை.

—வேதமுறைகள் குறிப்பிடுபவை தவிர வேறு கடவுள்கள் இல்லை.

—வேதங்கள் சொல்லிய மதமுறை வழிபாடுகளைப் பின்பற்றினால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்.

இந்தப் பத்தாயிரம் ரிஷிகள் சிவன் தொண்டு செய்தவர்கள் அல்லர்; சிவன் அன்பு கொண்டவர்களும் அல்லர். தமக்குத் தெரிந்த, தாம் அறிந்த வேதாகமங்களையே தமது மனைவியர்களுக்கும் அவர்கள் போதித்தனர். அவர்களது மனப்போக்கின் குறைகளை அவர்களுக்கு தெரிவிப்பதற்காகத்தான் சிவனார் பிட்சாடனமூர்த்தி வடிவம் கொண்டு விஷ்ணுவையும் வேடதாரியாகப் பக்கத்தில் கொண்டு அவர்களைச் சென்று அணுகினார். இம்முயற்சி வெற்றி பெற்றது. இக்கதை எதை உணர்த்துகிறது? புலித்தோல் — வெண்புலியின் சீற்றத்

தையும் மனிதாபிமானமாக மாற்றக் கூடும். அதற்கே புலித்தோலை அணிந்தார் சிவனார்; அதேபோல நச்சுப் பாம்பையும் உலக உய்வுக்காக தம் கழுத்தில் போட்டுக் கொண்டார்; மக்கட்குலத்தை அழிவிக்கும் சார்பு கொண்ட அரக்கனைத் தம் காலால் மிதித்துக் கொன்றார். இவையெல்லாம் உருவகங்கள். கற்பனை. கிறிஸ்தவ மதப்போதனைகள் பரவியில்லாவிட்டால் இத்தகைய விளக்கங்கள் சொல்லப்பட்டிருக்கலாம், இல்லையோ? ஒன்று கூறவேண்டும். சிவனும், விஷ்ணுவும் தேவதாரு ஆசிரமத்துக்குச் சென்றபோது முனிவர்களும், முனிபத்தினிகளும் காமத்தால் இடர்ப்பட்டார்களே தவிர, சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் அத்தகைய காம இச்சை இல்லை. இதன்படி பார்த்தால் கடவுளரின் செயல் என்ற அவர்களது யாத்திரையைப் பற்றிக் குற்றம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

[சைவ சமயம் என்று கூறப்படுவது ஒரு அவியல் மாதிரி. பல்வேறு கோட்பாடுகளையும் ஈர்த்து ஒருங்கிணைத்தது அது. அதனால்தான் முரண்பாடுகள். பல கடவுளர்கள் ஒருபக்கம்; ஒருவனே — படைத்தல், காத்தல், அழித்தல் என்று முச்செயல்களுக்கும் பொறுப்பான ஒரே இறைவன் மறுபக்கம். சிவனாரைப் பற்றிய புராணக் கதைகளையே எடுத்துக் கொள்ளலாமே! ஒரு புறம் பார்த்தால் வெள்ளியங்கிரியில் தேவாதி தேவனாய் வீற்றிருக்கின்றார், அனைத்துலகிற்கும் தலைவனாய். மறுபுறம், இடுகாட்டினின்று இழிந்து, வெண்ணீறு பூசி, ஓரிடத்திலிருந்து மற்றிடம், மற்றிடத்திலிருந்து வேறோர் இடம் என்று ஊரூராய்த் திரியும் பிச்சைக்காரனாக. தக்ஷன் அவரை அவமானப்படுத்தினான். அதேபோலத் தான் அவரது சக்தி (உமை)யும். கருணையே வடிவான உலகுக்கே அன்னை அவள் ஒரு புறத்தில்; மற்றோரிடத்தில் அண்ட சராசரங்களை எல்லாம் நடுங்க வைக்கும் துர்க்கை. [இந்த ராக்ஷஸ தேவதை உபாஸனை ஆரியர்

களுக்கு முற்பட்டவர்களின் (pre-Aryan) பழக்கத்தின் தொடர்ச்சியே என்று சொல்ல ஏதுவுண்டு.] சிவன்—பார்வதி வழிபாட்டில் இந்த முரண்பாடுகள் காணக் கிடக்கின்றன. காணக் கிடைக்கும் குரு ஒருவர் தேவை என்பதைத் தமிழகத்துச் சைவர்கள், புத்த மதக் கோட்பாடுகளினின்று அறிந்து கொண்டார்கள். மனித உருக் கொண்ட கடவுளின் அவதாரமே ஆசானாகத் தக்கவர் என்ற கருத்து உருவாயிற்று. சிவனின் மறுஉருவே உண்மையான ஆசான், குரு. [நான்காம் குறிப்பைக் காண்க.] நிஜ பக்தர்களின் ஆன்மாக்களின் நித்தியத் தன்மையை வலியுறுத்துவது சைவ சித்தாந்தமே. முக்தி அடைந்த ஆன்மா கருணைக் கடலான, அறிவின் ஊற்றான இறைவனின் அருளுக்குப் பாத்திரமாயினும் இறைவனோடு அது இரண்டறக் கலப்பதில்லை. சைவர்களின் இந்த சித்தாந்தத்திற்கும், கிறிஸ்தவ சித்தாந்தத்திற்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு.

(3-வது குறிப்பைக் காண்க.)

சிவனை துதிக்கும் பாடல்களில் உள்ள முரண்பாடுகளை முன்பே குறிப்பிட்டேன். நகைத்தற்குரிய கற்பனைச் செய்திகள் அவற்றில் உள்ளன; அதே சமயத்தில் உன்னதமான தத்துவக் கொள்கைகளையும் அவை சித்தரிக்கின்றன. நம்புவதற்கரிய நிகழ்ச்சிகளுக்கும் வேதாந்தப் பூச்சைப் பூசி விட்டார்கள். சைவர்களுக்கும், புத்த சமணர்களுக்கும் இடையே இருந்த பூசல்களே இதற்குக் காரணம். சிவனார் என்ன சொன்னாரோ, என்ன செய்தாரோ, அதற்கெல்லாம் ஒரு வேதாந்தப் பொருளைக் கற்பித்தார்கள். இந்தக் கற்பனையில் உயர்ந்த தத்துவங்கள் அமைந்து நம்புவதற்கரிய நிகழ்ச்சிகளே மேலோங்கி நிற்கின்றன. சைவர்களுக்குள் இன்று பல்வேறு குழுக்கள் உள்ளன. அவர்கள் ஒருவரை ஒருவர் எக்காரணம் பற்றிச் சாடினாலும் ஒரு ஒற்றுமை அவர்

களுக்குள் — 'சிவனன்றி வேறில்லை'—என்ற துணிவே- நம்பிக்கையே அது.]

சிவனும் பார்வதியும்[1] வெண்ணிற விடைநீறேறி கைலாசத்தை நோக்கிச் செல்கின்றனர்.

ஆதிசேஷனும்,[2] விஷ்ணுவும் தனியாக விடப்பட்டனர். ஆதிசேஷனுக்கு தீராத ஆசை, சிவதாண்டவத்தை மற்றும் ஒருமுறை காணவேண்டுமென்று. விஷ்ணு சொல்லுவார்: ''நீ கைலாசத்துக்குப் போ. எனது பணி விடைக்கு உன் மகனை வைத்துக் கொள்கிறேன்.'' விஷ்ணுவின் பணியினின்று விடுபட்ட ஆதிசேஷன் தனது ஆயிரம் தலைகளுடன் — ஒவ்வொன்றிலும் ஒரு நாக மணி — வடதிசை நோக்கிச் செல்லுகிறார். ஆதவன் ஒளி யையே பழிக்கும் நாகரத்தின ஜுவாலை. இதையெல்லாம் புறக்கணித்து சிவனாரின் தாசானு தாசன் ஆவதே ஆதிசேஷனின் பிடிப்பு. இதற்கிடையே, சிவனார், பிரம்ம தேவனின் வேடம் பூண்டு அன்னப்பறவை மேல் ஆரோ கணித்து ஆதிசேஷனை அணுகுகிறார். வேடம் பூண்ட சிவனார் சொல்லுவார்:

''சொர்க்கவாசல் உனதே; சுவர்க்கத்து இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கும் தகுதி பெற்று விட்டாய் நீ. உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்.''

ஆதிசேஷன் பதில் :

''எனக்கு சொர்க்கமும் வேண்டாம். சித்தியும் வேண்டாம். எனக்கு வேண்டுவதெல்லாம் தேவாதி தேவனான சிவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண வேண்டும். இதே என் ஆசை; இதே என் விருப்பம்; இதே நான் கோரும் வரம்.''

---

1. மொ. பெ. கு: பார்வதி எப்படி இங்கு திடீரென்று வந்தாள்? புரியவில்லை.

2. ஆதிசேஷன் எங்கிருந்து இங்கு முளைத்தார்?

பிரம்மதேவன் வேடம் பூண்ட சிவனார் எத்தனையோ சொல்லிப் பார்க்கிறார். ஏளனமும் செய்கிறார். எனினும், ஆதிசேஷன் அயரவில்லை. ''என்னவானாலும் சரி; நான் இப்போது செத்தாலும் சரி; நான் வேறு உருவங்கள் எடுத்து, இறுதியில் நான் காண விழைவதைக் கண்டே தீருவேன்.''

இவரது உறுதியை அசைக்க முடியாது என்றறிந்த சிவனார், வேடத்தை விடுத்துத் தம் சுய உருவத்துடன், பார்வதி சமேதராய் காட்சி அளித்து ஆதிசேஷனை ஆசிர் வதிக்கின்றார்.

இதன்பிறகு தமது புதுச் சீடரான ஆதிசேஷனுக்குச் சிவனார் உபதேசிக்கிறார். இறைவன் ஆசான் ஆகிறார். (நான்காம் குறிப்பைக் காண்க.) பிரபஞ்சமெல்லாம் அனாதையான மாயையின் படைப்பே. இது புரிய வில்லையா? ஒரு எடுத்துக்காட்டு. ஒரு மண்பானையை எடுத்துக் கொள்வோம். அது எப்படி உருவாயிற்று? குயவன் அதை உருவாக்கினான் —குயவன் அதற்கு முதற் காரணம். மண்ணால் ஆகியதால், களிமண் அதற்கு உருவகாரணம்; குயவனின் சக்கரம் அதற்கு செயற் காரணம். அவ்வாறே இவ்வுலகிற்கு மாயை உருவ காரணம். சிவனின் சக்தி செயற்காரணம். சிவனாரே முதற் காரணம். சைவ சித்தாந்தத்தில் மாயை என்பது அருவம் அல்ல. மாயை என்று வேதாந்தப் பரம்பரையில் சொல்லும் சொல் இதற்கு முற்றிலும் மாறு பட்டது. இப்படிப் பார்த்தால், சிவனார்க்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று, உருவம். (Sa - Kala); மற்றொன்று அருவம் (Nishkala). இவ்விரு பகுதி களையும் தாண்டி, அவருக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அது அவரது ஒளி, ஞானம். இதனால்தான் அவரால் ஐந்தொழில்களையும் செய்ய முடிகின்றது — பிறப்பு, காத்தல், உய்வு, அழித்தல், முக்தி நிலை அருளுதல். இவையே அவரது தாண்டவத்தின் சூட்சுமம்.

இந்த நடனத்தின் மேன்மையை — உன்னதத்தை — வேதங்கள் சொல்லுகின்றன. ஆனால், எதற்காகச் சிவன் நடனமாடினார்? எப்போது நடனமாடினார்? அதன் குறிக்கோள் என்ன? என்பவற்றையெல்லாம் வேதங்கள் சொல்லவில்லை. தேவதாரு வனத்தில் சிவதாண்டவம் நிகழ்ந்தது உண்மையே. ஆனால், அந்த நடனம் முற்றுப் பெறவில்லை. மேடை ஆடிச் சரிந்தது. நாடக மேடை 'தப்பிடத்தில்' போடப்பட்டது போலும்! அதன் 'ஸ்தானம்' சரியில்லை. நடன மேடை உருவாக்கப்பட வேண்டியது தில்லையில். பிரபஞ்சத்தின் மையம் (Centre of the Universe) இது. அங்கேயே கோலாகலமாக இறுதிச் சிவதாண்டவம் நடைபெறும். அதை, ஆதிசேஷன் மீண்டும் கண்டு களிக்கலாம்.

ஒன்று சொல்லுவேன் என்றார் சிவனார் ஆதிசேஷனிடம்

''அப்பனே, நீ தில்லைக்குச் செல். ஆனால், உனது இந்த உருவத்தில் அல்ல. ஆயிரம் தலைகளையும் உன் ஆயிரம் பாம்புக் கண்களையும் கண்டால், மக்கள் பயந்து போவர். ஒன்று செய். மானிடர்களுக்குப் பிறந்தார் போல் பாவனை செய். சர்ப்ப உருவத்தை வேண்டுமானால், ஓரளவுக்கு வைத்துக் கொள். பிறகு, யாழிகள் உலகில் புகுந்து சென்று கொண்டே இருந்தாலும் அதில் ஒரு குகை; அதற்குத் தென்புறமாகச்சென்றால் தில்லையம் பதியின் தோப்புக்களைச் சென்று அடைவாய். அங்கே தான் பழைய இலிங்கம் இருக்கிறது. அதன் அருகே உள்ள அம்பலத்தில் தான் எனது நடனம் நடைபெறும். நான் சொன்ன குகையில் நமது தொண்டர், புலிக்கால் உடையோன், தவம் செய்து கொண்டிருக்கிறான். அவனுடன் நீ சேர்ந்து இரு. காலம் வரும்போது, உங்கள் இருவருக்குமே நீ காண விழையும் காட்சியைக் காட்டி அருளுவோம்.'' அதன்படியே இப்போது, சிவத் தொண்டனாகி விட்ட ஆதிசேஷன், பாதி மனித உருவம்

பாதி அரவ உருவம் கொண்டு 'பதஞ்சலி'[3] என்ற பெயருடன், வியாக்கிரபாதரைக் கண்டு ஒரு குடில் அமைத்துக் கொண்டு, அதில் ஒரு இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து அனுதினமும் சிவனாரை வழிபட லானார். காட்டில் இருந்த ஜீவன்களுக்கெல்லாம், முதலில் ஒரே அச்சம். ''என்ன இது? முதலில் புலிக் காலோடு ஒரு மனிதனைக் கண்டோம்; இப்போதோ பாதி பாம்பு பாதி மனிதனுமாகிய ஏதோ ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது'' என்று தமக்குள் சொல்லிக் கொண்டு பயந்து ஓடின. ஆனால் படிப்படியாக இந்தக் காட்சி அவைகளுக்குப் பழகிவிட்டது. அச்சமின்றி குடில்களை அவை சுற்றி வரலாயின.

கோயில் புராணத்தின் அடுத்த அத்தியாயம் பொன்னம்பலத்தில் சிவன் நடனத்தை எதிர்பார்த்து எடுக்கப்பட்ட பெரிய கோலாகலமான விழாவைச் சித்தரிக் கின்றது. இந்த விழா இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

குறிப்பு ஏழு

பக்தி நெறி

பக்தியைப் பற்றிச் சைவ கவிஞர்களின் பாக்களில், பக்தி, எளிமை, மற்றும் சொல்லொண்ணாத இறைவன் மேல் காதல் கொப்புளிக்கும்; கொந்தளிக்கும். இறைவன் மேல் கொண்ட பக்தியே நமது சக்தி என்று பைபிளில் (Bible) உள்ள கூற்றுக்குச் சான்றாக இப்பாக்கள் விளங்குகின்றன. இத்தகைய நானே உன் அடைக்கலம், என்னையே நீ காப்பாய் என்று ஸ்ருதி வேதங்களில் காணப்

3. இதன் பொருள் அவ்வளவு பொருத்தமாக இல்லை. 'பத' என்றால் விழுதல்; வீழ்ச்சி: அஞ்சலி என்றால் கை கூப்பித் தொழுவது. — ஜி. யு. போப்

படவில்லை. கிறித்துவ மத போதனை தமிழகத்தில் தான் தொடங்கிற்று. இதிலிருந்து வந்ததோ இந்த அணுகுமுறை? பக்திச் சித்தாந்தத்தினை சைதன்ய (கி. பி. 1434) வழிமுறை வகுத்ததாகச் சொல்லுவர். ஆனால் நமது மணிவாசகரது காலம் ஏறத்தாழ 600 ஆண்டுகள் சைதன்யருக்கு முந்தியது. எனவே, இந்தப் பக்திக் கோட்பாட்டினை அறிமுகப்படுத்தியவர் மாணிக்க வாசகரே என்று அறுதியிட்டுச் சொல்லலாம். (பக்தி நெறி சைவ சித்தாந்தத்தின் ஆதாரம்; அதன் அடிக்கோல்; சிவன்பால் கொண்ட அன்பு; அன்பில் விளையும் ஆராதனை. இவை ஒரு மதத்தைச் சார்ந்தவை அல்ல. எல்லா மதங்களையும், மதக் கோட்பாடுகளையும், மதச் சடங்குகளையும் அரவணைத்துச் செல்பவை இவை. எக்குலத்தோரும், எம்மதத்தோரும், சைவ உலகில், சைவச் சார்பில் கூடி இன்புற்றிருக்கலாம். அரண் ஏதும் இல்லை.)

குறிப்பு எட்டு

தில்லையில் பௌத்த குருமார்களோடு மணிவாசகரின் வாதம்

வாதவூரரது புராணத்தில் இதைப் பற்றிச் சொல்லி யிருக்கிறது. இன்னும் சிறிது விரிவாகப் பார்க்கலாம். சரிதை என்ன? திருப்பெருந்துறையிலிருந்து, தில்லையில் இலங்கை மன்னரது தலைமையில் வந்துள்ள பௌத்த மதாச்சாரியருடன் வாதிடுமாறு மாணிக்கவாசகருக்கு அழைப்பு. தில்லை மூவாயிரவரோடு ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு சிவன் கருணையைக் கோரி மணிவாசகர் வாதத்திற்குத் தயாரானார். அவர் முகம் திரையிடப் பட்டது. (தாம் வாதிடப் போகும் 'நீசர்களின்' முகங்களை காணக் கூடாது போலும்.) மணிவாசகர் உயர்ந்ததோர் இருக்கையில் வீற்றிருக்கின்றார். அவரைச்

சுற்றிலும் சைவ பக்தர்கள்; அபிமானிகள். சோழ மன்னர் மணிவாசகரது திருவடி பணிந்த பின்னர் தமது இருக்கையில் அமர்ந்தார். எதிர்ப்புறம் இலங்கை மன்னன். ஏதோ கடமைக்காகச் செய்வதுபோல், சொல்லப் போனால், வேண்டா வெறுப்பாகச் சோழ மன்னன் அவரை வரவேற்று தமது இருக்கைக்கு அருகில் அமரச் சொன்னார்.

புத்த குருமார்கள் மறுபுறம் அமர்ந்தனர். சோழ மன்னர் மணிவாசகரை விளித்துக் கூறினார்: ''பெருந் துறை வாழ் சீலரே! சைவ சமயத்தில் அதன் வேரோடிய சித்தாந்தத்தை இந்த அவையில் நிரூபிப்பது உம் பொறுப்பு. பெருந்தகையே! இதை நீர் செய்தால் அதற்குப் பின்னர் இந்த புத்தமதவாதிகளை என்ன செய்வது என்று நான் பார்த்துக் கொள்கிறேன்.'' இதைக் கேட்டவுடன், வெளியூர்க்காரர்களுக்கு வியப்பு; நம்மவர் களுக்கு மகிழ்ச்சி.

மணிவாசகர் வாதத்தைத் தொடங்கினார். சம்பிர தாயமான வாழ்த்துக்களோ, வரவேற்புகளோ இல்லை. நேராக விஷயத்திற்கு வந்தார். கடுமை தொனித்தது அவர் குரலில். ''மாய வார்த்தைகள் சொல்லும் புத்த பிட்சுவே, நீர் எங்கிருந்து வந்தீர்?''

வெளிநாட்டுக் குருவும் இந்தச் சொல்லம்புக்குச் சளைக்கவில்லை. ''சொல்லுகிறேன் ஐயா — புத்தரே கடவுள். அவரது வழிபாடே எம் கடன். இங்கு நாம் அமர்ந்திருக்கும் பொன்னம்பலத்தில், இந்தப் பொன்னம் பலத்தில், புத்தரின் சிலையை வைக்க விழைகின்றோம். இதுவே நம் குறிக்கோள். இதற்காகவே இங்கு வந்தோம்.''

புன்முறுவலுடன் மணிவாசகர் கேட்டார். புன்னகை நட்பு காட்டும், நட்பு கோரும் புன்னகை அல்ல அது. கனலினை உள்ளடக்கிப் பொசுக்கும் புன்னகை. மணிவாசகர் இப்புன்னகையோடு கேட்டார்:

‘‘உமது முன் பிறப்புக்களில் என்ன நோன்பு நோற்றீர்கள்? முயல் எப்படி யானை ஆகும்? இது போகட்டும்; உமது சக்தி வாய்ந்த கடவுளைப் பற்றி சொல்லும். அவரை எப்படி அடைவது?’’ பௌத்த குருவிற்கும் பெருஞ்சினம் பொங்கிற்று! ‘‘என்னய்யா நீர்? சூரியகிரணங்களை விழியிழந்தோர் காணக் கூடுமா? புத்தரது பெருமையைப் புகல வேண்டும் என்றால் ஓராயிரம் நாட்கள் வேண்டும். திருப்பீடகம் என்று உமது மொழியிலேயே நீர் கேள்விப்பட்ட தில்லையா? எத்தனையோ முறைகளில் எத்தனையோ உருவங்களில் புத்தர் பெருமான் அவதாரம் செய்தார். இலட்சாதி லட்சம் ஜனங்களுக்கு நான்குவித தீவினைகள் அவர்களைச் சென்று அணுகாதவாறு உறுதி கூறினார். நான்கு தீவினைகள் என்ன? கொலை, களவு, பொய்ம்மை, கள் குடித்தல்.[1] அரச மரத்தடியில் வீற்றிருப்பார் எமது புத்தர். அவர் உணர்த்தியது: பிறவி ஒரு துன்பம். அவர் பிறப்பிற்கு முன்பாகவே, அன்னையின் கருப்பையில் இத்துன்பம் உருவாகிறது. இத்துன்பத்திற்கு மூலகாரணம் ஐந்து கண்டங்கள். அவை உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, தெளிவு. இவை அனைத்தையும் தகர்த்து, நீத்துத் துன்பத்தை ஆற்றுவது மோட்சம். இதையே எமது புத்ததேவன் மக்களுக்கு அருளிச் செய்ய வேண்டினார்!

புத்தமதத்தைப் பற்றிய தத்துவங்கள், அம்மதத்தைச் சார்ந்தோர் கடவுளைப் பற்றியும், அகிலாண்டத்தைப் பற்றியும், முக்தியைப் பற்றியும் கூறிய கருத்துக்களைப் பலப்பல நூல்கள் விளக்கியுள்ளன. கீழ் நாட்டிலும் சரி, மேனாட்டிலும் சரி, இந்த ஆராய்ச்சிகளை ஆய்வது நமது

---

1. மொ. பெ. கு: புத்த மதத்தில் ஐவகைத் தீவினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மாற்றான் மனைவியை வேண்டல் அவைகளில் ஒன்று. இந்த குருமார்கள் அதை ஏன் சொல்லவில்லை? விளங்கவில்லை.

நோக்கம் அல்ல. தமிழகத்தோர் புத்தசமயக் கூற்றுக்களை எவ்வாறு நோக்கினார்கள், எவ்வாறு பொருள் செய்து கொண்டார்கள் என்பவையே நம் ஆராய்ச்சிக்குரிய பொருள். புத்தமதம் தமிழகத்தில் சில நூற்றாண்டுகள் தழைத்திருந்தது உண்மைதான். எனினும் அது எப்படிச் சுருங்கிக் கிட்டத்தட்ட மறைந்தே போயிற்று என்பதற்கு மணிவாசகர் புத்தர்களை தில்லை அம்பலத்தில் வாதத்தில் வென்றது, ஒரு மூலகாரணமாய் இருக்கலாம்.

இப்போது வாத மேடைக்குச் செல்லலாம். மணிவாசகர் முறுவலித்தார். சோழ மன்னனை நோக்கிச் சொல்லுவார்: ‘‘இந்த அன்னியனின் உளறல்களுக்கு நான் என்னதான் பதில் சொல்வது?’’ பிறகு அவர் தமது ‘எதிரியை’ கேட்டார். ‘‘ஞானம் இக்கணம் தோன்றும், மறுகணம் மறையும் அன்றோ; அப்படியானால் உமது வாதங்களை நீர் சொன்ன உடனேயே அவை மறைந்திருக்க வேண்டுமே? இந்தக் கூற்று எப்படி என்றால் சித்தாந்தமோ, எவ்வித கூற்றுக்களோ நிலைபடா அல்லவா? இது ஒருபுறம் இருக்க, புத்ததேவன் பல்வேறு அவதாரங்களை எடுத்தார் என்று நீங்களே சொல்லுகிறீர்கள். உமது தத்துவக் கூறு உண்மை ஆனால் இது எவ்வாறு சாத்தியம்? உயிர்க் கொலையைத் தடுத்தவர் புத்ததேவர் என்றீர்கள். அவர் பல்வேறு அவதாரங்களையும் பூவுலகில் எடுத்தார் என்றும் கூறினீர்கள். அப்படி என்றால் ஒரு புலியாகவோ, ஒரு நரியாகவோ அவர் அவதாரம் எடுத்திருக்கலாம் இல்லையா? அவ்வாறு எனில், அந்த அவதாரங்களில் அவர் புல்லையா தின்றார்? ஐந்து கண்டங்களைப் பற்றிக் கூறினீர்கள். அந்த ஐந்து கண்டங்களைக் கடந்தால் மோட்சம் கிட்டும் என்றும் சொன்னீர்கள். அப்படி எனில் மோட்ச கதி அடைந்த - எல்லாவற்றையும்-கடந்த உமது புத்தர் எப்படி உலகில் தோன்றி மக்களைக் காப்பாற்றுவார்? எனவே அரச மரத்தடியில் வீற்றிருக்கச் சொன்னதான உமது புத்தர் உருவமில்லாதவர். இவ்

வுலகை விட்டுச் சென்றவர். அப்படி என்றால் அழிவே உமது வீடு (விடுதலை). அழித்தலே, கொலையே, அந்த விடுதலைக்கான வழி. அவ்வளவுதானே?''

மற்றும், இருபத்தியொரு புத்தர்கள் (24 புத்தர்கள் என்றும் சொல்வர்) முன்னர் இருந்தனர் என்றும் சொல்கிறீர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் பிறக்கும்போதே அவர்களது தாய்மார்கள் இறந்து விட்டனர் என்றும் சொல்கிறீர்கள். இப்படித் தாயை அழித்துக் கொண்டு பிறந்தவர்கள் கடவுளர்களா? அவர்களை நரகத்தில் அல்லவா தள்ள வேண்டும்? (இந்தக் கூற்று அவ்வளவு தெளிவாக இல்லை.)

மணிவாசகர் மேலும் சொல்லுவார்: ''உங்கள் மதக் கொள்கைப்படி, உயிர் வாழும் பற்பல ஜீவன்களுக்கு இடையே உள்ள வேறுபாடு ஒன்றே; அதாவது, நான்கு பூதங்களே (காற்று, நீர், நெருப்பு, மண்) பலதரப்பட்ட சேர்க்கை. ஒன்று கேட்கின்றேன். இரவில் நீர் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது ஒரு பாம்பு உம்மீது ஏறி ஊர்ந்தால் அந்த வித்தியாசம் உமக்குப் புலப் படாதோ? உருவத்திற்கு அப்பால் ஆன்மா என்று ஒன்று உண்டு என்பதையே மறுக்கிறீர்கள். அவ்வாறு எனில், உருவம் மறைந்து, அழிந்து, ஒழிந்த பின்னர் உயிர் எப்படி பிற உருவங்களின் மூலம் திரும்பத் தோன்றுகின்றது? ஆன்மா ஒன்றுபட்ட பௌதிக உருவம் மறைந்து விட்டால் வேறு என்னதான் எஞ்சுகிறது. நான்கு பூதங்களைத் தான் நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஐந்தாவது:— வெளி (ether) இல்லையென்றால் ஒலிகள் எப்படிப் பரவும்? நீங்கள் இருப்பதாக ஏற்றுக் கொள்ளும் நான்கு பூதங்கள் மட்டுமே ஒன்றோடு ஒன்று கலந்து உயிர் வாழும் ஜீவன்களை உண்டாக்க முடியுமா? ஆன்மா இல்லை என்றால், வெளி இல்லை என்றால், நிர்வாண சித்தியை அடைந்து விட்ட உமது புத்தர் எங்கே இருக்கிறார்? அரச மர நிழலில் இன்னுமா இருக்கிறார்? எடுத்துக்

காட்டாக ஒன்று சொல்கிறேன். மரங்களுக்கு ஆன்மா இல்லை என்கிறீர்கள்; எனினும் செடி, கொடிகளும், மரங்களும் வளர்கின்றன. நீரை உட்கொண்டு இலைகள் தளிர் விடுகின்றன. பிறகு வாடி விடுகின்றன. இதற் கென்ன சொல்லுகிறீர்? இதற்கு அவ்வளவாகச் சம்பந்தம் இல்லை எனினும் வேறொரு விஷயம் சொல்லுகிறேன். எவ்வுயிரினையும் கொல்லுவது மகத்தான பாவம் என்கிறீர்கள்; என்றாலும், பிறர் கொன்ற விலங்கு களையும், பறவைகளையும், இறைச்சியையும் உண் கிறீர்கள். உங்கள் உணவுக்காக அவர்கள் உயிரை அழித்தால் அந்தக் குற்றம், அந்தப் பாவம் உம்மை எப்படிச் சாராமல் போகும்?'' இவ்விடத்தில் போப் அவர்கள் கூறுவார்: ''மணிவாசகரின் இந்தக் குற்றச் சாட்டு சரி என்றே தோன்றுகிறது. திருவள்ளுவரும் இதைப் பற்றிக் குறளில் கூறியுள்ளார்.[2] எனக்கும் புத்தர்களுக்கும் இது பற்றிப் பெரிய நீண்ட வாதம். புத்தர்கள், தாம் கொல்ல மாட்டார்கள்; ஆனால் பிறர் கொன்ற விலங்குகளின் பறவைகளின் இறைச்சியை உண்ணத் தயங்க மாட்டார்கள்; ஜைனர்களோ தாமும் கொல்லார்; பிறர் கொன்றதையும் உண்ணார். இப்போது மணிவாசகர்—புத்தகுருமார் சொற்போருக்குத் திரும்பிச் செல்லுவோம். மேலும் கூறுவேன். (மணிவாசகர் கூறுகிறார்):

---

2. தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.
(புலால் மறுத்தல்: குறள் 256)

புலால் தின்னும் பொருட்டு உலகத்தார் உயிர் களைக் கொல்லாது இருந்தால் விலையின் பொருட்டு ஊன் விற்பவர் எவரும் இல்லாமற் போவர்.

(டாக்டர் மு. வரதராசனார் உரை: முற்குறிப்பிட் டுள்ளது)

''எமது ஆகமங்களில் காரியம், காரணம் என்று இரண்டு உண்டு. காரியம் நசித்தாலும், காரணம் தொடர்ந்து நிற்கும். நீங்கள் சொல்வதோ இதற்கு எதிர்மறையாக இருக்கிறது. ஐந்து கண்டங்கள் நீங்கும்போது ஆன்மா விடுதலை பெறுகிறது என்கிறீர்கள். உருவத்திலேயே உங்கள் தத்துவப்படி ஆன்மா இருக்கிறது என்றால் உருவம் அழியும்போது ஆன்மாவும் அழிவுறத்தானே வேண்டும்? இதென்ன முரண்பாடு ஐயா?'' மூத்த புத்த குரு சினத்தால் முகம் சிவக்க கேட்பார்: ''சரி ஐயா! எங்களுக்கு கடவுளும் இல்லை முக்தியும் இல்லை என்கிறீர்கள். உமது கடவுள் யார்? நீங்கள் முக்தி அடைவது எப்படி?''

''ஆலமரத்தடியில் அமர்ந்து எமது கடவுள் உண்மையை விளக்கினார். அவரது ஆழ்ந்த பக்தி அண்ட சராசரங்களின் அழகைக் கண்டு, களித்து மெய் மறந்தோர் பலர். அவரது அழகு சாதனம் 'திருநீறே'. உமை—பார்வதி அம்மை அவர் உடலில் பாதி. அருளே வடிவானவர். கருணையே உருவானவர். அவரது புகழை யாரால்தான் பாடமுடியும்? பொன்னம்பலத்தில் உறையும் எம் சிவனார் சந்திரனையே (பிறை) அணிகலமாகக் கொண்டவர். அவரது புகழ்ச் சரிதைக்கு எல்லை ஏதும் உண்டா? இருக்க முடியுமா?''

''வளவளவென்ற இப்பேச்சினால் பயன் என்ன? கேட்கிறேன், சொல்லும். உமது கடவுள் ஆலமரத்தடியில் அமர்ந்து ருத்திராட்சத்தை உருட்டி ஜபம் செய்கிறார். யாரை வேண்டி இந்த ஜபம்? தன்னைவிடப் பெரிய-தன்னிலும் உயர்ந்த- வேறொரு கடவுளின் அருளைக் கோரியா இந்த ஜபம்? தில்லையில் அவர் நடனமாடுவதாகச் சொன்னீர்கள். யாருக்காக, எவரது மகிழ்ச்சிக்காக இந்த நடனம்? குழுமி தலையாட்டும் அன்பர்களுக்காகவா? அல்லது தனது சுய கௌரவத்திற்காகவா? 'வெண்ணீறு அணிந்தார்' என்கிறீர்கள். எதற்காக அப் பணி? கறுத்த தனது உடலில் வெண்ணீறு பளிச்சென்று

பிரகாசிக்கும் என்பதாலா? அவர் உடலில் பாதி பெண் என்றீர்: பாதிப் பெண்ணை, அரைப் பெண்ணை உலகத்தில் எவரும் கேட்டிருக்கிறார்களா? அப்படியே வைத்துக் கொண்டாலும் தம் மனைவியை தன் உடலோடு உடலாய் இணைத்திருக்கும் சிவனை வழிபடும் நீங்கள் மனைவியையும் துறந்து காட்டில் தவம் செய்வானேன்?''

அதைக் கேட்டு பௌத்த குருமார்கள் எள்ளி நகைத்துக் கும்மாளி போட்டனர். இதைப் பொருட் படுத்தாமல் மணிவாசகர் சொன்னார்: ''உயர்ந்த தத்து வங்களைப் பொறுமையுடன் கேட்டறியும் மனப்பக்குவம் உமக்கு இல்லை. பக்குவம் மட்டும் அன்று. மனச் சுத்தமும் வேண்டும். அந்த மனச் சுத்தத்திற்காக வேண் டியே எங்கள் சிவபெருமான் ருத்திராட்ச மாலையைக் கையில் கொண்டிருக்கிறார். அவர் எவரையும் வணங்கிப் போற்றிட வேண்டிய அவசியம் இல்லை. தமது அன்பர் கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறியை உணர்த்தவே அவர் இந்தப் பிரார்த்தனை மாலையை கையில் கொண் டிருக்கிறார். இந்த மாலை ஓர் ஆயுதம் போன்றது. தன்னிகர் இல்லாத அவர் இதைப் பயன்படுத்தத் தேவை இல்லை. அதர்மத்துடன் போர் செய்யத் தமது சீடர் களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவே இம்மாலையை தம் கையில் கொண்டுள்ளார். அவரது நடனம் பற்றி எள்ளி நகையாடினீர். உலகத்தோர் பார்ப்பதற்காக அவர் நடனம் புரியவில்லை. அந்த நடனம் பாவத் தூசு களுக்கு ஒரு தீ. வெண்ணீறு பற்றிக் கேட்டீர்கள். தமது பக்தகோடிகளின் துயரைத் துடைப்பதற்காக அவர் அணிந்த மருந்து அது— பச்சைக் குழந்தைகளின் நோய்களைத் தீர்ப்பதற்காக பாலூட்டும் தாய்மார்கள் தாமே மருந்து உண்ணுவதைப்போல. உமையை பாதி யாகக் கொண்டது ஏன் என்று கேட்டீர்கள். அது ஓர் உயர் தத்துவம். பௌதிக ரீதியில் இதைப் பார்க்கக் கூடாது. சிவபெருமான், தாம் கடவுள் ஆயினும், மலர்

களில் மணம் இணைந்திருப்பது போல மக்களிடையே இணைந்து உறவாடுகின்றார். இது உமக்குத் தெரிய நியாயம் இல்லை. கடைசியாகச் சொல்லுகிறேன், கேட்டுக் கொள்ளுங்கள். சிவபெருமானே ஆதி; அவர் யோகி; என்றாலும் இன்பங்களை நுகர்பவர் அவர். அவர்க்கு உருவம் இல்லை. அவரே கீர்த்தி. பல உருவங் களையும் கொண்டவர் அவர்; பேரின்பப் பெருங்கடல் அவர். தில்லையம்பலம் நற்குணச் சோலை. ஆனந்த மய மானது. துன்பத்திற்கு இங்கு இடமில்லை. இங்கு அவரது திருநடனத்தைக் கண்டவர் அவரது திருவடி களைப் பார்த்தாரே அன்றி அவரது முடி எங்கோ, எவ் வுயரத்திலோ இருப்பதைக் காண முடிந்ததா?'' இத் துடன் வாதம் முடிவுற்றது.

வாதத்தில் ஒன்றும் சுவை இல்லை. இரு சாராரும் ஏதேதோ பேசிக் கொண்டார்களே தவிர, தர்க்க ரீதியாக இந்த வாதத்தில் கூறுவண்ணம் ஏதும் இல்லை. தர்க்கத் தில் சுவை ஒன்றும் இல்லை. இறுதியில் நிகழ்ந்ததுதான் சரிதையின் முத்தாய்ப்பு. பௌத்த குருமார்கள் மணி வாசகரின் சினத்தால் ஊமையாயினர். அவரது கருணை யினால் ஈழமன்னரின் ஊமைப்பெண் நா வாய்க்கப் பெற்றாள்.

பாரதத்தில் வழக்கம் ஒன்று உண்டு. தர்க்கரீதியாகச் சான்றுடன் எடுத்துரைக்க முடியாதவற்றை வார்த்தைப் பந்தலில் மூடி மறைப்பர். அறிவுக்கு ஏற்கும் ஆக்க விடை களுக்குப் பதில் அடுக்கு மொழி சொற்பந்தல் தானோ எல்லாமும். பௌத்தர்கள் கூறும் ஐந்து கண்டங்கள் எவை எவை? உருவம், நுகர்ச்சி, பாவனை, செயல்முறை, உணர்வு. இவை தம்முள் கலந்து முறைப்பட்டு ஒரு உருவ மாகி — சாவு இத்தளையை அவிழ்க்கும் வரை சாவு என்பதும் ஒரு மாயை. கடவுள் இல்லை. ஆன்மா இல்லை. அநித்தியம் இல்லை. எல்லாமே நாம் கண்டு, கேட்டு, உற்று, உணரும் உருவம்தான். இத்தத்துவங்கள்

தமிழகத்து ஆகம ஆசிரியர்கள் விளக்கமாக எழுதியது. இங்கும் அங்குமாக, இங்கு ஒரு கருத்துக்கூட அங்கு ஒரு கருத்து கூட என்பது போல் விளக்கம் கூறினார்கள் என்று முழு தத்துவத்தையும் ஒருமித்து அவர்கள் கூறவில்லை, விளக்கவில்லை; மாணிக்கவாசகரும் இவ்விதமேதான் கூறினார். அவரது எதிரிகள் என்னதான் செய்வார்கள்? சைவத் தளைகளை, மரபுகளைக் கேலி செய்வதைத் தவிர. புத்தர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தர்க்க ரீதியாக மணிவாசகரால் பதில் அளிக்க முடியவில்லை. மாயா வாதம் கதைகளைத் தத்துவ ரீதியாகப் பார்க்கும் வாதம் இவற்றையே அவர் தம் வாதத்தில் கையாண்டார். இந்தக் கூற்றுகளில் கவிதை அழகும், சிறப்பும் இருக்கக் கூடும். எனினும் சரித்திரப் பூர்வமான ஆதாரங்கள் எங்கே?

இருசாராரும் தத்தமக்கு ஏற்ற ஆசானை முன் கொண்டு நிறுத்தினர். புத்தர்களுக்கு போதி மரத்தடியில் அமர்ந்திருக்கும் புத்தர். சைவர்களுக்கு ஆலமரத்தி னடியில் வீற்றிருக்கும் சிவனார். பலி கொடுப்பதைத் தவிர்த்தல் தவிர புத்த மதக் கொள்கைகள் உபநிஷத்து களின் கோட்பாடுகளுடன் ஒன்றியவைதான் என்ற தமிழர் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதே. கடைசியில் என் கருத்து: மணிவாசகர் புத்தர்களை வாதத்தில் வென்றார் என்றால், அந்த வெற்றி, உணர்ச்சி மேலீட் டாலும் ஒரு அதிகாரத் தன்மையாலும் கிடைத்ததே அன்றித் தர்க்க ரீதியாக அல்ல.

குறிப்பு ஒன்பது

திருவாசகம்

கவிதைச் சுவை என்று பார்த்தால், பிற தேவாரப் பாடல்களை விட திருவாசகம் மிக உயர்ந்தது என்பது உண்மை. சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களது பாடல்கள் இனியவையே. எல்லோரும் போற்றிப் புகழ்வது

இவர்களது பாடல்களையே. எனினும் ஊன்றிப் பார்த்தால் கவிதையின் சுழல்கள், பிரவாகங்கள் இவற்றிற்குத் திருவாசகத்தை மிஞ்சியது ஒன்றும் இல்லை. ஊன்றிப் படித்து சுவைத்தால் தெரியும். எளிய உரை நடையில் மணிவாசகரின் 'கவிதைகளை மொழி பெயர்ப்பது' இயலாது. தமிழ் உரைநடையிலேயே திருவாசகத்தைச் சொல்லுவது அரிதென்றால் வேற்று மொழியில் மொழி பெயர்ப்பது எத்தனை கடினம் என்பதை நான் சொல்லத் தேவை இல்லை. உணர்ச்சிகளை மீட்டுவது — நான் ஒரு கிறிஸ்தவன் என்பதால் சொல்லுகிறேன் — மணிவாசகரின் கவிதைகளைப் பைபிளில் உள்ள Psalms என்ற கவிதைகளுக்கு ஒப்பிடலாம். கடின நடையில் என்ன பொருள் என்று ஊன்றிச் சிந்திக்கத் தேவை இல்லை; இதயங்களை மீட்டுபவை அக்கவிதைகள் — தனிப்பட்ட ஒரு இறைவனின் வழிபாட்டை அவை குறிக்கலாம், எனினும், இறை வழிபாட்டையும் சிலை வழிபாட்டையும் கடந்த ஒரு மேலுயர்ந்த, மேல் மேல் உயர்ந்த ஆன்மீக உணர்வுகளையும், சிந்தனைகளையும் அக் கவிதைகளில் காணலாம். சைவமத வழிபாட்டில் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான முறைபாடுகளைக் காணலாம். தத்துவ ஞானத்தைத் தெரிந்து உணர்ந்த சைவர்களே, மாக்கள் பின்பற்றும் அர்த்தமற்ற வழிபாடுகளைத் தழுவி இருந்தனர். பொதுவாகச் சொன்னால், சைவர்கள் இருவகையினர். சைவர்களின் சிலை வழிபாடு குறிப்பிடுவதற்குரியது. சிவனாரின் பிள்ளைகள் விநாயகர், சுப்ரமணியர் ஒரு புறம். இவை தவிர சிவனாரின் உருவகம் லிங்கம். இவை தவிர சிவனும் உமையும் ஒன்றாக இருக்கும் அர்த்த நாரிஸ்வரர் உருவம்.

ஆலயங்களில் நிறுவப்பட்டுள்ள சிலைகள் இறைவனை உணர்ந்த செயல்களின் கற்பனையே ஆகும் என்று சிலர் சொல்லுவார்கள். சிலைகள் இறைவனின் செயல்களை

உணர்த்துவது சைகையில் மட்டுமா? அவை வெறும், கார்ட்டூன்கள் (Cartoon) மட்டுமா? இல்லை என்பது என் முடிவு.

பல்வேறு சிலைகள் இருக்கலாம். ஒவ்வொன்றும் தனித்தனியே கடவுளின் உரு. ஆலயங்களில் வழிபடுபவர் செய்வது தெரியும் இல்லையா? உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து இறைவனுக்கு நிவேதனம் செய்கிறார்கள். இறைவன் அவற்றை உண்டு களிப்பவர் என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை. கடவுள் அவர்களுக்கு நண்பர் போல; விருந்தாளி போல; சிலையே கடவுள். கடவுள் நமது நண்பர். நானும் அவரும் ஒன்றாக இருந்து ஒரே உணவை உண்டு களிக்கின்றோம். பக்தர்களின் நம்பிக்கை — நம்பிக்கை மட்டுமல்ல — உணர்வும் இது. இதே உணர்வைத்தான் மாணிக்கவாசகரும் கொண்டிருக்கிறார்.

குறிப்பு பத்து

வெள்ளியங்கிரியில் சிவனார்

''சிவபெருமான் தனது இருக்கையில் அமர்ந்தார். (சிம்மாசனம் என்று சொல்லுவார்கள்.) அவரது இடப்புறம் உலகத்தின் சக்தியெல்லாம் தன்னுள் அடைத்திருக்கும் லோகநாயகி பார்வதி. சிவபெருமானிடம் எந்தப் பாசமும் சென்று அணுகாது. அநித்தியம் அவர். உலகத்தினர் அனைவருக்கும் அருள் செய்து ஞானத்தையெல்லாம் போதிப்பவர் அவர். மக்களிடம் அவருக்கு எண்ணற்ற பாசம். பாசம் அவரைச் சென்று அணுகாது. என்றாலும் மக்களிடையே அவருக்கு உள்ள பாசம் அளப்பதற்கு அரியது. படைப்பு, காத்தல், அழிப்பு இவை அவர்க்குரியது. நெறிப்படி ஆற்றுபவர் அவர். அவரே கடவுள். அவரே எல்லாம். மூன்று கண்கள் அவர்க்கு உண்டு என்று சொல்லுவார்கள். அவை யாவை? சூரியனும், சந்திரனும், அக்கினிதேவனும் தானோ?

கங்கையைத் தாங்கிய சடைமுடி, பிறைமதியை அடக்கிக் கொண்ட சடைமுடி; இத்துடன் கொன்றை மலர் எதற்குத்தான் அணிந்தாரோ? செவியிலே மலர்த் தோடு. நெஞ்சிலே, கறுப்பு உடலிலே நீறு. உடலில் போர்த்தி இருப்பது புலித்தோல். இவை யெல்லாம் எதற்கு ஐயா? எதைச் சொல்ல வேண்டும் என்று, எதை உலகத்தார்க்கு உணர்த்த வேண்டும் என்று, இந்த வேடம் போடுகிறீர்? உம்மை அண்டி வந்தவர்கள்—எத்தனையோ மகிழ்ச்சியுடன், உற்சாகத்துடன் பக்தியுடன் வந்தவர்கள்—என்ன தான் கண்டார்கள் உம்மிடம்? சென்னிமேல் கை கோர்த்து, கண்ணீர் உகுத்து, நாடி நரம்பெல்லாம் பக்தியினால் மீட்டிச் சிவனார் பெயர் பாடுவீர்கள் நீங்கள். பிரம்மாவும், விஷ்ணுவும், இந்திரனும் உங்கள் பிரார்த்தனையைப் பார்த்து நிற்கிறார்கள். நந்தி என்னவோ காவல் காத்துக் கொண்டு நிற்கிறார்.'' மேற்கூறியவற்றை பெரிய புராணத்தின் முகவுரையில் இருந்து நான் மொழி பெயர்த்திருக்கிறேன். சிவனடியார்கள் சிவனார் மேல் கொண்ட அன்பிற்கும், பக்திக்கும் இதைவிட மேலான எடுத்துக்காட்டு தேவையில்லை. என்னே அன்பு! என்னே பக்தி! என்னே பற்று! மணிவாசகர் இவை எல்லாவற்றையும் அகலத் தாண்டி விட்டார். (மீறி விட்டார் என்றும் சொல்லலாமோ?)

குறிப்பு பதினொன்று

தமிழகத்தில்
சைவ சித்தாந்த மதக்கோட்பாடு; தத்துவநெறி

சைவ சித்தாந்தம் பாரத நாட்டிலே வேரூன்றிப் போனதொன்று. வைஷ்ணவ ஆகமங்களும் தமிழ் நாட்டில் பரப்பப்பட்டவை. எனினும் இவை சைவ சித்தாந்தத்தைப் போல வேர் ஊன்றவில்லை. சைவமே, தமிழர் இதயத்தைக் கவர்ந்தது. சைவம் என்றால் என்ன?

ஆகமங்கள், மதச் சிந்தனைகள் ஒரு புறம். அவற்றைத் தொடர்ந்து வழிபடுதல் வேண்டும். தியானம், வழிபாட்டு முறைகள், பலியிடுதல், சகுனம் பார்த்தல் இவ்வாறு ஆகமமும், சித்தாந்தமும் இறங்கி வரலாயின. வேதங்களில் சிவன் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. ருத்ரர் என்றது முறையாக வேதங்களில் குறிப்பிட்ட பெயர். ருத்ரர் — கோபமே உருவாகி நின்றவர். வெள்ளங்களை, சூறாவளிக் காற்றுகளை உண்டாக்குபவர். அவர் தானா சிவன்? அழிப்பவர் எப்படிக் கடவுள் ஆவார்? உலகினைக் காப்பது அன்றோ அவர் கடமை? ஆக்குதலையும், அழிப்பதையும் ஒருவர் எப்படிச் செய்வார்? இதனை விளக்குகின்றது சிவாகம தத்துவம். வைணவத்திற்கும், சைவத்திற்கும் உட்கருத்தில் வேறுபாடு இல்லைதான். எனினும், அவற்றின் போதகர்கள் ஒருவருக்கு ஒருவர் சாடிக் கொண்டனர். என்றாலும் அக்காலத்தில் சைவமே தழைத்தது. இதற்கு மூலகாரணம் மாணிக்கவாசகர் என்று சொல்வது மிகையாகாது. தேவார மூர்த்திகள் அப்பர், சுந்தரர், சம்பந்தர்—இவர்கள் பிரபலமானவர்கள். ஆயினும், சைவ சித்தாந்தத்தை தமிழ்நாட்டில் நிலைநாட்டியவர் மாணிக்கவாசகரே என்று நான் அறுதியிட்டுச் சொல்லுவேன்.

குறிப்பு பனிரெண்டு

பதி-பசு-பாசம்

உமாபதியார் சொல்லுவார்: ‘‘மறைகள் அனைத்தையும் முறையே மூன்று வார்த்தைகளால் சொல்லலாம்— பதி, பசு, பாசம். சைவசித்தாந்தத்தின் கோட்பாடு இவையே. இம்மூன்று சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன?

பதி: — சிவனாரே பதி. பசு: சிவனாரின் அருள் பெற்ற மக்கள். பாசம்: — பசுவினருக்கு இடையே

உள்ள பந்தம். ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டாலும், பதி, பசு, பாசம் எனப்படும் மூன்றே காலத்தைக் கடந்து நம்முள் இருக்கின்றன. காலம் மாறுவன. யுகங்களும் மாறுவன. எனினும் பதியும், பசுவும், பாசமும் உலகெல்லாம் நிறைந்து நிற்பன.

பதியினைப் பற்றி உமாபதியார் என்ன சொல்லு கிறார்? பதிமூன்று கோட்பாடுகள்.

1. பதியே மூலவன்.
2. அவர் தோன்றுவார், தோன்றாமல் அசரீரியாக இருப்பார்.
3. அவரை உருவம் காண முடியாது.
4. அவர் அமோல்யர்.
5. அவர் ஒருவரே.
6. அவர் அநித்தியம்
7. சொல்லொணா மக்களுக்கு அறிவூட்டுபவர் அவர்.
8. அவர் எதற்கும் வளைய மாட்டார்.
9. அவர் உருவமற்றவர்.
10. ஆனந்தம், பரமானந்தம் அவரது இயல்பு.
11. நம்பினோர்க்கு நல்லவர்.
    நம்பாதவர் அவரை அடையார்.
12. அணுவாகவும் இருப்பார். பிரபஞ்சத்தையெல் லாம் ஆட்டிய பேருருவமாகவும் இருப்பார்—அவரே சிவன். அவரே முக்தி. இப்படிப்

பார்த்தால் சிவனை நிஷ்களங்கன் என்று சொல்லலாம். எனினும், எத்தனைத் தனிப்பட்டவர் ஆயினும் தமது மக்களோடு உறைந்து உரையாடுபவர் அவர். என்னதான் சொன்னாலும், பதிக்குப் பசுவினிடம் பாசம் நிலையாது நிற்கும்.

குறிப்பு பதின்மூன்று

பராசக்தி

ஒப்புயர்வற்ற பதி ஆன்மாவை விடுவிக்கின்றது. அதே சமயத்தில் பாசத்திலிருந்து பிரபஞ்சம் உருவாகிறது. இவற்றிற்கிடையே பதியிடத்திலிருந்து சக்தி பிறக்கின்றது. ஆத்மாவிற்கு விடுதலை. பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு இந்த சக்தியே ஆதாரம். இதைச் சற்று உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். இப்படிச் சொல்லலாம்: சிவனிடத்தில் உட்பட்ட சொல்லொண்ணாத சக்தி மூன்று விதங்களாக வெளிப்படுகின்றது — ஆசையையும் விருப்பத்தையும் தோற்றுவிக்கும் சக்தி; ஞானத்தை உருவாக்கும் சக்தி; செயலுக்கு ஆதாரமான சக்தி. இம்மூன்றுமே சிவனாரின் உடலில் அடக்கம். நிர்மலமான அவர் விளக்கவொண்ணாத, அறிய முடியாத கருணையுடன் தூய மாயையை உருவாக்கி நிற்கின்றார். அப்படிப்பட்டவர் என்ன திருவிளையாடல் நிகழ்த்துகிறார்? தூய்மை அற்ற மாயையை அணுகி அண்ட சராசரம் என்று சொல்லும் உலகங்கள் எல்லாம் அவற்றில் வாழும் கோடானு கோடி ஜீவன்களையும் உருவாக்குகின்றார். மூலாதாரத்தின் வளர்ச்சிபெற்ற — வளர்ச்சியற்ற — பல்வேறு அங்கங்களின் விசித்திர விளையாட்டுகள் இவை. முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது என்னவென்றால், அனைத்திற்கும் மேல் உயர்ந்த பதி தனது சக்தி மூலமாகவே உலகில் ஆட்சி புரிவார். சிவன் ஆதவன் என்றால் சக்தி ஆதவனின்

கிரணங்கள் என்று சொல்வார்கள். சக்தி என்ற சொல் வடமொழியிலே பெண்பாலைக் குறிக்கும். ஆக, சிவன் செயல்படுவது ஒரு பெண்மணியின் மூலமே. சக்தி என்ற ஒரு சொல்லைக் கருவாகக் கொண்டு எத்தனை புராணங்கள்! எத்தனை கதைகள்! எத்தனை வழிபாடுகள்! பதி நிர்மலமானவன், மாசற்றவன் என்று சொல்வோம்; அப்படிப்பட்டவர் மனத்தில் குற்றமும், ஆசாபாசங்களும் நிறைந்த மனிதருடன் உறவாடுவது எப்படி? இந்த உரையாடலைக் கருதி சக்தி சென்ற விடமெல்லாம் இருள் நீங்கி ஒளி தோன்றுகிறது; மனக்குறைகள் நீங்கித் தூய்மை பிறக்கின்றது. சக்தி வெளிப்பாட்டின் ஆதாரமே இதுதான். சைவ சித்தாந்தத்தில் நித்தியத்திற்கும் அநித்தியத்திற்கும் இடையே உள்ள பாலம்.

குறிப்பு பதினான்கு

நாத்திகத்துக்கு எதிர்வாதம்

நாத்திகவாதிகளான லோகாயதர்களின் கொள்கைகளைச் சைவசித்தாந்திகள் தீவிரமாக எதிர்த்தனர். லோகாயதர்கள் என்பவர்கள் நாத்திக வாதிகள். சைவ சித்தாந்த குருமார்கள் நாத்திகத்தை வேர் அறுக்க முற்பட்டவர்கள். நாத்திகவாதத்திற்கு எவ்வாறு சைவ குருமார்கள் மறுதளிக்கின்றார்கள்? அவர்கள் கூறுவது இது:

> ''உலகெல்லாம் உள்ளவர்கள், ஆணோ, பெண்ணோ, அஃறிணையோ பிறக்கிறார்கள்; சில காலம் வாழ்கிறார்கள். பிறகு மறைந்தொழிவார்கள். இதுவே நமது அனுபவம். இவற்றைப் பார்க்குமிடத்து, மறைந்து நிற்கும் யாரோ ஒருவர், சிவன்

என்று சொல்லுங்கள், பதி என்று சொல்லுங்கள், இறைவன் என்று சொல்லுங்கள். — யாரோ ஒருவர் அனைத்து உயிர்களையும் பிறப்பித்து, காப்பாற்றி, அவர்கள் காலம் வந்த பொழுது மறைப்பிக்கும் சக்தி உடையவர் என்பதை நம்புவது அவசியம் தானா?' இவையெல்லாம் உலகு பிறந்து, இருந்து, மறைந்து ஒழிந்தபின் ஒரு புது உலகம் பிறக்கின்றது. பிறப்பது ஏன்? புனிதமற்ற ஒரு தலை இப்பிறப்பிறப்புகளுக் கிடையே ஊடேறி உள்ளது. பிறந்து, இருந்து, மறைந்து மற்றும் பிறந்து, இருந்து மறையும் இந்த ஆன்மாக்களைக் கட்டுப்படுத்திக் காட்டும் 'ஒரு சக்தி' தேவை. இதையே இறைவனார் (பதி) செய்கின் றார். தளை அறுபட்டது. அத்தளையில் கட்டப் பெற்றிருக்கும் ஆன்மாக்களுக்கு 'தாம் என்ன செய்வது? எங்கு போவது? தன் கடமை என்ன?' என்பவை தெரியா. அதனால் தளையினின்று விடு பட்ட அமோல்யமான ஒரு இறைவன் இவர்களைக் கட்டிக் காத்து வழிகாட்ட வேண்டும் என்ற அவசியம் இருக்கின்றது. உலகம் இன்றிருக்கும், நாளை மாறும். மறுபிறவி, இவற்றையெல்லாம் கண்காணித்து ஆட் கொள்ள ஒரு இரட்சகர் வேண்டும். அதனால் சொல் கிறோம், இறைவன் இருக்கிறார், முதலிலும் — இடையிலும் — கடையிலும்.''

குறிப்பு பதினைந்து

ஆணவம், அல்லது அறியாமைத் தளை

'ஆணவம்' என்ற சொல் 'அணு' என்ற மூலச் சொல் லினின்று பிறந்தது. அணு என்றால் மிக மிகச் சிறிய பொருள். தத்துவ ரீதியில் இச்சொல்லைப் பயன் படுத்தியவர்கள் தமிழ்ச் சைவர்கள்.

உமாபதியாரது திருவருட்பயனின் மூன்றாம் அதிகாரத்தில், இந்தத் தத்துவம் விரிவாக விளக்கப்பட்

டுள்ளது. சில விதங்களில் கிறித்துவர்கள் கூறும் 'origina sin' என்ற தத்துவத்துக்கு இதை ஒப்பாகக் கூறலாம். பனிரெண்டாம் நூற்றாண்டில் இறுதியாக உருவாகிய இத் தத்துவக் கருத்தினை விரிவாகத் தெளிவாக, முறைப்படி ஆராய்கின்றன, திருவருட்பயன் மூன்றாம் அதிகாரத்தில் உள்ள பத்து செய்யுட்களும்.

பார்க்கலாமா, அவை என்ன சொல்லுகின்றன என்று![1]

இருள்மல நிலை

இறைவனைப் பற்றியும் அவரது தொண்டர்களைப் பற்றியும் விரித்துக் கூறிய உமாபதியார், இங்கு தளையைப் பற்றி விளக்குகிறார். தளை மூவகைப்படும் — அறியாமை, தீவினைகள், மாயை. இவற்றில் முதற் பட்டது ஆணவம் என்ற அறியாமை, அஞ்ஞானம். இந்த அதிகாரத்தின் கருப்பொருள் இதுவே.

1. ஆன்மாவை ஆட்டிப் படைக்கும் துன்பம் எது?

ஆணவ மலம்தான். நெருங்கி வரும் பிறப்பு — இறப்புத் துக்கத்தையும், அவை நீங்கினால் பெறும் பரமானந்தத்தையும், உயிர்த் துணையான இறைவனையும் ஆன்மாக்கள் அறியவிடாமல் திரை போடும் அறியாமை.

துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்றென்ப(து) எவ்வாறும் இல் (III : 21)

---

1. மொ. பெ. கு : இரண்டாவது குறிப்பின் மொழி பெயர்ப்பைப் போலவே, இங்கும், வாசகர்களின் நுண்ணிய ரசனைக்காகத் திருவருட்பயனின் மூலச் செய்யுட்களையும் சேர்த்துள்ளேன். போப் அவர்களின் உரையில் மூலச் செய்யுட்கள் குறிப்பிடப்படவில்லை.

(துன்றும் - நெருங்கும்; பவம் - பிறப்பு; துணைப் பொருள்-சிவபெருமான்.)

விளக்கம்: பிறவித் துன்பம், அதனின்று வீடு பெற்றால் பொங்கி எழும் இன்பம், அதற்கு உதவக்கூடிய இறைவனின் துணைக்கரம் — இவற்றை ஆன்மாக்கள் அறியவொண்ணாது அறியாமை (ஆணவ மலம்) திரை போடுகின்றது.

சுருக்கம்: இதிலும், இதை அடுத்த 'குறளி'லும், ஆணவத்தின் நிலைப்பும் அதன் சக்தியும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. [ஆணவத்தை 'இருள்' என்றும் சொல்லலாம். (அ+வித்யா—அறிவின் எதிர்மறை) இருளுக்கு அருமருந்து அருள். (திருவருட்பயன் நான்காம் அதிகாரம் காண்க.)][2]

2. இந்த ஆணவத்தை எதற்கு ஒப்பிடலாம்?

பூத இருளுக்கு. அது எப்படி கண்ணால் காணக்கூடிய அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளுகிறதோ, அதேபோல, ஆணவம் ஆன்மாக்கள் அனைவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும்.

இருளான தன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள் (III : 22)

விளக்கம்: இருள் புறப் பொருள்களைக் கண்ணிற்குக் காணாமல் மறைக்கிறது. அதேபோல, அஞ்ஞான இருள் இறைவன் அருளால் வீடு பெறும் வழியை ஆன்மா காணக் கூடாமல் மறைக்கிறது.

சுருக்கம்: ஆணவத்தின் வலிமை விளக்கப்பட்டுள்ளது.

---

2. மொ.பெ.கு: அதன் தலைப்பு 'அருளது நிலை.'

3. பூத இருளுக்கும், ஆணவ மலத்துக்கும் ஒப்புமை இது தானா?

ஒரு பொருளையும் கண்ணுக்குக் காட்டாமல் மறைக்கும் பூத இருள். ஆனால் தன்னை மறைத்துக்கொள்ளாது. ஆணவமோ, தன்னையும் காட்டாது; தான் மறைத்த ஆன்மாவையும் காட்டாது.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவங் காட்டும்
இரு பொருளும் காட்டா(து) இது (III : 23)

விளக்கம் : இருள் உலகனைத்தையும் மறைத்தாலும், இருள் இருப்பதை — அதனை — நாம் காணமுடியும். ஆணவமோ, தான் மறைப்பது போதாமல், தான் ஆன்மாவில் உறைவதையே—தன்னையே—மறைத்துக் கொண்டு விடும்.

சுருக்கம் : மனத் திரை புறத்திரையை விடக் கொடியது.

4. இந்த ஆணவ மலம் இறைவனையே பிணிக்குமோ?

அநாதி காலமாய் உள்ளொளியோடு ஆன்மாவைப் பொருந்த வொட்டாமல் இன்றளவும் ஆன்மாவை மறைத்து நிற்கிறது அது.

அன்றளவி உள்ளொளியோ(டு) ஆவி இடையடங்கி
இன்றளவும் நின்ற(து) இருள் (III : 24)

(உள்ளொளியோடு — உள்ளொளியாக இருக்கிற சிவஞானத்தோடு; இடை அடங்கி — ஆன்மாவில் பொருந்தி)

விளக்கம் : உள்ளொளி ஆன்மாவில் பொருந்தி இருந்தாலும், அத்துடன் கூடவே இருளும் அமர்ந்து கொண்டு உள்ளொளியை ஆன்மா கண்டுணராமல் மறைக்கின்றது.

சுருக்கம் : அநாதிகாலமாய், இன்றளவும், ஆன்மாவைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டது அஞ்ஞான இருள். நகருவதாக இல்லை. தீவினைகள் அகலலாம்; மாயைத் திரை விலகலாம். ஆணவம் ஆன்மாவை விடுவதாக இல்லை.

5. இந்த ஆணவத்தை — தன்னைச் சூழ்ந்து பற்றி யிருக்கும் ஆணவத்தை — ஆன்மா தெரிந்து கொள்ளவே முடியாதா?

பலரையும் (பல ஆன்மாக்களையும்) புணர்ந்திருக்கும் மாது இந்த ஆணவம். ஒருவரைப் புணர்ந்திருப்பது மற்ற வர்க்குத் தெரியாது. அப்படித் தன் 'கற்பை'க் காத்துக் கொள்ளுகிறாள்.

பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்குண் டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு (III : 25)

விளக்கம் : தேவையா?

சுருக்கம் : ஆணவத்தின் சக்தியை இதன் மூலம் ஆசிரியர் உருவகமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

[ஆணவம் ஒன்றே. அது கலந்திருக்கும் ஆன்மாக் களோ கோடி கோடி. திருவாசகத்தில் சில வரிகளை ஒப்பு நோக்கலாம்.

" Soon as I thought of that Being, free from hate, unique,
Delusive powers in ever-changing millions swarmed,
And straight began their ever-varying, delusive play"[3]

---

3. மொ. பெ. கு: போப் அவர்கள் குறிப்பிடுவது திருவாசகத்தின் போற்றித் திரு அகவலில் 43—45 வரிகள்.

" முனிவிலாததோர் பொருளது கருதலும்,
மாறு கோடி மாயா சத்திகள்,
வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின"

13

மணிவாசகர் காலத்தில் ஆணவ மலம் பற்றிய தத்துவக் கொள்கை முழுமையாக வடிவுறவில்லை.]

6. இந்த மலத்தை அறிவது எப்படி?

பலவாகச் சொல்லுவானேன்? தன்னைத் தன் தலைவனை அறியும் முறைமையை அறியாதபடி மறைத்து நிற்கின்றது ஒன்று எனத் தெரிந்து கொள்ள முடியாதா?

பன்மொழிகள் என்? உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது (III : 26)

(இருளார் தந்தது — ஆணவ மலம் கொடுத்தது)

விளக்கம் : பலப்பல பேசிப் பயனென்ன? அழிவுறும் உலக ஆசாபாசங்கள் வேறு; அழிவற்ற பேரின்பம் வேறு என்று பேதம் காணவொட்டாமல் ஒரு திரை மறைக் கிறது.

சுருக்கம் : அறியாமையே மனத்திருளை வளர்த்துப் பேணுகிறது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

7. ஆணவ மலம் இல்லை என்று வைத்துக் கொள்ளு வோம். அப்படியானால், அதற்கென்ன மறுமொழி?

ஆணவ மலம் இல்லை என்றால், பிறப்பு-இறப்புத் துன்பம் வருவானேன்? அதுவே ஆன்மாவின் ஒரு பகுதி என்றால், மலம் அழிந்தால், ஆன்மாவும் அதனுடன் அழியும்.

இருள் இன்றேல் துன்பென் உயிரியல்பேல் போக்கும்
பொருள் உண்டேல் ஒன்றாகப் போம் (III : 27)

(போக்கும் பொருள் உண்டேல்-ஆணவ மலத்தைப் போக்கத் தக்கதான திருவருள் உதிக்கும் காலத்தில்)

விளக்கம் : மலம் இல்லை என்றால் நாம் காணும் இடர்ப் பாடுகள் ஏன்? துயரங்கள் ஏன்? இடுக்கண்கள் ஏன்?

இறைவன் திருவருட் கொண்டு இம்மலத்தை அழித்தால், அம்மலத்தினைச் சார்ந்த ஆன்மாவும் அழியும்.

சுருக்கம் : ஒரு குறிப்பிடப்பட்ட, அடையாளம் காட்டக் கூடிய மலம்தான் ஆணவம் என்று பொதுவாக, மொத்தமாகக் கூறப்பட்டுள்ளது என்பவரது வாதத்திற்கு எதிரடி இது.

8. மலம் ஒரு காலத்தில், எப்போதோ, எக்காரணம் பற்றியோ வந்ததோ என்றால்? —இதற்கென்ன பதில்?

எப்போதோ ஒரு காலத்தில் ஆணவ மலம் தோன்றிற்றென்றால், முன்பு பரிசுத்தமாக இருந்த ஆன்மாக்களை இது பற்றுவது எப்படி? அப்படியே வைத்துக் கொண்டாலும், மோக்ஷநிலை வரும்போதும், இது திரும்பி வந்து பற்றாது என்று கூறுவது எங்ஙனம்?

ஆசாதியேல் அணைவ காரணம் என் முத்திநிலை
பேசா(து) அகவும் பிணி (III : 28)

விளக்கம் : ஆணவம் தோன்றிற்றென்றால், அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமில்லையா? வெள்ளைத் துணியில் கறைபடுகிறது; கண்ணாடி தூசுபட்டு மங்கிப் போகிறது; இதுபோல. கரையைத் துடைத்து நீக்கினாலும், கண்ணாடியில் தூசை அகற்றினாலும், அவை மறுபடி வந்து சேரா என்பது என்ன, எத்தனை நிச்சயம்? கேடு பிறந்த கதையே (origin of the evil) முக்கியம்.

சுருக்கம் : ஆணவத்துக்குப் பிறந்த கதை ஒன்று உண்டு என்று விவாதிப்பவர்களுக்கு இது ஒரு மறுமொழி.

9. இம்மலம் தான் நீங்காதா?

இருள் மேலிட்டபோது, விளக்கு மின்மினிப் பூச்சிகளுக்கு இடங்கொடுக்காமல் இருக்குமா? அதுபோல, ஆன்மாவை ஆணவ மலம் ஒரு காலமும் விட்டு நீங்காது.

ஒன்று மிகினும் ஒளி கவராதேல் உள்ளம்
என்றும் அகலா(து) இருள் (III : 29)

(ஒன்று மிகினும்-பூத இருள் மேலிட்ட காலத்தில், ஒளி கவராதேல்-விளக்கு மின்மினிக்கு இடங்கொடாமல் இருந்திருந்தால்)

மொ. பெ. கு:

விளக்கம் : வேறு விளக்கம் தேவை இல்லை. திருவள்ளுவரின் கூற்று இங்கு நோக்கற்பாலது. 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில்அவர் கூறுவார்.

'' பொருளல்ல வற்றைப் பொருளென்(று) உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு'' (அதிகாரம் 36—351)

பொருள் : மெய்ப்பொருள் அல்லாதவைகளை, மெய்ப் பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால், சிறப்பில்லாத துன்பப்பிறவி உண்டாகும்.[4]

10. மாயையே மறைக்கிறது; ஆணவ மலம்—அறியாமை— அல்ல என்று கூறுபவர்களுக்கு உமது மறுமொழி?

இருள் கவ்விக் கொண்டிருக்கிறது. இந்த இருள் நீங்குமளவும், விளக்கேற்றி வைத்தால், அதன் ஒளி நமக்கு உருவங்களைக் காட்டிக் கொடுக்கின்றது. அதுபோல, இருளே ஆணவ மலம்; மாயையே நாம் செய்வித்த செயற்கை விளக்கு.

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து (III : 30)

---

4. டாக்டர் மு. வரதராசனார் உரை; (முன் குறிப் பிடப்பட்டது.)